273

ஜகன்மோகன

273
11 MAY 1942
MADRAS

அ 2 ணா
ஏப்ரல் '42
பங்குனி மீ

வை. மு. கோதைநாயகி அம்மாள்

183066

க்ஷேம லாபங்கள்

நமது மோகினியின் புதிய உருவத்தைக்கண்டும், விசேஷ எழுத்தாளர்களின் அழகிய கட்டுரைகளைப் படித்தும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் புகழ்மொழிகளும், ஆசிகளும் தமது மனப்பூர்வமான அன்புடன் நேரிலும் எழுத்து மூலமாயும் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளில் சிலவற்றை இப்போது பிரசுரித்திருக்கிறேன். அவர்கள் எல்லோருக்கும் எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

"க்ஷேமலாபம் இரண்டு மாதமாக ஏன் வரவில்லை?...பக்ஷண வகைகள் காணப்படவில்லையே!...பாலர் பகுதி ஏன் போடக்கூடாது?...வனிதாமண்டலத்தில் மங்களத்திற்கும் கல்யாணிக்கும் ஓய்வு கொடுத்துவிட்டீர்களா? சினிமா விமர்சனமே நின்றுவிட்டதே!" என்றெல்லாம் பல பேர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரே ஒரு பதில்தான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது பேப்பர் பஞ்சந்தான் காரணம். வேறு ஒன்றுமில்லை. நம் தேசத்திற்கும் ஆண்டவனருளால் நற்காலம் பிறந்து பேப்பர் முன்மாதிரி கிடைக்கும் சந்தர்ப்பம் வந்தவுடனே மோகினியின் பக்கங்களை அதிகப்படுத்தி அன்பர்களின் குறைகளைத் தீர்த்துவிடுகிறேன்.

15-12-41க்குப் பின் பர்மாவுக்கு அனுப்பிய பத்திரிகைகள் அப்படியே திரும்பிவிட்டதால் ஜனவரி பத்திரிகையிலிருந்து அனுப்பவில்லை. அவர்களுக்கெல்லாம் மோகினி சேரும் நற்காலம் என்று பிறக்குமோ! எப்போது அந்த பிரதேசத்தின் அன்பர்களிடமிருந்து சந்தோஷமான கடிதம் வரப்போகிறதோ!" என்று இரவு பகல் எதிர்பார்க்கிறேன்.

* * * * *

உலகானுபவம் நிறைந்த ஒரு பெரியவர் பின்வருமாறு தெரிவிக்கிறார்:—

"நான் உத்யோகத்தில் இருந்தவரையில் சட்டம் படிக்கத்தான் என் தலையில் எழுதியிருந்தது. பிறகு பென்ஷன் ஆனபிறகு தாய் பாஷையும், சம்ஸ்க்ருதமும் படிக்க வேண்டுமென்று விரும்பினேன். என் குடும்பத்தார் ஏற்கெனவே உங்கள் மோகினியைப் பல வருஷங்களாகப் படித்து வருகிறார்கள். ஒரு தினம் என் நண்பர் வீட்டில் விசேஷத்திற்குப்போயிருந்தேன். அங்கு அவர் மேஜைமேல் 'கலா நிலயம்' என்ற புத்தகம் இருந்தது. பொம்மை பார்க்கும் ஆசையில் அதை புரட்டினேன். பரதநாட்டிய பொம்மையும், கலாதேவியாகிய ஸரஸ்வதியின் பிம்பமும், க்ராமீய தெருக்கூத்தும் என் மனத்தைக் கவர்ந்தன. நான் பரதநாட்டியத்தை ரவிப்பதில் மிக்க ஆவலுள்ளவன். பரதநாட்டியத்தைப்பற்றி என்ன வருகிறதென்று அந்த பக்கத்தைப் படித்தேன். என்னை அறியாது ஏதோ 'காண்டு' என்னை இழுத்தது. முதலிலிருந்து படிக்க ஆரம்பித்தேன். நண்பன் வீட்டில் இருப்பதைக்கூட மறந்துவிட்டதாகவே நினைக்கிறேன். பிறகு புத்தகத்தோடு வீட்டிற்கு வந்தேன். நான் வெகு ஸ்வாரஸ்யமாகப் படிப்பதைக்கண்ட என் மனைவி "இந்த புத்தகந்தான் நம்மிடம் இருக்கே. இரவலுக்குப் போவானேன்?" என்றாள். பிறகு கஸ்தூரீதிலகம், ஆத்மசக்தி, தயாநிதி, புகழ்மாலை, சந்தோஷமலர், உணர்ச்சிவெள்ளம் முதலியன படித்தேன். இப்போது சாருலோசனு படித்து வருகிறேன். என்

ஸ்ரீராமஜெயம்.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

மலர்	விஷு௵ பங்குனி௴	இதழ்
19	ஏப்ரல் 1942	4

வரங் கேட்டல்

நீயே சரணமென்று கூவி—என்றன்
நெஞ்சிற் பேருறுதி கொண்டு—அடி
தாயே யெனக்கு மிக நிதியும்—அறந்
தன்னைக் காக்கு மொரு திறனும்—தரு
வாயே யென்று பணிந்தேத்திப்—பல
வாறு நினது புகழ் பாடி—வாய்
ஓயே னவ துணராயோ?—நின
துண்மை தவறுவ தொரழகோ?

* *

நின்னைச் சில வரங்கள் கேட்பேன்—அவை
நேரே யின்றெனக்குத் தருவாய்—என்றன்
முன்னைத் தீய வினைப் பயன்கள்—இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும்—இனி
என்னைப் புதிய வுயிராக்கி—எனக்
கேதுங் கவலை யறச் செய்து—மதி
தன்னை மிகத்தெளிவு செய்து—என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச்—செய்வாய்.

—பாரதியார்.

11 MAY 1942
183066.

விஷய அட்டவணை

		பக்கம்.
நரைக்கு மருந்து	—"மி. ஸ்ரீ."	2
அனுபவநீதிசாரம்	—வை. மு. கோ.	6
திருப்பதி யாத்திரை 7—வது பகுதி	—வை. மு. ஸ்ரீ.	7
தென்னாட்டு திலகம்	—ஸ்ரீ. ஜானம்மாள்.	9
வனிதா மண்டலம்—பக்ஷணம்	—வை. மு. கோ.	13
ஸ்ரீ கிருஷ்ணாமிர்தம்	—"கற்றுக்குட்டி"	14
விகடவெடிகள்	—"விருச்சிகம்"	16
பங்குனி உத்திரம்	—"குகப்ரியை"	17
தாயின் அன்பு—சிறு கதை	—பத்மாவதி.	21
ஞானதீபம்—(தொடர்ச்சி)	—வை. மு. கோ.	97—128

பி. ஸ்ரீ

நரைக்கு மருந்து

"இதோ ஒரே புட்டியில் குணம்: நரைத்த ரோமம் கறுத்துவிடும்; மாண்டுபோன இளமை மீண்டு வரும் அற்புதமாக! புட்டியின் விலை ஒரே ரூபாய். ஒரு டஜனுக்குப் பத்து ரூபாய்தான். இன்றே இப்போதே பரீட்சித்துப் பாருங்கள். இமயமலை யோகியாரும் பொதியமலைச் சாமியாரும் பன்னெடுநாள் சமாதி கிடந்து பரிசீலனைசெய்து கண்டு பிடித்த பரமரகசியம். பயனில்லையென்று ருஜுப்படுத்துகிறவர்களுக்கு இனும் பத்தாயிரம்" என்றெல்லாம் கொட்டை எழுத்தில் விளம்பரங்களைப்பார்த்திருக்கிறோமல்லவா ? ஆம் !...இதுவிளம்பர மகாயுகம்.

பழைய மருந்து

பழைய காலத்திலும் நரைக்கு மருந்து கண்டு பிடித்தார் ஒருவர். அவர் யோகியுமில்லை; சித்தருமில்லை; சித்த வைத்தியருமில்லை. யோகிகள், சித்தர்கள்முதலானவர்களுடையஇரகசியங்களைத் திருடிக்கொண்டவருமில்லை அவர் பிறருக்குமட்டும் வைத்தியம் செய்யவில்லை. தாமே அந்த மருந்தை உபயோகித்துப் பார்த்தார். அற்புதமாய்ப் பலன் கிடைத்துவிட்டது. அதை இரகசியமாக வைத்துக்கொள்ளவும் விரும்பவில்லை. பரமரகசியத்தைப் பகிரங்க ரகசியமாக்கிப் பணம் பறிக்கும் இரகசியமும் அவருக்குத் தெரியாது!

அந்த வைத்தியரும் தமது அனுபவ வைத்தியத்தை விளம்பரப் படுத்த விரும்பினார். இரண்டாயிரம் வருஷங்களாகிவிட்டன. அவர் அன்று விளம்பரப்படுத்திய அருமையான அந்தப்புட்டி இன்னும் உடையாமல் இருக்கிறது; மருந்தும் கெட்டுப்போகாமல்தான் இருக்கிறது. எனினும் இந்த விளம்பர யுகத்திலும் அந்த விளம்பரத்தை நாம் கண்டுகொள்ள முடியவில்லை.

திருவட்டீச்வரன்பேட்டைத் 'தியாகராஜ விலாச'த்திலிருந்து ஒரு டாக்டர் இன்னும் அதை விளம்பரப்படுத்தித்தான் பார்க்கிறார். எனினும் பத்திரிகைகளிலே கண்ணைப் பறித்துக் காசைப் பறிக்கும் 'நரைக்கு மருந்து'களைப்போல, வேண்டியவர் கண்களில் அது படுவதில்லை.

இதோ பாருங்கள் அந்தப் பழைய மருந்தை, அது வைத்திருக்கும் அழகான சீசாவுடன்:—

"யாண்டுபல வாக நரையில ஆகுதல்
யாங்கா கியர்?' என வினவுதி ராயின்:
மாண்டஎன் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையர்என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்(று) அவிந்(து) அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"

[யாண்டு-ஆண்டுகள். யாங்காகியர் என - யாங்குஆகியர்என - எப்படி ஆயிற்று என்று. வினவுதிராயின்-கேட்பீராயின். மாண்ட-மாட்சியோடு அல்லது மகிமையோடுகூடிய. யான் கண்டனையர்-நான் கருதிய அதனையே கருதுவர். இளையர்-ஏவல் செய்வோர்; வேலைக்காரர். செய்யான்-செய்யாதவனாய். காக்கும்-காப்பாற்றுவான். அதன் தலை-அதற்குமேலே. ஆன்று-நிறைந்து. கொள்கை-அபிப்பிராயம்; லட்சியம்; விரதம்.]

புலவர் மருந்து

இவ்வளவுதானு? மருந்தும் இல்லே; பாட்டிலும் (Bottle) இல்லே. பாட்டல்லவா? மந்திரத்தில் மாங்காய் விழுமா? பழம் பாட்டால் நரை அழிந்து இளமை வருமா? இப்படியெல்லாம் சொல்லக் கூடிய சந்தேகப் பிராணிகளும் இருக்கலாம். ஆனுல் பாட்டிலே என்னதான் இருக்கிறது? பார்க்கலாமே.

இந்த வைத்தியர் ஒரு புலவர்தான். வயது அதிகமாயிருந்தபோதிலும் இவர் தலேயில் மருந்துக்கும் ஒரு நரைமயிர் காணப்படவில்லேயாம். இவரைக் கண்டு ஆச்சரியம் அடைந்த பண்டைக்காலப் பேர்வழிகள், "ஐயா! தங்களிடம் நரைக்கு ஏதாவது மருந்து இருக்கிறதா? அது என்ன? தயவு செய்து தெரிவிக்கவேணும்" என்று கேட்டார்களாம்.

அவரோ 'இதோ!' என்று மருந்து கொடுக்கிறுர். ஆனுல் விலே கேட்கவில்லே. விலேயில்லா மருந்திற்கு விலே கொடுக்கத்தான் முடியுமா? பளிச் சென்று அந்தக் கூட்டுச் சரக்கை அப்படியே காட்டி விடுகிறுர்.

குடும்ப மருந்து

முதலாவது,

'மாண்ட என் மனேவி'

என்கிறுர். "ஓஹோ, அப்படியா செய்தி! மனேவி மாண்டு போனுளா? இனி 'அந்தச் சேலே வாங்கவேணும்; இந்த நகை செய்யவேணும்' என்று ஹிம்ஸிப்பவரில்லாததால், நரையில்லேயோ?" என்று விஷமமாய்ச் சில புருஷர்கள் கேட்கக்கூடும்.

புலவருக்கோ மனேவி இருக்கிறள்; இறக்கவில்லே! அந்த மனேவி இருப்பதால்தான், அவரும் நரையில்லாமல் இருக்கிறுர். 'மாண்ட என் மனேவி' என்றுல் 'மாட்சியோடு கூடிய என் மனேவி' என்றுதான் பொருள். மனேவியின் மாட்சிதானே மனே-மாட்சி? "என் மனேவி நன்ருய்ப் படித்தவள்; நல்ல குணம் படைத்தவள். அறிவு-மாட்சியும் குண மாட்சியுமுள்ள மனே-ராணியிருப்பதால், எனக்கு வீட்டுக் கவலேயே கிடையாது" என்கிறுர்.

அடுத்தபடியாக,

'மக்களும் நிரம்பினர்'

என்கிறுர். "ஐயா! நிறையக் குழந்தைகள் இருக்கிறுர்களா? அப்படியிருந்துமா கவலேயில்லே?" என்று சிலர் அதிசயமாய்க் கேட்கக்கூடும். புத்திர சம்பத்திலும் குறைவில்லாதவர்தான் நமது புலவர். ஆனுல் அந்தக் குழந்தைகளெல்லாம் அறிவிலும் குணத்திலும் நிறைந்திருக்கிறுர்கள் என்பது புலவர் கருத்து. 'தாயைப்போலே பிள்ளே; நூலேப்போலே சேலே' என்பது பழமொழியல்லவா?

மனேவியாலும் குழந்தைகளாலும் கவலேயில்லே நம் புலவருக்கு. இவர் கல்விச் செல்வத்தோடு பொருட் செல்வமும் உள்ளவர். எனவே, வீட்டில் வேலேக்காரர்கள் உண்டு. அந்த வேலேக்காரர்கள் போதுமல்லவா, எஜமானனுக்கு நரை கொடுப்பதற்கு? பொதுவாக வேலேக்காரர்,

"கூலி மிகக் கேட்பார்; கொடுத்ததெலாம் தாம்மறப்பார்;
வேலே மிக வைத்திருந்தால், வீட்டிலே தங்கிடுவார்;

'ஏனடா நீ நேற்றைக்(கு) இங்கு வரவில்லே?' என்றுல்,
பானேயிலே தேளிருந்து பல்லால் கடித்ததென்பார்;

வீட்டிலே பெண்டாட்டி மேல்பூதம் வந்ததென்பார்;
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாளென்பார்;

ஓயாமல் பொய்யுரைப்பார்; ஒன்றுரைத்து வேறுசெய்வார்;
தாயாதியோடு தனி யிடத்தே பேசிடுவார்;
உள்வீட்டுச் செய்தியெல்லாம் ஊர்அம் பலத்(து)உரைப்பார்;
எள்வீட்டில் இல்லையென்றால் எங்கும் முர(சு) அறைவார்.''

இவ்விதமாய்ப் பாரதியார் வருணிக்கும் பேர்வழிகளல்லர் இவர் வீட்டு வேலைக்காரர்கள்.

அவர்கள் எட்டிக்குப் போட்டியாக நடந்துகொள்வதில்லை. இவர் சொன்னதைச் சொன்னபடியே செய்கிறார்கள்—என்பது மட்டுமில்லை. இவர் கருத்தையும் குறிப்பால் உணர்ந்து அப்படியே நடந்துகொள்ளுகிறார்களாம்.

'யான் கண்டனையர் என் இளையரும்'

—அதாவது, நான் கருதிய அதனையே கருதுவர் எனக்கு ஏவல் செய்கிறவர்களும்—என்கிறார் புலவர் பெருமான்.

அரசாங்க மருந்து

மனைவி மக்களாலும் வேலைக்காரர்களாலும் கவலைக்குக் காரணம் இல்லை. எனவே குடும்பக் கவலை கிடையாது. ஆனால் வீட்டுக் கவலை இல்லாவிட்டாலும், நாட்டுக் கவலை இருக்கலாமல்லவா? நம்முடைய தேசபக்தர்களில் எத்தனை பேர் நரை திரை முதலியன அடைந்து விடுகிறார்கள்! இத்தகைய நாட்டுக் கவலையும் கிடையாதாம் இப் பழம் புலவருக்கு. ஏன்?

அரசன் முறையல்லாத செயல்களைச் செய்வதில்லையாம். சொந்த அரசு அல்லவா? பொதுஜன அபிப்பிராயத்தை ஒட்டித் தருமத்திற்கு அஞ்சி நடந்தவந்தான்.

''வேந்தனும்-அல்லவை செய்யான் காக்கும்''

என்கிறார் புலவர்.

'அல்லவை செய்யாதவனுய்க் காத்துவந்தான்' என்று சொல்வதிலுள்ள நயம் கவனிக்கத் தக்கது.நல்லவை செய்து ஜனங்களைக் காப்பாற்றுவதைக் காட்டிலும், அல்லவை செய்து அவர்களுக்கு உரிய சுதந்திரத்தையும் பறித்துக் கொள்ளாமலிருப்பது சிலாக்கியமல்லவா?

'வேந்தனும்...காக்கும்' ஆம்: காவல் செய்வதுதானே இராஜ தர்மம்? இதனால் அரசனைக் காவலன் என்று சிறப்பாகச் சொன்னார்கள். ஆம், ஆம்: அரசன் காவற்காரன்தான்; பொதுஜனமே எஜமானன்! இந்த உண்மையை மட்டும் அரசாங்கம் உணர்ந்துகொண்டால், எவ்வளவு நலமாயிருக்கும்! அப்போது நாட்டுக் கவலையால் நரை ஏற்படுவதற்கு வழியில்லை!

மகாத்மாக்களின் மருந்து

நமது புலவருக்கு வீட்டுக் கவலையும் இல்லை; நாட்டுக் கவலையும் இல்லை. கவலையின்மை மட்டும் போதுமா நரையின்மைக்கு? எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு காரணம் உண்டு என்கிறார். அதாவது எங்கள் ஊரில் பெரியோர் அல்லது சான்றோர் உண்டு என்கிறார்.

''. . . . . அதன்தலை
ஆன்(று) அவிந்(து) அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே!''

என்பது புலவர் வாக்கு. இத்தகைய சான்றோர்களின் ஸத்ஸங்கமே கவலையின்மைக்கும் நரையின்மைக்கும் முக்கியமான காரணம் என்பது கருத்து.

எப்படிப்பட்ட சான்றோர்? கல்வியால் நிறைந்தவர்கள். அறிவு எவ்வளவு உயர்ந்திருக்கிறதோ, அவ்வளவிற்குப் பணிவும் உள்ளவர்கள். கல்வி

யைப் போல் பணிவு; பணிவைப் போல் புலனடக்கம் அல்லது இந்திரிய ஜயம் உள்ளவர்கள், உயர்ந்த லட்சியங்களோடு வாழ்க்கை நடத்துகிறவர்கள். இந்தச் சான்றோரை 'மகாத்மாக்கள்' என்றே சொல்லவேண்டும். 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கை' என்பது மகாத்மாவின் பூர்ண லட்சணம் அல்லவா ?

'மகாத்மா வர்தாவில் இருக்கிறார்' என்று ஆனந்தம் அடைகிறோம். 'சான்றோர் பலர் யான் வாழும் ஊரே!' என்கிறார் நமது பழம்புலவர். ஒரு கிராமத்தில் பல மகாத்மாக்கள் என்றால், அந்தக் கிராமமே சொர்க்கம் அல்லவா ? அவர்களுடைய அறிவுடனும், பணிவுடனும், புலனடக்கம் முதலான லட்சியங்களுடனும் பழகி வந்த பாக்கியசாலியும் அப்படியே வாழ்க்கை நடத்தியிருக்க வேண்டுமல்லவா? அத்தகைய வாழ்க்கையைத் தமது கவிதைக் கண்ணாடியில் பிரதிபலிக்கச் செய்துவந்தவர் இக் கவிஞரென்றும் ஊகிக்கலாம். இப்படிப்பட்ட கவிஞருக்கு நரை எப்படி இருந்திருக்க முடியும்?

இந்நாளில் அறிவையும் பணிவையும் சேர்த்துப் பார்க்க முடியவில்லை. அகந்தைக்கு இருப்பிடமான கல்வியையே பெரும்பாலும் பார்க்கிறோம். புலனடக்கமோ உயர்ந்த லட்சியமாகக் கருதப்படுவதில்லை. "அறிவைக் கொண்டு பொருளைத் தேடவேண்டும்; பொருளைக் கொண்டு போகத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டும்; இவற்றையெல்லாம் வேகமாகச் செய்ய வேண்டும்" என்பது தற்காலக் கொள்கை. 'பொருள், போகம், வேகம்' என்ற மும்மூர்த்திகளையும் தற்கால நாகரிகம் வழிபடுகிறது, பழைய மும்மூர்த்திகளை மகுடபங்கம்செய்து தள்ளிவிட்டு. இம் மூர்த்திகளின் பலிபீடத்திலே வாழ்க்கையை அர்ப்பணம் செய்கிறோம்: அவர்கள் நமக்கு இளமையிலேயே நரை திரை மூப்புத் துன்பங்களை அருளுகிறார்கள்!

இத்தகைய நவநாகரிக வாழ்க்கை வாழ்ந்தவரில்லை, நமது பழம் புலவர். மகாத்மாக்களோடு சேர்ந்து வாழ்க்கை நடத்தியவர். அவர்களுடைய உபதேசமாகிய அமிர்தமே போதாதா, நரைதிரை மூப்புத் துன்பங்களையெல்லாம் ஒழிப்பதற்கு?

கிராம மருந்து

"சான்றோர் பலர் யான் வாழும் ஊரே" என்று சொல்வதால், அந்தக் கிராம வாழ்க்கையே இவரது நரையின்மைக்கு அதி முக்கியமான காரணமென்று சொல்லிவிடலாம். அந்நாளில் கிராமம் என்பது ஒரு பெரிய குடும்பம்தான். இப் புலவருக்குக் குடும்ப வாழ்க்கையும், கிராம வாழ்க்கையும் கவலைகளையெல்லாம் போக்கிவிட்டனவாம்.

இத்தகைய கிராமங்களே பழைய இந்து நாகரிகத்தின் தாயகம். கிராமங்களிலே பிறந்து வளர்ந்த நாகரிகம், அரசர்களால் நகரங்களில் அபிவிருத்தி செய்யப்பட்டது. இத்தகைய நாகரிகத்திலே, கிராமத்தில் இயற்கையுடனும் மகான்களுடனும் உத்ஸாகமாய்ப் பழகிய புலவர் இளமையின் இரகசியத்தைக் கண்டு பிடித்துவிட்டார்!

நல்ல மருந்து

அன்பர்களே! இனி 'இந்தப் புலவர் யார் ? இவர் ஊர் எது ?' என்று தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களல்லவா ? நல்லது: இவர் 'பிசிர்' என்னும் ஊரைச் சேர்ந்தவர்: இவ்வூர் பாண்டிநாட்டில் ஒரு கிராமம். இந்த ஊரைத்தான் இவர் இப்படிச் சிலாகித்துப் பாடியிருக்கிறார். தமிழும் தமிழ்நாகரிகமும் விளைந்த இவ்வூரில், இளமையின் இரகசியமும் விளைந்துவிட்டது!

ஊரின் பெயரே விசித்திரமென்றால், புலவரின் பெயரோ அதி விசித்திரம்! இராமசாமி, கிருஷ்ணசாமி, மாடசாமி, கோவிந்தசாமி, சிவசாமி முதலான தற்காலப் பெயர்களைப்போல் இல்லை. அருணாசலம், சோணாசலம், வேங்கடாசலம் முதலான பெயர்களைப்போலவும் இல்லை. இப் பழம்புலவரின் பெயர் ஆந்தையார். பிசிர் என்ற ஊரைச் சேர்ந்தவரானதால் 'பிசிராந்தையார்' என்று சொல்லுகிறார்கள்.

பெயர் எப்படியிருந்தால் என்ன ? இவர் சொல்லும் மருந்து நல்ல மருந்து; உண்மையாகவே நரைக்கு மருந்துதான். தற்காலத்தில் 'நரைக்கு மருந்து' என்று பிரமாதப்படும் மருந்துகள் பெரும்பாலும் நரையை உண்டாக்கும் மருந்துகள்; அல்லது நரையை அதிகப்படுத்தும் மருந்துகள்! பிசிராந்தையாரின் மருந்தே நரையைத் தடுக்கும் மருந்து; இளமையைக் கொடுக்கும் மருந்து; காலம் கண்ட மருந்து.

நரையில்லாமலே மூப்பு வந்து விடுவதும் உண்டு. எத்தனை வாலிபர்கள் இளங் கிழவர்களாயிருக்கிறார்கள்! வயது முதிர்ந்த நிலையிலும், நரை வந்த நிலையிலும் இளமையுடன் இருக்கலாம். ஆம்: அகத்திலே இளமையுணர்ச்சியுடன் இருக்கலாம்; முகத்திலும் வாலிபக் களையுடன் இருக்கலாம். ஆனால் பிசிராந்தையாரின் அந்தப் பழைய மருந்துதான் உயர்ந்த மருந்து; இன்றும் என்றும் சிறந்த பலன் அளிக்கக்கூடிய மருந்து.

1. உலகத்திற்கு உபயோகமானவர்கள் இறந்தால் 'ஐயோ!' என்று கேட்போரெல்லாம் கண்ணீர் உதிர்ப்பார்கள். குடியைக் கெடுத்துக் குட்டிச் சுவரடித்த புண்யாத்மாக்கள் இறந்தால், "சனி ஒழிந்ததா! இனிமேல் குடி கெடுக்கமுடியாதல்லவா?" என்றுதான் சொல்வார்கள்.

2. 'கேடுவரும் பின்னே! மதிகெட்டுவரும் முன்னே!' என்கிற பழமொழியை அறிந்தும் சிலர் தன் தலைக்குக் கேட்டைத்தானே விலைக்கு வாங்கும் விதியமைகிறது. இதைக் காலக்கூத்து என்பதா! க்ரகதோஷமென்பதா?

3. பிறரிடம் உள்ள வஞ்சத்தினால் அவர்களை அடியோடு கெடுத்துவிட வேண்டும் என்ற அசுர எண்ணத்தினால் கெடுத்துவிடலாம். கெடுத்துவிட்ட சந்தோஷத்தில் உள்ளமும் மகிழலாம். ஆனால், இந்தச் செய்கையைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஆண்டவன் இச் செய்கைக்கு ஏற்றபடி கத்தியைத் தீட்டிக்கொண்டிருக்கிறான் என்பதை மறந்துவிடமுடியுமா ?

4. அதிர்ஷ்டம் என்பது ஒரு தனி சக்தி. மாயாவி என்பதில் அதையும் சேர்க்கலாம். பட்டினத்திற்கு வருவதற்கே பிடிக்காது இருக்கும் மனிதர்களையும் அதிர்ஷ்ட தேவதை பிடித்து இழுத்து ஸ்வீகரித்துக்கொள்வதோடு பட்டினவாஸத்திலேயே இருக்கும்படிக்குச் செய்துவிடுகிறாள். மாதாமாதம் வரும்படி பெருகும்போது ஆசையும் பெருகுமல்லவா !

—வை. மு. கோ.

7

"எடா கூடத்திற்கு இடம் எது?" என்று ஒருவர் கேட்க "அதோ போகிறானே, அவன் தலைமேல்தான்" என்று மற்றவன் பதில் சொன்னானும் என்று ஒரு கதை சொல்லுவதுண்டு. அது எனக்கு ஞாபகத்திற்கு வரும் சந்தர்ப்பம் அன்று நேரிட்டது. இரு அரட்டைப் பெரியார்கள் ஷை புஷ்கரணியில் ஸ்நானம் செய்துகொண்டே பேசிக்கொண்டிருந்தது எங்கள் செவியில்பட, அதைக் கூர்ந்து கவனிக்கலானோம். அது பின் வருமாறு:—

ஒருவன்:—"ஏனய்யா! இந்த குளத்திற்கு வேங்கடசீனையென்று என் பெயர்?

மற்றவன்:—திருவேங்கடம் என்ற இந்த மலைமேல் உள்ளதால் இதற்கு இந்த பெயர்.

முதல்வன்:—திருவேங்கடம் என்று ஏன் இந்த மலைக்குப் பெயர்? ஏழுமலையென்றுதானே சொல்வது வழக்கம்?

ம:—திருவேங்கடமுடையான் என்று ஸ்வாமிக்குப் பெயரானதால் இந்த மலைக்குத் திருவேங்கடமென்று பெயர். இது தெரியாதா?

மு:—அப்படியில்லை அது. இந்த மலைக்கு திருவேங்கடமென்ற பெயருள்ளதனால்தான் இதில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிக்கு திருவேங்கடமுடையான் என்று பெயர். நீர் தலை கீழாய்ச் சொல்லிவிட்டீரே. "திருவேங்கடம்" என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம்?

ம:—அதுதான் அப்பவே சொன்னேனே. அது இந்த மலையின் பெயரென்று!

மு:—ஏன் அந்தப் பெயர் என்றதற்குப் பதிலைக் காணோமே?

ம:—பதிலென்ன விருக்கிறது? ரொம்ப காலமாக அதே பெயரைக் கூப்பிட்டு, அது வழங்கிவிட்டதால் அதுவே நிலைத்துவிட்டது.

மு:—அந்தப் பெயரை ஏன் முதல் முதலில் கூப்பிடவாரம்பித்தார்கள்.

ம:—அதற்கு அவர்களையல்லவா போய் கேட்கவேண்டும்? என்னைக் கேட்டால்? உனக்கு "அழகர்" என்ற பெயரை ஏன் வைத்தார்கள். அதன் அர்த்தம் என்ன? இதைப்போலல்லவா இருக்கிறது உன் கேள்வி?"

* * * * *

இவ்வாறாக அவ்விருவரும் அளந்துகொண்டிருந்தது ஒருபுறம் தமாஷாகவும், ஒருபுறம் அருவருப்பாயுமிருந்தது. "திருவேங்கடம் என்ற வார்த்தைக்கு சரியான அர்த்தம் தெரியாத அந்த மனிதன் சகலமும் தெரிந்ததுபோல பாவனை செய்து எப்படி அரட்டையடிக்கிறான் பார்த்தீரா" என்று மெள்ள சொன்னார் ஸ்ரீ. அத்ரியார். "வேங்கடம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாது ஏன் இப்படி அளந்துகொண்டே போகிறீர்?" என்று வாய்விட்டுக் கேட்டுவிட்டார். ஸ்ரீ. வேங்கடம். முன்பின்னறியாத ஒருவரிடமிருந்து வெளிப்பட்ட கேள்வி ஒரு ஆச்சரிய பாணமாயமைந்தது

அவ்விருவர் முகபாவத்தினின்றும் வெளிப்பட்டது. "தெரியாததைத் தெரிந்ததுபோல் பாவிப்பதுதானே இவ்வுலக வழக்கம்?" என்று அழகர் பக்கபலத்திற்குவந்தார். இது பொறுக்குமோ அவரது நண்பர்க்கு? "ஒருவர் ஒன்று ஆரம்பித்தால்கூடவே ஒன்றுக்குப்பத்தாகசொல்வதுதானே இவ்வுலக வழக்கம்?" என்று தனது பதிலை மண்டையிலடித்தமாதிரி தெரிவித்தார்.

"வேங்கடம் என்றால் சகலவிதமான பாபங்களையும் போக்கி, இன்னல்களைத் தீர்த்து புண்ணியத்தை யளித்து மோக்ஷத்தையும் கொடுப்பது என்று அர்த்தம். உண்மையான பக்திச்ரத்தையுடன், முழு நம்பிக்கையுடன் எவன் தன்னை யணுகுகிறானோ அவனுக்கு மோக்ஷத்தைத் தருவது இம் மலையின் புராதன மேன்மை. அப்பேர்ப்பட்ட வேங்கடத்தே ஆட்கொண்ட ஸ்ரீநிவாஸருக்கு திருவேங்கடமுடையான் என்ற திருநாமம் ஏற்பட்டது" என்று உபன்யஸித்தார் ஸ்ரீ. வேங்கடம்.

* * * * *

"இவர் யாரோ! இவர் சொல்லி நாம் கேட்பதா?" என்ற மனப்பான்மை பலருக்கு உண்டு. அந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்களோவென்றுதான் அவ்விருவரையும் சந்தேகித்தோம். "ஸ்தல புராணத்தைப் படித்தால் முழு விவரமும் தெரியவரும்" என்று சொல்லிக்கொண்டே அவர்கள் வெளியேறினார்கள். இதற்குள்ளாக எங்கள் ஸ்நானமும் முடிந்தது.

"இம்மாதிரி வரண்டு கிடக்கும் சமயம் வந்தோமே! புஷ்கரணி நிரம்ப தீர்த்தமிருக்கும் சமயம் நாம் வரும்படியாக எப்போது அனுக்ரஹம் செய்யப்போகிறானோ பகவான்" என்று சொல்லிக்கொண்டே கரையேறினோம்.

* * * * *

"குழந்தையின் தலையில் நிறைய சந்தனத்தைத் தடவுங்கள்; அப்போதுதான் குளிர்ந்து இருக்கும். புது உடை உடுத்தி நெற்றிக்கிட்டு குழந்தையை இப்போதே கோவிலுக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றார் ஸ்ரீமான் வாத்யார் ஸ்வாமி.

"மொட்டையடிப்பதற்குமுன்பு குழந்தையின் முகம் இருந்தது ஒரு தனி அழகு. இப்போதுள்ள தோற்றமும் அழகாகத்தானிருக்கிறது. எல்லாம் அந்த பகவானின் லீலைதானே! அவரேதான் குழந்தைக்கு தலைவாறி சிங்காரம் பண்ணும்படிச் செய்கிறார். இன்று மொட்டைக்கும் அவரேதான் காரணம். அவர் இடும் ஆக்ஞைப்படி ஆடும் பொம்மைகள்தானே நாம்! மொட்டையடிக்கும்போது 'வீர்' என்று குழந்தையை அழச் செய்ததும் அவரே! இப்போது தலையைத் தடவித் தடவி 'ஒன்றுமில்லையே' என்று கையை விரித்துச் சிரிக்கச் செய்வதும் அவரேதான்! நம்மால் என்ன இருக்கிறது?" என்றெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் தோன்றியது.

இதர அலுவல்களை முடித்துக்கொண்டு சந்நிதிக்குப் புறப்பட்டோம். அப்போதிருந்த மனோநிலைமையை விவரிக்க இயலாது. ஏழுமலையானை தரிசிக்கப்போகிறோமே என்கிற ஆனந்தம். பகவான் கிருபை புரியவேண்டுமே என்ற பிரார்த்தனை. நன்றாக சேவை கிடைக்கவேண்டுமே என்ற ஆர்வம். நம்மையறியாது செய்துள்ள பாபங்களை மன்னிக்கவேண்டுமே என்ற வேண்டுகோள். இவ்வாறாகப் பல உணர்ச்சிகளுடன் அடிமேலடிவைக்க ஒருவிதமான புது உணர்ச்சி—பக்தியும் பயமும் கூடிய நூதன உணர்ச்சி—தோன்றலாயிற்று. "கோவிந்த தாமோதரா நாராயணா!" என்று மனத்திற்குள் பஜிக்கவாரம்பித்தோம்.

—தொடரும்.

தென்னாட்டுத் திலகம்

ருக்மிணி லக்ஷ்மீபதி

ஸ்ரீ. ஜானம்மாள்

நமது பாரதநாட்டின் சரித்திரத்தைப் படிக்கும்போது நமக்கு இயற்கையாகவே ஆர்வமும் ஆனந்தமும் நமது உள்ளத்தில் உதிக்கின்றனவல்லவா? புராணம், இதிகாசம், சென்ற காலம், நிகழ்காலம் முதலியவைகளில் நமது புனிதமான நாட்டில் அரும் தியாகிகளும், வீராங்கனைகளும், கணக்கில்லாமல் இருந்துகொண்டிருக்கும், நம்மைக் குறித்து அகராதியில் ''அபலை'' என்று குறிப்பிட்டு எழுதியிருப்பதின் கருத்து யாதோ! புராணப்பெண்மணிகளை எடுத்துக்கொண்டால் கார்கி, மைத்ரேயி, த்ரௌபதை, சாவித்திரி முதலிய ரத்னங்கள் போதும். சரித்திரத்தை எடுத்துக்கொள்வோம். ராணி ஜான்ஸியாய், துர்காவதி, லக்ஷ்மிபாய், சம்யுக்தா, பத்மினி, மங்கையர்க்கரசி கண்ணகி முதலியவர்களைக் குறிப்பிடலாம். இப்பொழுதும் அப்படிக்கொத்த சிறந்த ரத்தினங்கள் நமது நாட்டினில் ப்ரகாசமாய் விளங்கிக் கொண்டுதானிருக்கிறார்கள். ஏற்கெனவே நமது தேசத்து மூன்று திலகங்களின் சரித்திரங்களை 'மோஹினி'யில் படித்து இன்புற்றிருக்கிறீர்கள்.

தென்னாட்டுத் திலகமாய் விளங்கும் நமது ருக்மிணி லக்ஷ்மீபதி அவர்களைப்பற்றி எழுதும்படி நமது பத்திரிகை ஆசிரியர் சொல்லியபோது எனக்குண்டாகியசந்தோஷமும் உத்ஸாகமும்கூறவேமுடியாது, கரைபுரண்டது. ஏனெனில் நமது தலைவியவர்களிடம் என்னைவிட ஸ்ரீமதி கோதை நாயகிக்கு அதிக பழக்கமும் சினேகமும் உண்டு. ஆதியில் நமது தலைவியவர்களும் (மோகினியின் ஆசிரியை) வை. மு. கோ. அவர்களும் தங்கள் தங்கள் பிறந்தகமாகிய திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் ஒரே வாடையில் வசித்தவர்கள். நம் தலைவியவர்களைப்பற்றி வை. மு. கோ. அடிக்கடி பழையகால விஷயங்களை என்னிடம் கூறக்கேட்டிருக்கிறேன். அத்தனைப்பழக்கம் சிறுபிராயம் முதல் இருந்தும் அந்தம்மையாரைப்பற்றி என்னை எழுதும்படியாகச் சொன்னதில் நான் சந்தோஷப்படாமலிருக்கமுடியுமா? அவர்களே எழுதினால் ஆதிகால நினைவுகளைக்கூட எழுதியிருக்கலாம். நம் தேச சரித்திரத்தில் ஓர் வீராங்கனையாயும் தனித்தவாழ்க்கையில் ஒப்பற்ற சகோதரியாயும் விளங்குபவரான தலைவியைப்பற்றி எழுதும் பாக்யம் எனக்குக் கிடைத்ததே என்று பரம த்ருப்தியுடன் எழுத முன்வந்தேன்.

உதாரணப் பெண்மணி

படித்தவர்களென்றால் அவர்களிடத்தில் நமக்கு ஓர்விதமான அலாதி ஆசையும், மதிப்பும் ஏற்படுவது சகஜம். முப்பது அல்லது முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு B. A., பரீக்ஷையில் தேறிய ஒருபெண்மணி என்றால் ஆச்சரியமும் அற்புதமுமாகவே கொண்டாடி மதிக்கப்பட்டு வந்தது; ஆனால் இப்பொழுது சகஜமாய்விட்டது. ப்ரமிக்கப்பட்ட அக்காலத்தில் B. A., டிக்ரி வாங்கியவர்களில் முதல் தாம்பூலம் பெற்ற—அதிலும் ப்ராமண குலத்துதித்த—பெண்மணி நமது தலைவி ருக்மிணி லக்ஷ்மீபதி அவர்கள். அவர் மிக்க செல்வவந்தரான வக்கில் ஸ்ரீ. ராமராவ் அவர்களின் பேத்தி யாவர். அவரின் வாழ்க்கை மிக்க நாகரிகத் துறையில் தாய் தந்தையர்களினால் கொண்டுவரப்பட்டது. "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற படி அக்காலத்தில் நமது சமூக வாழ்க்கையை சீர்திருத்தி உலகத்தின் மாறு தலைக் காட்டிய உத்தமியாவர். "தாசிக்குத்தான் சங்கீதம் உரிமை; குடும் பத்துப் பெண்களுக்குத் தகுதியில்லை" என்று இருந்த தப்பெண்ணத்தைத் தகர்த்து காலஞ் சென்ற வீணை தனம்மாளிடம் தேர்ச்சி பெற்றவர்.

படிப்பு, பாட்டு விஷயமாக எனது தாயார் என்னிடத்தில் ருக்மிணி லக்ஷ்மீபதி அவர்களின் திறமையைப்பற்றிப் புகழ்வதுண்டு. அப்பொழுது அவர்களைப் பார்க்கவேண்டுமென்ற ஒரு ஆவல் எனது மனதில் எழும்பிய துண்டு; ஆனால் எனக்கு சென்னையில் நிறைவேறவில்லை. எர்ணாகுளத்தில் அங்கு திவானாக இருந்த ஸ்ரீ பட்டாபிராமராவ் அவர்களின் அரண்மனையில் தான் எனக்கு அவரின் சந்திப்பு முதன் முதலாக ஏற்பட்டது அச்சமயம் அவரது வீணையைக்கேட்டு ஆனந்திக்கும் பாக்கியமும் பெற்றேன்.

சமத்ருஷ்டியும் சளைக்கா ஊக்கமும்

அவருக்கு ஆந்திர, தமிழ் என்ற பேதபுத்தி இல்லை. பொதுவாக அவ ருக்கு ஜாதி மதத்தில் அவ்வளவாகப் பற்றுதல் கிடையாது. விசாலமான நோக்கமுடைவர். ஹிந்து சமூகம்ஒன்றே, எல்லோரும் ஒரேமதத்தினர் என்ற கொள்கையைஉடையவர். படாடோபம், ஆடம்பர வாழ்க்கையை வெறுக்கும் சுபாவமுடையவர், சமதரிசி, தயை, தாக்ஷிண்யம் அதிகம். ஜனங்களுடன் பேதமின்றிப் பழகும் குணமுள்ளவர். தான் ஒரு தலைவி என்பதை அறவே மறந்துதன்னை ஹிந்துஸ்தான்சேவகி என்றே கருதும் தூய மனதுடையவர். பெண்களும், புருடர்களுக்கு நிகர்தான் என்பதை உலகில் நிலைநாட்டப் பிறந்தவர். அதற்காக தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்து நாட்டின் சேவையில் ஈடுபட்டுழைக்கிற உண்மையான தியாகி. பிடிவாத குணம் படைத்த சீமாட்டி. எந்த வேலையில் புகுந்தாலும் பின் வாங்காது அஞ்சா நெஞ்சுடன் போராடும் சுபாவமுடையவர். மகாத்மா காட்டிய அஹிம்சா தர்மத்தை மேற்கொண்டு, அடிமை இந்தியாவுக்கு சுதந்திர வழிகாட்டும், ஒரு தூதகன்னியாக இருந்துகொண்டு, இந்தியாவின் இராஜீய, சமுதாயத் துறைகளில், ஈடுபட்டு அவ்வம்மையார் தீரமாக சேவை செய்துகொண்டு வருகிறார்.

'மிஸஸ் லக்ஷ்மீபதி' ட்ரேட் மார்க்

காதி வஸ்திராலயத்திற்குப் போனால் கனமானதும் கருத்த கலர்களில் உள்ளதுமான புடவைகளை காரியாலயத்தினர் ப்ரத்யேகமாகஎடுத்துவைத்து விட்டு 'மிஸஸ் லக்ஷ்மீபதியின் புடவை. இதுமாதிரி கலரில் வேணுமானால் போட்டுத் தருகிறேன்' என்று சில புடவைகளுக்கு 'ருக்மிணி லக்ஷ்மீபதி புடவை' என்றே முத்திரை போட்டுவிடுவார்கள். அதேபோல் அவரும்

கதர் கடைக்குச் சென்றால் அங்கு இருப்பதற்குள் கனத்த கதர்புடவை யாகத்தான் எடுத்துக்கொள்வர். சோம்பலுக்கு இடம் தரார். எப்பொழுதும் இராஜீய சம்பந்தமான புஸ்தகங்களைப் படிப்பதில்தான் அவருக்கு ஊக்க மதிகம். படிப்பதோடுமட்டும் நின்றுவிடுபவர் அல்ல. சகலமான க்ருக க்ருத் யங்களிலும் தேர்ச்சி பெற்றவர். சமைப்பதில் அவர் சமர்த்தர். வேலூர் சிறையில் அவருடன் ஆறுமாத காலம் நாங்கள், (ஸ்ரீமதி கோதைநாயகி அம் மாள் உள்பட) இருந்த ஆனந்த நாட்களை நினைக்க இப்போதும் என் மனத்தில் சந்தோஷமும் இன்ப அலையும் மோதுகின்றன. அந்த நாட் களின் வரலாற்றை மட்டும் விவரிப்பதென்றால் பல கட்டுரைகள் எழுதலாம்.

சிறைச்சாலையா! சொர்க்கப் பதவியா

நாங்கள் அந்த ஆறுமாதகாலத்தையும் சொர்க்கபோகத்திலிருப்பவர்கள் போல் கழித்தோம். ருக்மிணி லக்ஷ்மீபதியை நாங்கள் மம்மி (அம்மா) என்று தான் எல்லோரும் அழைப்போம். இந்த மம்மி என்கிற இனிமையான பெயர் யூத்லீக் அங்கத்தினர்கள் ஏற்கெனவே அவருக்கு வழங்கியதாகும். நாங் களும் அவரை அவ்வாறே அழைக்க உரிமை பெற்றோம். எங்களுக்கு மட்டுமின்றி ஆந்திர;மலையாள, கன்னட, சௌராஷ்ட்ர முதலிய தேசத்துப் பெண்மணிகளுக்கும் அவர் மம்மியாகவே விளங்கினர். அவர் எங்களுக் கெல்லாம் தாயாயும், தலைவியாயும் இருந்து எங்களை மகிழ்வித்து நடத்திய ஓர் சிறப்பை இச்சிறு கட்டுரையில் சுருக்கிச் சொல்லவே முடியாது.

நள பாகமும் நாகரிகமும்

நாங்கள் நான்கு, நான்கு பேர்களாக ஒவ்வொரு தினத்திற்கும்(கோதை நாயகிநீங்கலாக) முறை வைத்துக்கொண்டு சமைப்பது,பரிமாறுவது,காய்கறி நறுக்குவது. முதலியன செய்வோம். அதிர்ஷ்டவசமாக எனது முறையில் ஸ்ரீமதி லக்ஷ்மீபதியின் பேர் பதிந்துவிட்டது. வெகு நேர்த்தியாக சமைப் பதில் பரிசாரகர்களைகூட ப்ரமிக்கச் செய்துவிடுவார். மம்மியே இன்று சமைத்துவிட்டார் என்றால் ஜெயிலில் சாப்பாட்டுக்குப் போட்டிதான். கடைசியில் பாத்திரத்தைச் சுரண்டும் நிலைமைகூட உண்டாகிவிடும். ஊறு காய் வகைகள், கரி வகைகள், குழம்பு, கூட்டுவகைகள் செய்வதில் மம்மி பக்காப் பேர்வழி.

எல்லாவற்றிலும் முதல் தாம்பூலம்

தமக்குள்ள பல வேலைகளிலும் சிறிது ஓய்வு உண்டாக்கிக்கொண்டு ஹிந்தி பாஷையைப் படித்து உயர்தரப் பட்டமும் பெற்றிருக்கிறார். நல்ல அருமையான சங்கீதம் பாடுவதையோ, வீணை வாசிப்பதையோ கேட்டால் மம்மி அப்படியே தடை கட்டிய நாகம்போல் நின்று ஆனந்தமாக அனுப விப்பார். அதேபோல் சங்கீதம் பாடுவதிலும், வீணை வாசிப்பதிலும் முதல் மார்க்குத்தான்.என் சகலத்திலும் அவர் முதல்மார்க்குத்தான் வாங்கியிருக்கிறார். பிராமண வகுப்பில் தைரியமாகப் படித்து B. A. பட்டம் பெற்றது,இந்தியாவே, அதிலும் தென்னாடே, ப்ரமிக்கும்படி முதல் முதல் சிறைச்சாலைக்குச்சென்றது,டெபுட்டி ஸ்பீகராக இருந்து சேவை செய்தது ஆகிய எல்லாவற்றிலும் முதல் தாம்பூலந்தான்.

ஸ்ரீமதி லக்ஷ்மீபதியின் மகிமை வெளியில் மட்டுந்தான் என்று நினைக்க வேண்டாம். வீட்டில் தமது அருமைக் குமாரத்திகளையும், குமாரனையும் தேசபக்தியும் உத்தமகுணமும் ஒழுகும்படி அழகாக வளர்த்து நல்ல பழக்க வழக்கங்களை ஊட்டி இல்லாசியாகப்ரகாசிக்கின்றார்.ஆயிரக்கணக்கானவர்கள் அவருடைய உபன்யாஸத்தைக் கேட்டு இன்புற்றிருக்கிறீர்கள். ருக்மிணி

என்கிற பெயருக்கேற்ற உத்தம குணமணியாக விளங்கும் அவரைப்பற்றிச் சொல்வதென்றால் ஒன்றா! இரண்டா!

வெளிநாட்டு ப்ரயாணம்

ருக்மிணி லக்ஷ்மீபதியவர்கள் நமது நாட்டு ஸ்திரீகளின் பிரதிநிதியாக பிரான்ஸ் தேசத்தில் 1926-ல் நடந்த அகில தேச ஸ்திரீகள் மகா நாட்டிற்குச் சென்றார். அங்கிருந்து மேல்நாட்டிலுள்ள அநேக முக்கிய பிரதேசங்களையெல்லாம் பார்வையிட்டும் வந்தார். 39-வது வருஷத்தில் ஜப்பானிய கவர்மெண்டின் கல்வி இலாகா அழைப்பிற்கிணங்கி நம் தலைவி உள்பட சிலர் ஜப்பான் சென்றார்கள். சிலர், தமக்காக ஒரு விஷயத்தை எழுதத் தெரியாவிடினும் பிறரிடமாவது எழுதி, அதை கவுரவமாகத் தாம் எழுதியதுபோல் ரேடியோவில் படித்து இன்புறுகிறதில் த்ருப்தியடைகிறார்கள். ரேடியோவில் பேசுவதென்றால் அத்தனை ஆசை. ஆனால் நம் தலைவியை வெளிநாட்டுச் சுற்று ப்ரயாணத்தில், "தயவுசெய்து எங்கள் ஊர் ரேடியோவில் பேசுங்கள்" என்று தடபுடல் உபசாரத்துடன் கேட்பார்களாம். தற்சமயம் யுத்த வெறியில் தலைவிரித்தாடும் டோக்கியோ ரேடியோவில் நம் தலைவி ப்ரசங்கம் செய்திருக்கிறார்கள். அச்சமயம் மலேயா பிரதேசத்தில் முக்கியமான இடங்களுக்குச் சென்று சிறப்புடன் திரும்பினார்கள். 'சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்பதைக் கேட்கும்போது பெண்ணினத்திற்கே ஒரு பெருமையையும் களிப்பையும் கொடுக்கிறதல்லவா! அதிலும் நம் தலைவி, நம் ஆப்த சிநேகிதையென்ற ஹோதாவில் நினைக்கும் போது உள்ளம் பூரிக்கின்றது.

தங்கக் கம்பி

அவருடைய உயர்ந்த நிலைமைக்கு ஏற்றதுபோல் அவருடைய நயமான வார்த்தையும் குணமும் அவருடைய உயர்ந்த பதவிக்குச் சிகரம் வைத்தது போல் ப்ரகாசித்தன. ஒவ்வொருவரிடமும் அன்பாகப் பேசுவதும், நாம் கேட்பதற்கு வெகு பணிவுடன் பதில் சொல்வதும் ஏதேனும் ஆகவேண்டிய காரியத்தைச் சொன்னால் உடனே செய்து கொடுப்பதும் இதுபோல் பல அருமையான குணங்கள் அவரிடம் பொதிந்து கிடக்கின்றன. உதாரணமாகப் பாருங்கள். 'மம்மீ! ப்ரார்த்தனைக்கு வருகிறீர்களா!...ஆகா! இதோ வருகிறேன்...மம்மி! உலாவ வருகிறீர்களா!...ஆகா! இதோ வருகிறேன்... மம்மி! ஆபீஸில் போய் மேட்ரனிடம்...இவ்விஷயத்தை விசாரிக்கிறீர்களா...ஆகா! இதோ போய் வருகிறேன்'...என்று பெத்த தாயைப் போலும், உடன்பிறந்த பிறப்புபோலும் சொல்லும் அழகேபோதும்.

பணக்காரர் வீட்டு விசேஷங்களுக்கும் சாப்பாட்டுக்குந்தான் போவது. மற்றபடி அலக்ஷ்யம் செய்வது என்ற குணத்துடனிருக்கும் சிலரைப் போலல்லாது மம்மி, எந்த சிநேகிதர்கள் அழைத்தாலும் பிகுவோ, கர்வமோ, அலக்ஷ்யமோ இல்லாது வரும் குணத்தழகு ஒன்றே போதும். ஏழை, பணக்காரர், என்கிற பேத புத்தி கிடையாது. அவருடைய கணவரும், குழந்தைகளும் அவரை ஜெயிலில் பார்க்க வரும்போது மம்மி ஒரு புதிய உத்ஸாகமும் தேஜஸும் ஜொலிக்கப் பிரகாசிப்பார். அப்போது அவர் ஓர் இல்லரசி என்ற பட்டத்துடன் காக்ஷியளிப்பார்.

முதல் சத்யாக்ரக ஸ்திரீ ரத்னம்

1930-ல் மகாத்மா காந்தியவர்கள் சத்தியாக்ரகப்போரை துடங்கிய பொழுது நமது அம்மையார், தம் கணவன், இரண்டு குமாரிகள், ஒரு சிறிய குமாரன் முதலியவர்களைப் பிரிந்து நமது தலைவர்களுடன் சேர்ந்து

கொண்டு வேதாரண்யத்துக்குச் சென்றார். புருடர்களின் நடுவில் அவர் ஒரே ஸ்திரியாக நின்றுகொண்டு வெப்பம், ச்ரமம், ஆகாரம் முதலியவைகளை கவனியாமல் அந்த போரைத் திறமையுடன் நடத்தினார். இந்தியாவிலிருக்கும் ஸ்திரீகளின் சிறையின் கதவை முதல்முதலாகத் தகர்த்து நுழைவதற்கு வழி காட்டியவர், நமது தலைவி ருக்மிணி லக்ஷ்மீபதி அவர்கள்தான். அதன்பிறகு சத்யாக்ரகம் நடந்தபோதெல்லாம் சிறைசென்று சிறப்புற்றார்.

அசையாத தூண்களையும் வீழ்த்திய வீர ரமணி

முறியடிக்கமுடியாதென்றிருந்த ஜஸ்டிஸ் கக்ஷி பிரமுகர்களை படு தோல்வியில் வீழ்த்தித் தான் தேர்தலில் வெற்றிபெற்றிருக்கிறார்.

பல வருஷங்களாக புதுப்பேட்டை கார்ப்பரேஷன் அங்கத்தினராக இருந்த திரு. சுந்தரராவ்நாயுடுவை நமது அம்மையார் எலக்ஷனில் எதிர்த்து எல்லா இடையூறுகளையும், இன்னல்களையும் அஞ்சாமல் சகித்துக்கொண்டு பெருவாரியான ஓட்டுகளினால் வெற்றி அடைந்தார். பிறகு கார்ப்பரேஷனில் (Works Departments) தலைவர் பதவியை ஏற்று வெகு திறமையுடன் நடத்தினார்.

முதலில், பழைய சட்ட சபைத்தேர்தலில் ஜஸ்டிஸ் கக்ஷி ப்ரமுகரான திரு. ரங்கராமாநுஜத்தையும். பிறகு 1937-ல் நடந்த புதிய அஸெம்பிளி தேர்தலில் சென்னையில் ஸ்திரீகளின் தொகுதிக்காக நின்ற (ஜஸ்டிஸ் கக்ஷி) ஸ்ரீமதி. அலமேலுமங்கத்தாயாரம்மாளையும் எதிர்த்துநின்று அவர்களை சுலபமாகத் தோற்கடித்து வெற்றிமாலையை அடைந்தார். சட்டசபைக்குச்சென்று டிப்டி ஸ்பீகர் பதவியை ஏற்றுக்கொண்டார். ஹானரபில் மிஸ்டர் புலுஸு சாம்பமூர்த்திகாரு பலசமயங்களில் உபதலைவிக்கு தலைமைப் பதவிகொடுத்ததைத் திறம்பட நடத்திக் கீர்த்தி பெற்றிருக்கிறார்.

நம் நாட்டில் நம் தலைவியைப்போல் பல பெண்கள் தோன்றி புகழ் பெற்றால் எத்தனை சந்தோஷமாகவிருக்கும்?



மங்களம்:—கல்யாணீ! உன்னைப் பார்ப்பதும் கார்த்திகைப் பிறை பார்ப்பதும் ஒன்றாக இருக்கிறதே. பொங்கலுக்குமுன்பு பார்த்ததுதானே!

கல்யாணி:—ஆமாம் மங்களம்! நான்தான் வாரத்திற்கொருதரம் ஊருக்குப்போய்வரும் அலைச்சலே சரியாயிருக்கிறதே. சாவகாசமாக எங்கு வரமுடிகிறது. இப்போதுகூட, நேற்று இரவு வந்தேன். நாளை பகல் போகிறேன். சித்திரை வருஷப்பிறப்பு வருகிறதே. அதற்கு ஏதாவது புதிய பலகாரம் செய்வதற்குச் சொல்வாயோ, என்னவோ! என்று வந்தேன். என்ன அலைச்சல் போ!

மங்:—காலமே கஷ்டகாலமாயிருக்கிறது. எங்கள் வீட்டிலும் இதே பல்லவிதான். ஏதோ பஸ்காரனும் ரயில்காரனும் கொடுத்து வைத்திருக்கிறார்கள். நம்ம சினேகிதிகள் எல்லோரும் ஊருக்குப்போயிருக்கிறார்கள். இங்கு வந்தால் பொழுதே போகவில்லை. எழுதுவதும் படிப்பதும் எத்தனை

நேரம் முடிகிறது. சோம்பலாகவும் அலுப்பாகவும் போகிறது. வீணாக உட்கார்ந்திருக்கப் பிடிக்கவில்லை. புதிய பக்ஷணமாவது செய்து பார்க்கலாமென்று இரண்டு செய்தேன். அவை வெகு நேர்த்தியாக அமைந்தது. வெகு சுலபமானது, செலவு குறைவு. ருசி அதிகம். மணங்கமழ்ந்தது. பார்வைக்கும் கனிசமாயிருக்கிறது. வாழைக்காயினால் செய்தது.

கல்:—ரொம்ப சந்தோஷம். அதைச்சொல்லு மங்களம்!...

மங்:—வாழைக்காய் ஸொஜ்ஜியப்பம்; வாழைக்காய் குழல்.

வாழைக்காயை பாதியாக நறுக்கி வேக வைத்துக்கொண்டு தோலை உரித்துவிடுவது, உரித்த வாழக்காயை நன்றாக வெண்ணெய்போல் அறைத்துக்கொள்வது, சர்க்கரையை கெட்டியாக பாகு வைத்துக்கொண்டு இந்த அறைத்த விழுதை அந்தப்பாகில் போட்டுக்கிளறி அல்வாவைப்போல் இறக்கிவிடுவது. வறுத்த முந்திரிபருப்பு, பாதாம்பருப்பு துண்டங்களைச் சேர்த்துக் கிளறுவது, ஏலக்காய், ஜாதிக்காய், குங்குமப்பூ, பச்சை கற்பூரம், எல்லாவற்றையும் திட்டமாக சேர்த்துக் கிளறி சிறிய எலுமிச்சங்காய் அளவு உருட்டிக்கொள்வது, சொஜ்ஜியப்பத்திற்கு மைதாமாவு கலப்பதுபோல் கலந்துகொண்டு அதை மெல்லியதாகத் தட்டிக்கொண்டு அதில் பூரண உருண்டையை வைத்து மூடி மீண்டும் பில்லைபோல் ரவுண்டாக வாழை இலையில் தட்டி, அதை நெய்யில் போட்டு நன்றாகப் பொறித்து எடுப்பது. கரகரப்பாயும் மணமாயும் வெகு நன்றாயிருக்கிறது.

அதேபோல் வாழைக்காய் அறைத்த விழுதோடு, உப்பு, மிளகாய்பெருங்காயம் இவைகளை அறைத்துச் சேர்த்துக்கொள்வது, கொஞ்சம் கடலைமாவு, அல்லது அரிசிமாவு, விழுதில் சேர்த்து நெய்யும் கொஞ்சம்விட்டுக் கலப்பது, தேன்குழல், மனஉகப்பு, ஓமப்பொடி, சேமியா...ஆகிய எந்த அச்சிலாவது நெய்யில் அல்லது எண்ணெயில் பிழிந்து கரகரப்பாக எடுப்பது. வேண்டியவர்கள் ஓமங்கூட சேர்க்கலாம். இரண்டு பக்ஷணங்களும் எனக்கு மிகவும் பிடித்திருந்ததம்மா! அன்று எதிர்பாராதவிதமாக விருந்தாளிகளும் வந்தார்கள். அவர்களும் நன்றாயிருக்கிறதென்று ஜமாய்த்தார்கள்.

கல்:—வாஸ்தவமாக, கேட்கும்போதே நன்றாயிருக்கும்போலத்தான் இருக்கிறது. அதையே வருஷப்பிறப்புக்குச் செய்யலாம். சரி! போய்வருகிறேன். மறுபடியும் அடுத்த மாதமே சந்திப்போம். குங்குமம் கொடு.

மங்:—இந்தா...தாம்பூலமும் எடுத்துக்கொள்ளு.

வை. மு. கோ.

கற்றுக்குட்டி

''எவனொருவன் நிச்சலமான மனதுடன் ஸ்ரீமத் பகவத் கீதையை பக்தி சிரத்தையுடன் நித்யமும் ஜபிக்கிறனோ அவன் ஞான சித்தியைப் பெற்று பரமபதத்தையும் அடைகிறன்'' என்று ஸ்ரீ வராஹபுராணத்தில் சொல்லப்பட்டிருந்ததைப்பற்றி சென்ற பிப்ரவரி இதழில் படித்தீர்கள். இது சம்பந்தமாக டி புராணத்தில் இன்னும் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்று இப்போது கவனியுங்கள்.

ஸ்ரீ கிருஷ்ணாம்ருதம்

3

(11) மூன்றிலொரு பாகத்தை தினமும் படிப்பவர் கங்காஸ்நானம் செய்வதாலுண்டாகும் பலனையும், ஆறிலொரு பங்கை ஜபிப்பவர் ஸோம யாக பலனையும் அடைவார்கள். (12) எவனொருவன் நித்யமும் கீதையின் ஒரு அத்தியாயத்தை மிகுந்த பக்தியுடன் படிக்கின்றானோ, அவன் ஒரு கணமாக மாறி ருத்ரலோகத்தை யடைந்து அங்கு வெகு காலம் ஜீவித்திருப்பான். (13) ஒரு ச்லோகத்தில் நான்கிலொரு பங்கை எவன் தினமும் படிக்கிறானோ, அவன் இவ்வுலகத்தில் மானிடனாகவே ஒரு மன்வந்தரகாலம் (அதாவது 71 யுகங்கள்) இருப்பான். (14) எவன் தினமும் பத்து அல்லது ஏழு, அல்லது ஐந்து, அல்லது நான்கு, அல்லது இரண்டு, அல்லது ஒரு, அல்லது அரை ச்லோகத்தைப் படிக்கிறானோ அவன் சந்திர லோகத்தில் பத்தாயிரம் ஆண்டுகள் ஸ்திரமாகவிருக்கும் பாக்யத்தை யடைகிறான்...(15) மகா பாபத்தைச் செய்தவன்கூட ஸ்ரீ கீதார்த்தத்தை தானே படிக்காவிடினும், காதாரக் கேட்பானேயாகில், வைகுண்டத்தை யடைந்து ஸ்ரீ மகாவிஷ்ணுவுடன் சேர்ந்து சந்தோஷமடைகிறான். (16) நித்ய கர்மங்களைச் சரிவர செய்துகொண்டு கீதையின் உண்மை தத்துவத்தைக்குறித்து எவன் சிந்திக்கிறானோ, அவன் 'ஜீவன் முக்தன்' என்று கருதப்படுவான். இந்த தேகத்தை விட்டதும் அவன் பரமபதத்தையே அடைகிறான்...(17) கீதையைப் படித்துவிட்டு, மேலே சொல்லப்பட்டுள்ள கீதா மகாத்மியத்தைப் படிக்காவிடில், கீதையைப் படித்த பலனெல்லாம் வீணாகிவிடுகிறது. இது விஷயமாக எடுத்துக்கொண்ட சிரமம் பயனற்றதாகிவிடுகிறது. (18) கீதையின் மகாத்மியத்தை யுணர்ந்து அதை அப்பியாசிப்பவன் கிடைப்பதற்கு அரிதான பலனை அடைவான்.

கீதையை முற்றிலுமோ அல்லது பகுதிகளாகவோ தினமும் படிப்பதனால் உண்டாகும் பலனைப்பற்றி மேலே கூறப்பட்டதெல்லாம் பிரமிப்பை உண்டாக்குவனவாயிருக்கலாம். 'படிப்பது' அல்லது 'ஜபிப்பது' என்றால் சாதாரணமாக படிப்பதோ, அல்லது திரும்பத்திரும்ப ஜபிப்பதோவென்று அர்த்தமல்ல. மனது ஒன்று நினைக்க உதடுமாத்திரம் கீதையை ஒலித்தால் பிரயோஜனமென்ன? கீதையின் தத்துவத்தை நன்கு உணர்ந்து அதை அனுசரித்து, கீதையையே வாழ்க்கையின் நாதமாகவும், இவ்விருண்ட உலகில் வழிகாட்டும் ஜோதியாகவும் கொள்வதே மேற்படி ச்லோகங்களின் உண்மைப்பொருள். கீதையின் நிழலில் வாழ்க்கையைச் செலுத்துபவனே ஜீவன் முக்தன். சாதாரண நித்ய வாழ்க்கையிலிருந்து, கீதையை அனுசரித்து நடக்கும் உத்தம வாழ்க்கைக்கு மாறும் வழியைக் குறிப்பிடுவதே

ஷ ச்லோகங்களின் நோக்கம். தினமும் கொஞ்சமாக கீதையின் சாரத்தை வாழ்க்கையின் லட்சியமாக இசைப்பதே (கீதையைப் பகுதிகளாகப் படிப்பதால் உண்டாகும் பலன்களை விவரிக்கும்) ஷ ச்லோகங்களின் அர்த்தமென்பதைக் கவனிக்கவேண்டும்.

கீதா பாராயணம் யக்ஞத்திற்கு சமமானதென்றும், அதன் தத்துவத்தைத் தெரிந்துகொள்ளாது பாராயணம் மாத்திரம் செய்பவனும் பகவானை ஆராதித்தவனேயாவான் என்றும் உணர்ந்து நாமும் கீதாபாராயண புண்ணியத்தைப் பெறுதல்வேண்டும்.

அடுத்த இதழ் முதல் கீதா ச்லோகங்களின் அர்த்தத்தைக் கவனிப்போம். 700 ச்லோகங்களையும் படித்தபின்னர், கீதையின் தத்துவத்தைப் பற்றின பல அபிப்பிராயங்களையும் விவரிப்போம். (தொடரும்.)



சின்னான்:—ஏண்டா! அந்தப்பாவி எனக்குச் சேரவேண்டிய ரூபாயை வாயிலே போட்டுண்டானே! அது அவனுக்கு ஜெரிக்குமா!

போன்னன்:—என்னடா பிரமாதம். ஒரு சோடா சாப்பிட்டு விடுகிறான். இது தெரியாதா!

* * * * *

தகப்பன்:—எங்கேடா ஊர் சுத்திவிட்டு தடியனாட்டம் வரே!

மகன்:—அப்பா! இப்ப புரிஞ்சுபோச்சுப்பா! மூணாம்வீட்டுக்குப் போனேன். அந்தமாமா "அந்த தடியனின் மகன் வரான்" என்று சொன்னார். தடியனின் மகன் நானும் தடியனாயிட்டேனா!

* * * * *

உபாத்தியாயர்:—பசங்களா! இந்த மகா யுத்தத்தில் நீங்கள் பயப்படவே வேண்டாம். தைரியமாக இருங்கள். நமக்குக் குறைவே இல்லை.

பையன்:—சார்! நாங்கள் பயப்படாமல்தான் பள்ளிக்கூடம் வந்திருக்கிறோம். நீங்கள்தான் பயந்துகொண்டு மனைவி மக்களை ஊருக்கனுப்பி விட்டீர்கள்.

* * * * *

கணவன்:—ஆருடீ உள்ளே! கதவிடிக்கறது காது கேக்கல்லே...கதவே தெறடீ!

மனைவி:—நான்தான் தூங்கறேன்னு சொல்றேனே அது ஒங்களுக்கு காது கேக்கலேயோ!

தான். வீதியில் கலகலவென்று ஒரு ஜட்கா வந்தது. மாமியாரும் மாமனாரும் இறங்கிவந்தனர். உள்ளே வரவும் பெண்ணின் ரூபத்தைக் கண்டு பயந்து நடுங்கிவிட்டனர். சமாசாரம் மெல்ல தெரியலாயிற்று. கோகுலனோ வாயே திறக்கவில்லை. ரோஹிணி பெற்றோரைக் கண்டதும் இன்னும் ஆக்ராஹத் துடன் கணவனிடம் தான் பிறந்தகம் போவதாகவும், சௌக்யமாகத் தாயாருக்குப் பணம் அனுப்பும்படியும் கூறி மறுநாள் தனக்கிருக்கும் சாமான்கள் அத்தனையும் திரட்டிக்கொண்டு அவர்களுடன் போய்விட்டாள். அவள் சென்றது முதல் கோகுலனுக்கு பெரிய உறக்கமும் விஸனமு மாக இருந்தது. ஆனாலும் தைரியத்தை விடாமல் 'இப்படி கொஞ்சநாள் இருப்பது நல்லதுதான். அம்மாவை அழைத்து வருவோம்' என்று நிச்ச யித்து தங்கையையும் அவளையும் அழைத்துவந்தான்.

கோகுலனின் தாய் மிக்க அடக்கமும் மரியாதையுமுடையவள். செட் டாகக் குடித்தனம் செய்து மிச்சத்தை மகனிடம் கொடுப்பாள். கோகுலன் தன் தங்கையைப் பள்ளிக்கு அனுப்பிவைத்தான். ஒரு வருஷம் கழிந்தது. ரோஹிணியிடமிருந்து ஒரு சமாசாரமும் தெரியவில்லை. கோகுலனும் எழுதவில்லை. தாயார்மட்டும் அடிக்கடி மகனிடம், 'அறியாத பெண் பாவம். நீயும் இப்படி இருக்கக்கூடாது. போய் அழைத்துவா, நான் பழையபடி கிராமம் செல்கிறேன்' என்று கூறுவாள். அவன் பதிலே சொல்லவில்லை.

"நான் இங்கு இருக்கும்வரையில் என் மகன் மனைவியுடன் வாழமுடி யாது. அவள் நாம் இருக்கும்வரையில் வரப்போவதில்லை. ஆகையால் ஏதா வது நல்ல வார்த்தைகளைக் கூறி கோகுலனிடம் விடை பெற்றுக்கொண்டு தான் செல்லவேண்டும். அவன் மனைவியுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவதைக்கண்டு சந்தோஷப்படாது ஒண்டிக்கட்டையாக அவனை வைத்துப் பார்ப்பதா ஒரு இன்பம்?" என்று கோகுலனின் தாயார் முடிவு கட்டிக்கொண்டாள்.

சமயம் பார்த்து மகனிடம் சென்று "கோகுல்! பங்குனி உத்திர உத்ஸ வம் நம்ம ஊரில் வெகு அழகாக நடப்பது நீ அறிந்ததேயாகும். அதற்குப் போகவேண்டுமென்று உன் தங்கை ஆசைப்படுகிறாள். அவளுக்கு வேறு ஊரா! கல்யாணமா! என்ன இருக்கிறது? ஆகையால் அவளை அழைத்துக் கொண்டு போய்வரலாமென்று நினைக்கிறேன். 5 ரூபாய் கைச்செலவுக்குக் கொடுத்தால் போதும். எனக்குந்தான் வயதாச்சு. உத்ஸவம் ஸேவிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. என்ன சொல்கிறாய்?" என்றாள்.

தாயின் விருப்பம் எதுவாயினும் கோகுலன் தடை செய்வதில்லை. அதிலும் பக்தியாக ஸ்வாமி தரிசனம் என்று கேட்கும்போது மறுக்க மனம் வருமா! உடனே இசைந்து 10 ரூபாயாகக் கொடுத்தான்.

தாயார் அதை வாங்கிக்கொண்டு மகனை வாழ்த்தியபடி ஊருக்குச் சென்றாள். மகனின் சந்தோஷ வாழ்க்கையை தூரவிருந்து காதால் கேட்டு அகக்கண்ணால் பார்த்தால் போதும் என்று அந்த தாயின் பரிசுத்த உள்ளம் எண்ணிப் பூரித்தது. பிரதிபலனைக் கோராத மழையின் மகிமையைப்போன்ற தல்லவா தாயின் நிகரிலாத, விலை மதிப்பற்ற அன்பும் ஆகும்.

தாயார் ஊருக்குச் சென்றபிறகு கோகுலனுக்கு வீடு காடுபோல் இருந்தது. மனைவி இல்லாததுகூட அவனுக்கு அத்தனை குறையாகத் தோன்றவில்லை. 'கோகுல்!' என்று வயிற்றிலிருந்து பீறிக்கொண்டு வரும்

வாத்ஸல்யத்துடன் தன்னை அழைக்கும் இன்பமொழி இல்லாததே அவனுக்கு வாழ்க்கையில் வெறுப்பும் சூனியமும் நிறைந்ததுபோல் தோன்றியது. உடனே தாயாரை வந்துவிடும்படி கடிதத்தின்மேல் கடிதம் எழுதிவிட்டு அன்னையின் வரவுக்கே காத்திருந்தாள். ஆனால் அவள் வராமல் ஏதோ சாக்குப்போக்குச் சொல்லிக் கடிதம் எழுதிவந்தாள்.

ஒருநாள் ரோஹிணியிடமிருந்து கோகுலனுக்குக் கடிதம் வர, பரபரப்புடன் பிரித்துப் படிக்கலானான்.

''பிராணநாதா! நான் செய்தது தப்பிதம். மிகவும் தப்பிதம். மன்னிக்க வேண்டும். கலியாணத்தில் செய்துபோட்ட நகைகள், உடைகள், உங்களால் கொடுத்தவைகள் யாவும் என் பெற்றோரால் விற்றுச் சாப்பிட்டாய்விட்டது. எல்லா வேலையும் நானே செய்கிறேன். ஏதாவது சொன்னால், 'புருஷனழுக்கு வாய் ஒருகேடா?' என்று சீறுகிறார்கள். என்னால் பொறுக்கமுடியவில்லை. உடம்பு திரும்பாகப் போய்க் காசநோய் ஏற்படும்போலிருக்கிறது. என் கணவரான உம்மிடம் நான் எழுதுவதில் இகழ்ச்சியில்லை. ஒருபோதும் முன் மாதிரி இருக்கமாட்டேன். புத்தி வந்தது. என் அம்பியின் துணையில் நான் நாளையே வருகிறேன்.

பணிவுள்ள,

ரோ ஹி ணி.''

அதைத் திருப்பித்திருப்பிப் படித்து மனதில் சொல்லமுடியாத மகிழ்ச்சி கொண்டான். கோகுலனே வியக்கும்படி மறுதினம், ரோஹிணி மெலிந்து துரும்பாகிய நிலைமையில் பரிதாபகரமாகக் காக்ஷியளித்தாள். கோகுலனுக்கோ, இவளுடைய கண்றாவியைச் சகிக்கமுடியாது மனது வேதும்பியது. ''ரோஹிணி! இனி படாடோபத்திற்கும் ஜம்பத்திற்கும் ஆசைப்படமாட்டாயல்லவா? இனிமேல் அமைதியான வாழ்க்கை நடத்துவாயல்லவா?'' என்று அன்புடன் கேட்டான்.

ரோஹிணி அவன் காலில் விழுந்து வணங்கி ''என்னை மன்னிக்க வேண்டும்...அம்மா, அக்கா இருவரும் எங்கே?'' என்றாள்.

கோ:—அவர்கள் ஊருக்குப் போயிருக்கிறார்கள். அவர்களைப்பற்றிக் கூட உனக்கு நினைவு இருக்கிறதா?

ரோ:—எனக்குப் புத்திவந்தது. என் குற்றத்தை நான் ஒப்புக்கொண்ட பிறகு கூடவா என்னைக் குத்திக்காட்டுவது? அவர்கள் இங்கு இருக்கிறார்கள் என்றல்லவா எண்ணி வந்தேன். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை லீவாகையால் நாம் இன்றே கிளம்பி ஊருக்குப்போய் அவர்களை அழைத்துவரலாம்; கிளம்புங்கள்—என்றாள்.

ரோஹிணியின் மாறுதல் கோகுலனுக்கு ப்ரமிப்பாயிருந்தது. உடனே தம்பதிகள் வெகு குதூகலத்துடன் கிராமத்திற்குச் சென்று அவன் தாயார் வியக்கும்படி எதிரில் காக்ஷி கொடுத்தார்கள். இந்த ஆனந்த பிம்பங்களைக் கண்ட தாயின் உள்ளம் எப்படித்தான் பூரித்துப் புலகிதமடைந்திருக்கும்? இரு கைகளாலும் இருவரையும் அணைத்துக்கொண்டு தன் இதய பூர்வமான ஆசி மழையைப் பொழிந்தாள். அதற்கும் போட்டியிருப்பதுபோல் கண்கள் ஆனந்தபாஷ்பத்தைச் சொறிந்தன. அன்னையின் அன்பிற்கு நிகர் உலகத்தில் வேறு ஏதாவது இருக்கிறதா!

22

தெளிந்த மதியும் புண்ணான நெஞ்சமும்

முந்தானை நுனியில் தீப்பிடித்து எரியும் கோரத்தை ஒருவருமே கவனிக்கவில்லை. கமலாவுக்கும் பிரக்ஞையில்லை. அவளால் எப்படி இந்த விபத்தை உணரமுடியும்? வீதியில் விளையாடும் குழந்தைகள் அந்த ஸ்வாரஸ்யத்தில் வீட்டையே மறந்தார்கள்.

அச்சமயம் கையில் கட்டுடன் சந்திரன் திருடன்போல் எட்டிப் பார்த்தான். சந்தடியே இல்லாதிருந்ததால் உள்ளே வந்தான். கடிதம் ஒன்று அவன் கையில் இருந்தது. அதை நேரில் கமலாவிடம் கொடுப்பதற்காக வந்தான். கமலாவின் அலங்கோலமும் முந்தானையின் நுனி பற்றி எரிவதையுங்கண்டு அப்படியே அலறிப்போய் சடக்கென்றுமுந்தானையைப்பிடித்துக்கையினால் கசக்கப்பார்த்தான்.

அவனுடைய கையில் கமலாவின் சூட்டுக்காயம் பிரமாதமாக வீங்கி ரணமாகிக் கட்டியிருந்ததால் அவ்வாறு செய்யமுடியாது தவித்தபடி 'அம்மா! அம்மா! ஐயையோ! ஆபத்து. மயக்கமாகக் கிடக்கிறார்கள். துணி பற்றி எரிகிறது'' என்று கத்தித் தன் தாயைக் கூப்பிட்டான்.

அவன் தாயார் ஓடிவந்து முந்தானையைப் பிடித்துக் கசக்கியும் கிழித்தும் அணைத்துப் பின் விளக்கை வேறு இடத்தில் வைத்துவிட்டு முகத்தில் ஜலத்தைத் தெளித்து அவளைத் தெளியச்செய்தாள். சந்திரன் விலகி மறைவாக நின்றான். கமலா எழுந்தவுடனே தனது ஆபத்தான நிலைமையை உணர்ந்து பதறினாள். கீழே சிதறிக் கிடந்த கடிதத்தையும், படத்தையும் ஒரு நொடியில் எடுத்து வைத்துக்கொண்டாள்.

"மாமீ! உங்களுக்கு மிகவும் வந்தனம். எத்தனை சமயத்தில் நீங்கள் என்னைக் காப்பாத்துகிறீர்கள்! எனது பெற்ற தாயார் நீங்கள்தான். அவர் இன்னும் வரக்காணவில்லையே என்று எண்ணினேன். ஒருமாதிரியான மயக்கம் வந்துவிட்டது'' என்றாள். வீட்டுக்காரம்மாள் மகளை ஊருக்கனுப்பும் வேலையிலீடுபட்டிருந்ததால் கமலாவுக்கு தேறுதல் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

தாயார் சென்ற உடனே சந்திரன் மெல்ல நடுங்கியவாறு பதுங்கிப் பதுங்கி பூனைபோல் உள்ளே வந்தான். இவனைக் கண்ட கமலாவுக்கு அதற்குமுன்பிருந்த துக்கமும் ஏக்கமும் எப்படியோ மறைந்துபோய் கடுங்கோபம் பொங்கிவந்தது. பல்லை நெறநெற வென்று கடித்து கண்கள் சிவக்க உக்ர காளிபோல் பார்த்தபடியே, அருகிலிருந்த ஒரு பெரிய கழியை முன் ஜாக்கிரதையுடன் எடுத்தாள்.

இதற்குள் புழுவாகத் துடித்துக் குன்றிய சந்திரன் கமலாவே பிரமிக்கும்படி தான்கொண்டுவந்த கடிதத்தை அவள் காலில்வைத்து

விட்டுச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து "க்ஷமிக்கவேண்டும். நான் போய்வருகிறேன். இந்த அல்பனுக்கு உள்ளூற உறைக்கும்படி புத்தி புகட்டியதற்காக மிக்க வந்தனம். ஞாபகமிருக்கட்டும். மாமாவிடம் நான் விசாரித்ததாகச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு மாயமாய் மறைந்துவிட்டான்.

இமைகொட்டும் நேரத்திற்குள் நிகழ்ந்த இச் சம்பவத்தைக் கண்டு கமலா அப்படியே பிரமித்துப்போனாள். அவளாலேயே நம்பமுடியாமல் திகைத்து நிற்பதற்குள் மின்னல்போல் மறைந்துவிட்டதும் தம்பித்துப்போனாள். தான் தடியால் அடிக்காமல் இம் மட்டுடன் நிறுத்திக்கொண்டோமேயென்று தனக்குள் வியந்து, எல்லாம் கடவுளின் சோதனை என்று மனம் தேறியவாறு பெருமூச்சுடன் காலடியில் கிடந்த கடிதத்தைப் படித்தாள்.

"புனிதத்தாயே!

தங்களது பொன்னடிக்குப் பலகோடி வந்தனங்கள்.

"கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்கிறபடி நான் மூளை கலங்கி விஷப் பரீக்ஷை செய்ததன் பலனை நன்கு அனுபவித்தேன். சூட்டுக்கோலால் எனக்கு புத்தி புகட்டிய கிருபையை நான் என்னுயுள் முடியும்வரை மறக்க மாட்டேன். திருமங்கைமன்னன்என்கிற ஆழ்வார் பகவானின் காலிலிருந்த மோதிரத்தைத் திருடுவதற்குக் கழட்டமுடியாது தன் பல்லால் கடித்தாராம். பகவானின் பாததூளி பல்லில் பட்டவுடனே ஞானோதயமாகி அஞ்ஞான இருள் நீங்கி ஞான தீபப் பிரகாசமுண்டாகிப்பின் மோக்ஷத்தையடைந்தார்என்கிற திவ்ய சரிதையை நான் எனது சிறிய வயதில் பள்ளிக்கூடத் துப்பாட புத்தகத்தில் படிக்கும்போது அதன் ரஸனையை, தத்துவத்தை, சிறப்பை அறியவில்லை; அறியும் சக்தியுமில்லை. உங்கள் சூட்டுக்கோல் என் கையில்—உத்தமியின் உடல் எரியும்படிச்செய்த அதேகையில்—ஊடுருவிப்பாய்ந்த சமயந்தான் மேற்கூறிய சரித்திரத்தின் ஸாரம் என் புத்தியில் உதயமாகி மோகஇருள்நீங்கி, ஞான தீபம் இதயத்தில்தெளிந்து எரிகிற மகிமையை அறிந்தேன். என்னறியாமைக்கு வருந்துகிறேன். மன்னிக்கவும். மறுபடியும் உங்கள் பாதங்களில் வணங்கி சரணாகதி அடைகிறேன். அபயங்கொடுத்துக் காக்கவேண்டும். தனக்கு மகா துன்பத்தைச் செய்துவிட்ட காகாசுரனையே ரக்ஷிக்கும் படி ஸ்ரீ லோகமாதாவாகிய சீதாபிராட்டி தன்னுடைய நிகரிலாத கருணையைக் காட்டி மன்னிக்கவில்லையா! அந்த பெண்ணினத்தைச் சார்ந்த நீங்களும் மன்னிப்பீர்கள் என்கிற நம்பிக்கையுடன் இதை எழுதுகிறேன். வந்தனம்!

உங்கள் ஆசியைக் கோரும்,

சந்திரன்."

என்பதைப் படித்ததும் கமலாவின் கண்களில் தானாகவே நீர்த் துளிகள் நிரம்பின. சந்திரன் மனது மாறிய விநோதம் கமலாவுக்குப் பேரானந்தமாகவிருந்தது. அவனை நேரில் ஆசீர்வதிக்க உள்ளம் விரும்பியது. அதே சமயம் "அம்மா! போய் வருகிறேன். அப்பா! போய்வருகிறேன்" என்ற குரலும், "ஜாக்ரதையாகப் போய் வா! கடிதம் தவறாது எழுது. உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளு" என்கிற குரலும் ஒன்றன்பின் ஒன்றாகக் கேட்டதும் கமலா வீதிப்பக்கம் வருவதற்குள் கார் விர்ரென்று ஹாரனுடன் போய்விட்டதை அறிந்து அப்படியே நின்றாள்.

"பகவான் அவனுக்கு சகல மங்களங்களையுங் கொடுத்து ரக்ஷிக் கட்டும். இதயத்தில் உதயமாகிய ஞானதீபம் என்றென்றும் சுடர் விட்டுத் தூங்காவிளக்குபோல் எரியட்டும்" என்று இதய பூர்வமாக எண்ணியவாறு உள்ளே வந்து உட்கார்ந்தாள். அவளுடைய புதிய புயல் சற்று ஓய்ந்து நிம்மதி அடைந்த தக்ஷணமே, பழய பெரும் புயல் குபீரென்று இதயத்தில் தாக்கவாரம்பித்தது.

கணவனின் படத்தை மீண்டும் பலமுறை பார்த்தாள். கடி தத்தைப் பலமுறை படித்தாள். அப்பழுக்கற்ற மனிதனின் தூய குணத்தின் சிறப்பறியாது அபாண்டமான பழிக்குப் பாத்திர மாக்கிவிட்டோமே...அவர் குன்றிப்போய் வாடி வதங்கியதன் ரகஸியமறியாது பாழாகிவிட்டோமே! இந்த பயங்கரத்தை நான் எங்கே தெரிந்துகொண்டுவிடுவேனோ என்றே என்னிடம் வருடக் கணக்கில் நெருங்கிப் பழகாமலேயே விலகி நின்றார். இத்தனை வருஷ மாக அவரிடம் பழகியும் இந்த மர்மமறியாது பாழாகிவிட்டேனே! இனி என் கதி என்னவாவது? என்னுயுள் மடிந்தால் என்ன, இருந் தால் என்ன? இரண்டுங்கெட்டான் பிழைப்பாக ஆகிவிட்டதே!

என்று கமலா கடிதத்திலுள்ள விஷயத்தை எண்ணியெண்ணிக் குமுறுகிறாள். இன்ன வேதனை செய்கிறதென்பதே தெரியாது தத்தளிக்கும் சமயம்,

"விதியிது விதியிது மனமே! தினம்
விதிதனை நொந்திடில் விலகுமோ! தினமே!
பண்ணிய பாபத்தின் சாயல் நாளும்
கண்ணிடைக் கண்டு கலங்கிடும் நோயில்
பட்டது போதுமே முருகா! உந்தன்
மட்டிலா கருணையை அளித்திடு முருகா!"

என்ற பாட்டைப் பாடிக்கொண்டு அதே வியாதிக்காரப் பிச்சைக் காரி இந்த வீட்டுவாசலில் நின்று பிச்சை கேட்பதைக் குரலால் அறிந்த கமலாவை அப்படியே ஒரு குலுக்குக் குலுக்கித் தூக்கி வாரிப்போட்டது. அந்தப் பிச்சைக்காரியின் குரலே கமலாவின் காதிற்குப் பயங்கரமாயும் விபரீதமாகத் தன்னைச் சாபமிடுவது போலும் ஒரு அதிர்ச்சி உண்டாகியது. அவளைக் கண்டு நாம் அசங் கியப்பட்டதும், வெடுக்கென்று கூறிய துடுக்கு வார்த்தையுந்தான்

நம் தலையிலேயே கல்லைப் போட்டுவிட்டதா! ஐயோ! என்னவோ சித்திரவதை செய்கிறதே!" என்று நினைப்பொழுது துடித்தாள்.

எதையோ நினைத்தவளாய் திடீரென்று எழுந்து அலையக்குலைய ஓட்டமாக வீதிக்கு ஓடிவந்தாள். அந்த பிச்சைக்காரி "தாயே! பசி உசிர்போவுதே. ஒருவாய் சோறு போடுங்களேன்!" என்று தீன குரலில் கேட்டாள்.

இத்தனைநாளும் கமலா அந்தப் பிச்சைக்காரியைப் பார்க்கும் போது தோன்றிய தோற்றமும், இருந்த அருவருப்பும் இப்போது எப்படியோபறந்துபோய் அவளாலேயே இன்னதென்று அறியமுடியாத ஒரு நூதன உணர்ச்சி குபீரென்று பொங்கி எழுந்ததோடு கூறத்திறமற்ற பச்சாத்தாபமும் எப்படியோ உண்டாகியது.

"என்கணவருக்கும் இம்மாதிரிகர்மவ்யாதியாபிடித்திருக்கிறது? அவரும் இப்படியா அவதிப்படுவார்?"...என்று நினைக்கும்போது அவள் கண்களுக்கு தன் கணவன் அந்த வ்யாதிக்காரியின் பக்கலில் பரம கோரஸ்வரூபமாய் நிற்பதுபோல் ஒருதோற்றம் தோன்றியது. எரிமலையே தன் தலையில் விழப்பட்டவள்போல் துடிக்கும் சமயம் பிச்சைக்காரி கமலாவைப் பார்த்ததும் ஆச்சரியமும் சற்று அதிர்ச்சியும் அடைந்தவளாய், "ஐயோ! இந்த புண்யவதி வீடா இது? தெரியாமல் கேட்டேனே!" என்று மனத்தை நொந்துகொண்டே "அம்மா! பசியின்கொடுமைலே மாருட்டமா வந்துட்டேன். இதோ பூட்றேன்...யம்மாடீ! கோவிச்சிக்காதே! ஒங்கொழுந்தே நல்லாக் கீதாம்மா!என்று கூறிக்கொண்டே வீதியோடுபோகவாரம்பித்தாள்.

அளிந்த புண்ணில் வேல் பாய்வதுபோல் கமலாவின் மனத்தில் சுறீரென்று தைத்தது. அவளிடம் பட்ட அபசாரத்தினால்தான் தன் வாழ்க்கையேஅதோகதியாகிவிட்டது என்கிற உணர்ச்சியின்வேகம் மின் வெட்டுபோல் உள்ளத்தில் எழுந்ததும் கமலா தன்னையே மறந்து "பிச்சைக்காரீ! இதோ.பாரு...இங்கு வா....போகாதே... இங்கு வா!" என்று கூப்பிட்டாள். ஆனால் அவள் திரும்பியேபார்க்காமல் "லாரியில் அகப்பட்டுக்கொண்டு இறந்தால்கூட சகிப்பேன். உன்னுடைய கெட்ட வ்யாதி ஒட்டிக்கொள்ள சகிக்கமாட்டேன்" என்று சொன்ன சொல்லை இந்தப்பாவி மறப்பேனா! செத்தாலும் மறக்கமாட்டேன்"என்றுகூறிக்கொண்டேபோய்விட்டாள்.

ஐயோ பாவம்! கமலாவின் இதயத் துடிப்புக்கோர் எல்லைகூற முடியுமா! அப்படியே பித்துப்பிடித்தவள்போல் நின்றாள். கண்களில் சொட்டும் மழைக்குத் தடங்கலே இல்லை. அப் பிச்சைக்காரியைப் பார்க்கும் பார்வைமட்டும் அசையாது நின்றது.

32. அம்ருததாரா 4-ம் பதிப்பு.
இதுவரையில் நீங்கள் படித்திராத அநுபவமும், அதியாச்சரியமும், நீதியும், திடுக்கிடும் சம்பவங்களும், கனவிலும் கருதமுடியாத அற்புதச் செய்கைகளும் கூடிய நாவல்.
அணா 4.

183066

விதியின் கூற்றை வெல்லுதற்காமோ?

கல்லை வீசி எறிந்த குட்டியின் செய்கையைக் கண்ட காமு அலறிப்போய் நடுநடுங்கிவிட்டாள். "இறங்கி வந்துவிடுங்கள். வாருங்கள். ஏதோ பேராபத்து நம் தலைக்கு வந்திருக்கிறது. வாருங்கள். இப்படியுமா ஆத்திரப்படுவார்கள்?" என்று மெல்லக் கூறி, குட்டியின் காலைப் பிடித்து இழுத்தாள்.

குட்டிக்கும் உள்ளூற குலை நடுக்கம் எடுத்துக்கொண்டது. காமு சாவி த்வாரத்தினுல் எட்டிப் பார்த்தாள். ரத்தம் குபீரென்று பீறிட்டதைக் கண்டதும் கதிகலங்கிப்போய் குட்டியை மெல்ல இறக்கி அழைத்துக்கொண்டு தம் குடிசைக்குஓட்டமாக ஓடினுள்.

குட்டிக்கு,'தன் கண்மூடித்தனமான ஆத்திரத்தில்செய்துவிட்ட சதியில் உள்ளே இருப்பவர்கள் என்னவானுர்களோ! கொலைதான் நடந்துவிட்டதோ! உயிர் இருக்கிறதோ, போய்விட்டதோ' என்கிற திகில் பிடித்துக்கொண்டது. குடிசைக்கு வந்ததும் தேகம் கிடுகிடென்று ஆடுகிறது. வெயர்வை வெள்ளமாகப் பொங்குகிறது. "காமூ! காமூ! நான் கொலைகாரனுகிவிட்டேனு சொல்லு! சொல்லு!... என்று காமுவைப்பிடித்துத் தோள்களை ஆட்டியபடியே கேட்டான்.

காமுவின் இதயம் வெகு வேகமாய் அடித்துக்கொள்கிறது. கட்டாயம் இந்த விபரீதம் தங்களைத் தாக்கும் என்ற பயம் ஒரு புறம் வதைக்கின்றது. "ஏதோ பயமாயிருக்கிறதே! உயிர் போயிருக்குமாயின் கொலைக்குற்றமன்ருே நம்மைச் சாரும். நான் ஏன் இந்த பயங்கர ரகஸியத்தை உங்களுக்குக் காட்டிக்கொடுத்தேன். இந்த அக்ரமங்களை நான் எத்தனை நாட்களாக அறிவேன். நீங்களாக இதை உணரும் வரையில் சொல்லக்கூடாதென்று நான் நினைத்தேன். என் போதாக்காலந்தான் இப்படி அமைந்தது. ஐயோ! அங்கு விளக்கு தெரிவதுபோலிருக்கிறதே...என்னசெய்வது!" என்று பதைத்தாள்.

குட்டி சில விநாடிகள் ஒன்றுமே தோன்ருது தத்தளித்தான். "காமூ! காமூ! நான் கொலைக்காரன்! நான் கொலைக்காரன்தான். இனி சந்தேகமே இல்லை. நான் எங்காவது ஓடிவிடுகிறேன். உன்னைப் பலவிதத்திலும் நான் சந்தியில் விட்டுவிட்டேன். என்னைக் கட்டாயம் போலீஸார் பிடித்துவிடுவார்கள். என்னைத் தூக்கிலிடுவார்கள். நீயும் குழந்தைகளும் கண்டு சகிக்காமல் துடிப்பதைவிட நான் எங்கேனும் ஓடிவிடுகிறேன். நீங்கள் எப்படியாவது பிழைத்துக்கொள்ளுங்கள்.

காமூ! ஆதிமுதல் உன்னுடைய பரிசுத்தமான அன்பின் மகிமையை அறியாது நான் செய்த பாதகத்திற்குப் பகவான் சரியான தண்டனையைக் கொடுத்துவிட்டார். மனிதன் தன்னறிவு மங்கித் தன் புத்தியின் விபரீதத்திஞலேயே கெடுகிருன். மறுபடியும் அவன் புத்தியின் இருள் நீங்கி உத்தமமான ஞானதீபம் ப்ரகாசிப்பதை

யறிந்து அதே புத்தியால் திருந்துகிறான். இந்த ரகஸியத்தை இனி நான் உணர்ந்து பயனில்லை. நான் போகிறேன்; போகிறேன். என்னை மன்னித்து விடு காமூ!'' என்று கதறினான்.

காமுவைக் கட்டிக்கொண்டான். பிரிய மனமின்றிப் பிரிந்து ஓட முயன்றான். காமுவின் தைரியமும் ஆழ்ந்த உறுதியும் இந்த மடையனுக்கு என்ன தெரியும்? அவனைப் பிடித்துத் தடுத்து நிறுத்தி ஒரு குழந்தையை அவன் தோள்மீது கிடத்தினாள். மற்றொன்றைத் தான் எடுத்துக்கொண்டாள். "உம். நடவுங்கள். இனி அரைக்ஷணங் கூட நான் தங்களைப் பிரிந்து வாழமாட்டேன். ஆபத்து வந்தாலும் சேர்ந்து அனுபவிப்போம்; இன்பம் வந்தாலும் ஒன்றாக அனுபவிப் போம்: மறுக்கவேண்டாம். உம். நடவுங்கள்'' என்றாள்.

குட்டி எத்தனை சொல்லியும் காமு கேளாததால் அவசரமாக நடந்தான். எங்கு செல்கிறோம், என்ன செய்கிறோம் என்று அச் சமயம் தோன்றுமா! எந்த இடத்தில் பார்த்தாலும் தான் கொலைப் பாதகன் என்று உறுமுவதாகவும் பரிகஸிப்பதாகவும் ஒரு பயங்கரம் தோன்றுகிறது. போலீஸார் துரத்துவதுபோல் திடும் திடும் என்று தோன்றி திடுக்கிடுகிறான். இந்த நிலைமையில் அந்தத் தோட்டத்தின் குறுக்கு வழியால் சென்றுவிட்டார்கள்.

மரத்தின் இலைகள் சிறிது ஆடும் சப்தம் கேட்டாலும் "கொலை காரா! எங்கே ஓடுகிறாய்! மனிதர்களை ஏமாற்றிவிடலாம். என்னையுமா ஏமாற்றப்பார்க்கிறாய்!'' என்று அசரீரி கூறுவதுபோல் ஒலி கேட் கிறது. திடுக்கிட்டு நின்று கால்கள் உதற உடம்பு நடுங்கப் பதைக் கிறான். "காமூ!...இப்போதும் பாவாயில்லை. நீ போய்விடு. இந்த குழந்தைகளுடன் போய் விடு. எனக்கு ஏதோ பயங்கரமாயிருக் கிறது. மனத்தில் அசரீரி என்னவோ சொல்லுகிறது....போய் விடேன். காமூ! குழந்தைகளும் நீயுமாவது பிழைக்கட்டும்'' என்று கெஞ்சினான்.

காமு அவனை வாய் திறந்து பேசவிடாது வேகமாக நடந்து கொண்டேயிருக்கிறாள். குட்டியும் எந்திரம்போல் ஓடுகிறான். குழந் தைகளோ, கவலையில்லாது தோள்மீது தூங்குகின்றன. இராக் காலத்தின் பயங்கரமும், இருளின் கொம்மாளமும் வேறு மிரட்டு கின்றன. ஒவ்வொருவருடைய இதயத்தில் ஒவ்வொருவிதமான சங் கடம் செய்கின்றது. காலதேவதையின் கூற்று இது.

37. அன்பின் சிகரம் 4-ம் பதிப்பு.

பக்திப்பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினுமினிய உள்ளன் புடன் செய்த உபகாரத்தின் அருமையை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன?...சென்னை ரேடியோவில் நடிக்கப்பட்டு, எல்லோராலும் மிகவும் கொண்டாடப்பட்ட சிறு கதை.

அணா 4.

கனவின் தோற்றமா? நினைவின் தடுமாற்றமா?

பிச்சைக்காரி சென்ற திக்கையே பார்த்துக்கொண்டு பிரமை பிடித்தவள்போல் கண்ணீர் பெருக நிற்கும் கமலாவைக் கவனிப்பவர்களே இல்லை. அவள் இதய அரங்கத்தில் தோன்றும் காக்ஷிகளுக்கு எல்லையே இல்லை. பிச்சைக்காரி எதிர்வாடையில் ஒரு வீட்டிற்குச் சென்று பிச்சை கேட்டாள்.

வீட்டுக்காரர்கள் அவளைத் தாறுமாறாகத் திட்டி அனுப்பிய போதுதான் இவளுக்கு உணர்ச்சி உண்டாகியது. கையில் காலணா இல்லாமல்போயிருக்கும் தன் கணவனின் வாழ்க்கை எப்படி நடக்கும்? ஐயோ! பசியின்கொடுமையினால் அவரும் இப்படி பிச்சை எடுப்பாரோ! அவருக்கும் இந்தகதி வந்துவிடுமோ!" என்று நினைக்கும்போது அவள் மூளையே குழம்பி அயோமயமாகியது.

பின்னும் சிறிது சமாளித்துக்கொண்டு, "ஏ பிச்சைக்காரீ! பிச்சைக்காரீ!" என்று கூப்பிட்டாள். அவள் திரும்பிக்கூட பார்க்காது தெருக்கோடிக்குப் போய்விட்டாள். தான் அவள் மனத்தை நோகடித்து வேடிக்கை பார்த்ததற்கு இதுதான் சரியான தண்டனை இதுதான் சரியான பலன்!" என்று சலிப்புடன் எண்ணியபடி நடைச்சவம்போல் உள்ளே போனாள்.

குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்த அலுப்பினால் வீதித் திண்ணையிலேயே தூங்கிவிட்டதைக்கூட கமலாபார்க்கவில்லை. "உண்மையில் பயித்தியம் பிடித்துவிடுமோ!" என்கிற பெருங் கவலையே உண்டாகியது. தன்னறிவே இல்லாது கவலைக் கடலில் மூழ்கி உட்கார்ந்தவள் குழந்தைகளை மறந்தேபோனாள்.

வீட்டுக்காரம்மாள் தெருவில் எச்சில் இலை எறியும்போது திண்ணையில் குழந்தைகள் ஒண்டியாய்த் தூங்குவதைப் பார்த்து அதைக் கமலாவிடம் தெரிவித்தபிறகே கமலா வீதியில் வந்து பார்த்தாள். பரதேசிக் களை குழந்தைகளிடம் தாண்டுவதை அந்த நிமிடந் தான் பளிச்சென்று தோன்றியதை யறிந்து தேம்பித் தேம்பிப் புலம்பியபடியே குழந்தைகளை உள்ளே கொண்டுவிட்டுத் தானும் படுத்துக்கொண்டாள்.

சாப்பாடு குழந்தைகளுக்கும் போடவில்லை. "இனி எனது எதிர்காலத்து வாழ்க்கை எப்படி நடக்கப்போகிறது? இக் குழந்தைகளைக் கண்ணேபோல் வளர்க்கச்சொல்லி எழுதியிருக்கிறாரே! என்னுடைய நிலைமையில் எனக்குப் பயித்தியம் பிடித்துவிடுமாயின் இக் குழந்தைகளின் கதி என்னவாகும்? துரதிருஷ்டப் பிண்டங்களே... சீச்சீ! குழந்தைகளைப் பார்த்து இப்படிப் பேசுவதா! என் விதியும் துரதிருஷ்டமும் அல்லவா இப்படி ஆட்டுகிறது" என்று கட்டு மீறிய தவிப்புத்தவித்தாள்.

சோமு எழுதியிருந்ததுபோல் பெட்டியில் 1500 ரூபாய்கள் நோட்டுக்களாகவிருப்பதைக்கண்டு துக்கம் பொங்கியதேயன்றி சந்தோஷம் உண்டாகுமா! "எந்த ஜென்மாந்திரத்தின் சாபமோ! யார் செய்த பாபமோ இப்படியாகிவிட்டதே" என்கிற விசனம் நெஞ்சை அறுத்துத் தின்கிறது.

'பரிசுத்தமான மனிதன்மீது அபாண்டமான பழியுடன் சந்தேகித்ததன் கொடுமையோ!' என்றும் மனம் பதைத்தது. இனி எதை நினைத்துத் துடித்துத்தான் என்ன பயன்! மறுதினமே தன் ஓர்ப்படிக்குக்கடிதம் எழுதிவிட்டு பதிலுக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

பின்னும் ஒருவாரமாயிற்று. பதில் கிடைக்கவில்லையே என்று ஏங்கிய சமயம் குருசாமியே நேரில் வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் கமலா தன்னை மறந்து தேம்பித்தேம்பி அழுதுவிட்டாள்.

குரு:—உம். அழாதேம்மா! உன்னிடம் உயிராயே வைத்திருந்த சோமுவுக்குக்கூட இத்தகைய விபரீதமான துர்ப்புத்தி உண்டாகியதைப் படிக்க என் உடம்பே பற்றி எரிந்தது. என் கண் முன்பு அவன் அகப்பட்டிருந்தால் நசுக்கியே போட்டிருப்பேன். எத்தனை நாட்களாக அவன் இந்த வியாபாரத்திலிருக்கிறான்? ஏன் இதைநீ இதுகாறும்எழுதவில்லை? என்று அடுக்கிக்கொண்டேபோனான்

மரியாதையால் இதுகாறும் குருசாமியிடம் கமலா பேசியதே கிடையாதாகையால் இப்போதும் பேசுவதற்கு அஞ்சி சற்று மறைவாக நின்றாள். சோமுவை அவன் கண்டபடி திட்டுவதைக்கேட்டுச் சகிக்கமுடியாமல் புலம்பியபடியே, "அவரை ஏன் வீணாகத்திட்ட வேண்டும்? எல்லாம் நான் செய்த பாவம். என் கர்மம். அவரைத் திட்டவேண்டாம்" என்று மட்டும் உள்ளே இருந்தபடியே கூறினாள்.

குரு:—அவனைப்பற்றித் தேடக்கூடவேண்டாமா!

கம:—உம்...தேடுவதற்கு அவர் எங்காவது திருடிக்கொண்டு ஓடிவிட்டாரா! எப்படிச் சென்றாரோ, அப்படியே வரட்டும், நாம் ஒன்றும் செய்யவேண்டாம். குழந்தைகள் தலையெழுத்துப்போல் நடக்கட்டும்—என்று வெறுப்புடன் கூறினாள்.

இன்னும் இரண்டு தினத்திற்குள் வீட்டுச் சாமான்களைக் காலி செய்துகொண்டு, கமலாவையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான். வீட்டுக்காரம்மாள் கமலாவைப் பிரிய மனமின்றிவருந்தினாள். கமலாவின் அமிருதம்போன்ற குணத்தழகையும், அவளது பதிபக்தியையும் அந்தம்மாள் குருசாமியிடம் கொண்டாடி மாளவில்லை. "இத்தகைய மனைவியையும், அருமையான குழந்தைகளையும்பிரியஎந்த மூதேவியின் மயக்கத்தினாலோ மனம் மாறிவிட்டதைக் காணச்சகிக்கவில்லை. "உம். போய்வாம்மா! புலம்பாதே! உன் ஓர்ப்படியும் மைத்துனரும் உன்னைக் கைவிடமாட்டார்கள். அவர்களை அண்டியிரு. இந்த காலம் இப்படியே போய்விடாது. பகவான் அந்த மடையனுக்கும் நல்ல புத்தியைக் கொடுத்து உதவுவான். அப்போது நீ மறுபடியும் இதே வீட்டிற்கு வந்துவிடு. எந்த சமயம் வந்தாலும்

உனக்குத்தான் முதலில் இடம் கொடுப்பேன். போய் வா"...என்று ஆசியும் அன்பும் கனிந்து கூறினள்.

உடனே வண்டி தயாராகவந்தது. கமலா இதயத்திற்குள் ஒரு விஷயத்தை அழுத்திக்கொண்டிருக்கும் வேதனையை அவளையன்றி யாரறியக்கூடும்? மேலுக்கு அவர்களுடன் நடிக்க மனமின்றி நடித்தாள். தன் கணவனுக்கு இம்மாதிரி விதி வரவும், தான் குழந்தைகளுடன் வனவாஸம்போல் போகவும் ஒரு காலம் வந்ததை எண்ணும்போது அவளால் எப்படித் தாங்கமுடியும்?

பதுமைபோல் வண்டியில் உட்கார்ந்தாள். குழந்தைகள் கும்மாளமடிப்பதும் அவள் கண்களுக்குத் தெரியவில்லை. "என் கணவரைக் கடைசிதரமாகப் பார்க்கக்கூடக் கொடுத்துவைக்கவில்லையே! என்ன செய்வேன்? இந்த ஊரையும்விட்டுப் போய்விட்டால் அவரை எப்போது காண்பேன்? என்ன செய்வேன்!" என்று தவிக்கிருள்.

ரயிலில் கும்பல் அதிகமாயிருந்ததால், குருசாமி கமலாவைப் பெண்கள் வண்டியில் ஏறவிட்டுத் தான் வேறு வண்டியில் உட்கார்ந்தான். ரயில் கிளம்பும் நேரமாகிவிட்டது. இரவு 8 மணியாகையால் வண்டியில் அனேகர் தம்தம் படுக்கைகளை விரித்துப் படுத்துக்கொண்டுமிருந்தார்கள். புதிதாக ஏறுகிற ஜனங்களுக்கு இடங்கொடுக்காமல் பெண்பிள்ளைகள் குழந்தைகளானுலும் தயா தாக்ஷிண்யமின்றி கண்டிப்பாய் அடையாது படுத்திருந்தார்கள்.

இது கண்ட மற்ற ஜனங்கள் பலத்த சண்டை செய்யவும் கிளம்பினர்கள். "நீதான் பணம் கொடுத்து டிக்கட்டு வாங்கினையா! உன் பாட்டன் கட்டிய வீடுபோல் படுத்துக்கொண்டாயே! எழுந்திரய்யா! எழுந்திரு. பொம்பிள்ளைகள் குழந்தைகள் நிக்கறது தெரியல்லே?" என்று கத்தினன்.

குருசாமி ஏறியிருந்த வண்டியில் சண்டை பலத்துவிட்டதால் "இந்த சிறிய வாய்ச்சண்டை பெரிய கைச்சண்டையாகிவிடப் போகிறதே" என்று பயந்து சண்டை விலக்கும் திருப்பணியிலீடுபட்டிருந்தான்.

அந்த ஸ்டேஷனில் மகிழம், பாரிஜாதம், பாதிரி முதலிய சுகந்த பரிமளம் வீசும் மரங்கள் ஏராளமாகவிருந்ததால் அவற்றின் வாஸனை பிரயாணிகளுக்குப் பேரானந்தத்தைக் கொடுத்தது. அந்த மரத்தின் பின்புறம் நிழலில் மறைந்து மறைந்து நின்று சோமு தன் குழந்தைகளையும், கமலாவையும் உள்ளம் உருகும் வேதனையும் சந்தோஷமும் கலந்த உணர்ச்சியுடனும் பார்த்துப் பார்த்து பெருமூச்சும், கண்ணீரும் போட்டியிட நின்றிருந்தான்.

அவன் இதயக் கொந்தளிப்பும், அவன் மனத்தில் செய்யும் சங்கடமும் கூறமுடியுமா! அள்ளித் தின்கிறது. "ஏ விதியே! என்னுயிரையும் என்னையும் இப்படிப் பிரிப்பதா உன் விளையாட்டு! இதைக் கண்டு நீ களிப்பதற்கு உன் நெஞ்சு துணிகிறதா!...ஐயோ... அதோ

மணி அடித்துவிட்டார்களே! இனி என் கண்மணிகளும் இன்ப ராணியும் மறைந்துவிடுவார்களே! என்ன செய்வேன்?"...

என்று புழுகாய்த் துடிக்கின்றான். எதிரில் சென்றால் கமலா என்ன நினைப்பாளோ! அன்பின் மிகுதியால் தன்னை வெளிப்படுத்தி விடுவாளோ! என்றும் அஞ்சினான்: மனது குழம்பித் துடிக்கிறது. இன்று விட்டால் மீண்டும் என்று பார்க்கமுடியுமோ! என்ற ஏக்கமும் உண்டாகியதால் ஆவேசங்கொண்டவனைப்போல் ரயில் புறப்படும் மணி அடித்ததைக்கூட உணராமல் ஓட்டமாக ஓடிவந்தான்.

ஜன்னலின் கட்டைமீது சாய்ந்துக் கண்ணீர் வடித்துக் கொண்டே உட்கார்ந்திருந்த கமலத்தைப் பார்த்து "ஐயோ பாவம்! என்ன விஷயமோ தெரியவில்லை. அழுகிறாள். யாரையாவது பிரிந்து போகப்போகிறோமே என்ற வருத்தமோ! இல்லாவிட்டால் யாராவது இறந்துவிட்டார்களோ, என்னவோ! பாவம்" என்று அருகிலிருந்தோர் அனுதாபத்துடன் கூறும் வார்த்தைகள்கூட அவள் காதில் விழவில்லை.

அயோமயமான நிலைமையில் உட்கார்ந்திருக்கையில் சோமு விரைக்க விரைக்க ஓடிவந்து, "கமலா! கமலா!....போய்வருகிறாயா... தன்வந்திரியைப் பூஜை செய்து என் கர்மம் ஒழிய வேண்டுமென்று பிரார்த்தனை பண்ணுகிறாயா! குழந்தைகளைச் சரியாகக் கவனித்துவா! வீணாக அவர்களைத் திட்டியோ, கடிந்தோ பேசாதே!"...என்று அன்பு அலைமோதக் கூறினான்.

தன் லோகச் சிந்தையாக உட்கார்ந்திருந்த கமலாவுக்கு சோமுவின் குரலைக் கேட்டதும், பிம்பத்தைப் பார்த்ததும் அவளை அப்படியே ஒரு முழும் தூக்கி வாரிப்போட்டது. அபாரமான அதிர்ச்சி உண்டாகியதால் உடனே பேசக்கூடாது, 'ஹா...ஹா' என்று மூச்சுத் திணற விழித்தாள்..."வந்தீர்களா!....வந்தீர்களா!....ஐயோ! இனி இந்த மௌனமும் அனாதை வாஸமும் வேண்டாம். உடனே ஏறுங்கள், இந்த வண்டியில் ஏறுங்கள், தாமதம் வேண்டாம். இல்லாவிட்டால் நான் இறங்கிவிடுகிறேன்" என்று கீழே கவிழ்ந்தபடி கூறினாள்.

சோமுவுக்கு 'அவள் எங்கே இறங்கிவிடுவாளோ! தமயன் எங்கே பார்த்துவிடுவானோ!' என்கிற பெரிய கவலை பிடித்துக் கொண்டதால் "கமலா!...இனிமேல் கவலையில்லை" என்று ஏதோ சொல்லவாயெடுத்தான். அதற்குள் வண்டி நகர்ந்துவிட்டது. 'கமலா போய் வா...போய்...இந்தா இன்னொருகடிதம்' என்றுகூறிகடிதத்தை ரயிலில் விட்டெறிந்துவிட்டு சடக்கென மறைந்துவிட்டான்.

கமலாவின் உள்ளம் கொதிக்கின்றது. இருள் சூழ்ந்திருப்பதால் அவன் வெளிச்சத்திலிருந்து மறைந்ததை இவள் எப்படி அறிய முடியும். வெளிச்சம் இருப்பதும் ஒரே இருளாகத் தோன்றியது. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் ரயில் இவர்களை இழுத்துக்கொண்டு சென்றுவிட்டது.

25

தொடர்ந்து வந்த துன்ப தேவதை

மனத்தில் கவலையோ, பயமோ, குழப்பமோ ஒன்றுமே இல்லாமலிருக்கும்போது வழி நடப்பதாயின், நடக்கமுடியாதவர்களுக்குச் சிறிது நடைச்சிரமம் தெரியும்; மேல்படி கலவரங்களில் எது ஒரு சிறிது இருப்பினும் நடக்க நடக்க வழி மாள்வதேயில்லை போன்றும் அதிக தூரம் இருப்பதுபோன்றும் தோன்றுவதும், அதிகமான களைப்பும் கால்வலியும் உண்டாவதும் சகஜம்.

கொலையே செய்துவிட்டோமோ, கொலைக்குற்றம் நம்மைத் தொடர்ந்துவருகிறதோ! கொலைப்பாதகம் நம்காலைச்சுற்றிவிட்டதோ! என்று ஓயாது நடுங்கித் தவித்தவாறு நடக்கும் குட்டிக்கு கால்கள் துவண்டுபோகின்றன. வெயர்வை நிமிஷத்திற்குநிமிஷம் குபீர், குபீர் என்று வென்னீர்போல் பொங்கி வழிகிறது. "காமூ!...போலீஸ் காரர்கள் வருகிறார்கள்போல் தோன்றுகிறதே...திரும்பிப் பாரு... நீ இப்படியே நின்றுவிடு. நான் ஓடிவிடுகிறேன்" என்றான்.

காமு:—ஒரு பயமும் இல்லை. வீணுகக் கலவரம் செய்யவேண்டாம். நான் அரைக்ஷணங்கூட விட்டுப் பிரியமாட்டேன். பேசாமல் சந்தடி செய்யாமல் வாருங்கள்...நமக்குக் காலவிதி இப்போது கொடிய தாண்டவம் செய்கிறது. அது போதும். நீங்களும் அனுவசியமாக என்னை விரட்டாதீர்கள்.

ஒரு முக்கியமான விஷயம். குழந்தைகளுக்குக்கூட தெரியக் கூடாது. அவர்கள் தூங்கும்போது தீர்மானம் செய்துகொள்ள வேண்டும். அந்த சாமியாரிடம் உள்ள சிஷ்யர்களில் சிலர் உங்கள் மீது துவேஷமாகவே இருந்து வருகிறார்கள். அவர்களே இந்த சம்பவத்திற்கு நீங்கள்தான் காரணம் என்று கட்டாயம் ஜோடித்து விடுவார்கள். ஆகையால் நீங்கள் காலவிதியை உத்தேசித்து, நமது கஷ்டம் நிவர்த்தியாகும்வரையில் பயித்தியம் பிடித்ததுபோல் நடந்து கொள்ளவேண்டும். நான் தங்களுக்கு ஆபத்து அணுகாது பார்த்துக் கொள்கிறேன். இது நம் குழந்தைகளுக்கும் தெரியக்கூடாது. போலீஸார் சந்தேகப்பட்டுவந்துபிடித்துச்சென்றாலும் பயித்தியம்போலவே நடந்தால் கவலையேயில்லை. என்ன நடக்கிறதோபார்க்கலாம்' என்றாள்.

"பயித்தியம்போல் நடிக்கவேண்டுமா! நானு! ஐயோ! காமூ! காமூ!...இதெல்லாம் சந்தேகமில்லாமல் நான் உனக்குச் செய்த சதியின் விளைவுதான், காமூ! காமூ!...அனுவசியமாய் நான் பயித்தியமாக நடித்தும் ஏதாவது ஆபத்து வந்துவிட்டால் உனக்கும் குழந்தைகளுக்கும் மகத்தான கஷ்டமாகிவிடும். ஆதலால் நான் ஓடிப்போய் விடுகிறேன். என்னை விட்டுவிடு...கடவுள் எனக்குச் சகலவிதமான சவுகரியங்களைக் கொடுத்தும் என் மதியீனம் எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டது. அப்போதும் ஆண்டிப்பயலை

அண்டி ஆண்டியாகவே என் பாதிகாலம் கழிந்தது. இனி கைதியாகவிருந்தோ, தூக்கு மரத்தில் தொங்கலாடியோ மற்ற காலமும் முடியட்டும். நான் ஓடிவிடுகிறேன். நீயும் குழந்தைகளுமாவது இந்த விபத்திலிருந்து தப்பிப் பிழையுங்கள்'' என்று கூறியவாறு ஓட எத்தனித்தான்.

காமு அவன் காலைத்தடுத்து ஓடவிடாது பிடித்துக்கொண்டு 'நில்லுங்கள். முன்பொருசமயம் நீங்கள்,குழந்தைகளுடன் நல்லத்தங்காளைப்போல் கிணற்றில் விழுந்து மடியும்படிக் கூறினீர்களே! அந்த வாக்கை இப்போது நிறைவேற்றி விடட்டுமா! என்னை மட்டும் தனியே விட்டுச் சென்றால் இனி என் கதி அவ்வளவுதான். வீணை வருந்துவதில் உபயோகமில்லை. இத்தனை தூரம் இழுத்து வந்துள்ள விதி இன்னும் எப்படி எப்படி ஆட்டுமோ அதை ஏமாற்றிவிடமுடியாது. ஆகையால் நான் சொல்கிறபடி கேளுங்கள். பயித்தியம் போலவே நாம் நடித்தவாறு கண்காணாத தேசத்திற்குப் போய்விடுவோம். அதோடு நம்மை ஆபத்து விட்டால் விடட்டும். அங்கும் துடர்ந்துவந்தால் அனுபவிக்காது விரட்டமுடியாது. சாந்தத்தை இழக்காதீர்கள்'' என்று பலவந்தம் செய்தாள்.

அதற்குமேல் ஒன்றுந்தோன்றாது மீண்டும் குழம்பினான். தலைமறைவாக மறைந்தும் ஒளிந்தும் வழியில் உண்மையான யாசகம் செய்து வயிற்றைப் போஷித்தவாறு வெகுதூரம் நாட்கள் கணக்கில் நடந்து பக்காஇந்துஸ்தானி தேசத்திற்குப்போய்விட்டார்கள். அங்கு இவர்களுக்கு திக்கு திசை பாஷை ஒன்றும் தெரியவில்லையெனினும் நம்ம பாஷை மனிதர்கள் கண்ணில் படாமலிருப்பதே பெரிய லாபமாக எண்ணினர்கள். சாப்பாட்டிற்கு வழியேயில்லை. என்ன செய்ய முடியும்? பிச்சை எடுத்து நான்கு ஆத்மாக்கள் எப்படி புசிப்பது?

தென்னிந்தியாவைப்போல் ஏராளமான கோயில்களும் சாப்பாடும் உண்டா! அன்னத்தை தேசாந்திரிகளுக்கு வாரி வழங்கும் ஆலயங்கள் இல்லாதது கண்டு பசியால் துடித்துப்போனார்கள். கூலி வேலை செய்வதற்கும் தம்பதிகள் தயங்கவில்லை. பிச்சை எடுக்கவும் அஞ்சவில்லை. கிடைத்தபோது சாப்பிடுவது, மற்றபோது பட்டினி கிடப்பது. இந்த உயர்ந்த பழக்கத்தோடு சில மாதங்களுக்குள்ளேயே அந்த பாஷையையும் சாதாரணமாகப் பேசவும், புரிந்துகொள்ளவும் பழகினர்கள். காமு அங்குள்ள சிமாட்டி ஒருத்தியின் வேலைக்காரியை நன்ருகப் பழகிக்கொண்டதன் பயனல் அச்சிமாட்டியின் வீட்டிலேயே சாதாரணமான ஒரு வேலைக்கு அமர்ந்தாள். அதாவது பாத்திரங்கள் தேய்ப்பது, துணி துவைப்பது, சிமாட்டிக்கு எண்ணெய் தேய்த்துவிடுவது முதலிய வேலைகளுக்கு மாதம் 5 ரூபாய் சம்பளம் கிடைத்தது.

காமு வட இந்தியா எல்லைக்கு வந்த உடனே தமிழ்நாட்டுப் பழக்கப்படி உடை அணிவதை முதலில் மாற்றி வட-இந்தியப் பெண்ணைப்போல் அணிந்தாள். மூக்குத்தி, காதணி முதலியவைகளை

கழட்டிவிட்டு குங்குமப் பொட்டுமட்டும் கம்பீரமாக அணிந்து கையில் கண்ணாடி வளைகளுடன், தான் மங்களமுடைய பாவை, சுமங்கலி, என்பதை அத்தேசாச்சாரப்படி நிலைநாட்டிக்கொண்டாள்.

குட்டிக்குத்தான் அதிர்ஷ்டமோ, காமுவுக்குத்தான் அதிர்ஷ்டமோ! பயித்தியமாக நடித்தவாறு பிரயாணத்தை முடித்தபிறகு பயித்தியத்திற்கு இடமில்லாதுபோயிற்று. ஒரு பெரிய ஹோட்டலில் பரிமாறும் வேலையில் குட்டி மாதம் 10 ரூபாய் சம்பளத்தில் வெகு பிரயாசையுடன் அமர்ந்தான்.

காமு ஏழைகள் வசிக்கும் சிறிய குக்ராமத்தில் இரண்டு ரூபாயிக்கு ஒரு தனியறையை வாடகைக்கு வைத்துக்கொண்டாள். குட்டி பார்ப்பதற்கு நல்ல வாட்டசாட்டமாயும் நல்ல சிகப்பாய் அழகாயிருப்பதனால் சாப்பிட வருகிறவர்களுக்கு நல்ல சுத்தமாய்ப் பரிமாறவும், பலகாரங்கள் கொடுக்கவும் வேலை கிடைத்தது.

ஓட்டலில் வேலை செய்துவிட்டு வரும்போது எஜமானனைப் பார்த்து ஏதாவது மிஞ்சிய பலகாரங்கள் சிறிது கொடுப்பான். குட்டி அதை ஆனந்தமாகக் கொண்டுவந்து குழந்தைகளுக்குக் கொடுத்து இன்புறும்போதுதான் அவனுடைய புத்திரவாத்ஸல்யத்தின் அருமையும் பிரகாசமும் மனத்தில் நன்ருகப்பட்டன.

குழந்தைகளுக்குக்கூட ஹிந்தியே பேசப் பழக்கிவிட்டதால் தம் தாய் பாஷையை அடியோடு மறக்கவே ஆரம்பித்தார்கள். "விதியை வெல்வதற்குமட்டும் இவ்வுலகத்தில் யாராலாவது முடியுமா! அத்தகைய விதியைக்கூட நாம் வென்றுவிட்டோம். இனி நமக்கு பயமென்பது கிடையவே கிடையாது. காமூ! நான் எனது சுயபுத்தியுடன், நல்ல அறிவுடன் இருந்து, என் வாழ்நாளை நடத்தியிருந்தால் இப்படி மறைந்து ஒளிந்துச் சாகாமல் அழியாத இன்பத்துடன் இருந்திருக்கலாமல்லவா! இந்த புத்தி அப்போது என்னைவிட்டு எப்படியோ மழுங்கிப்போய்விட்டதே" என்றான்.

காமு, "உஸ்...உரக்கப்பேசவேண்டாம். நாம் புனர்ஜன்மம் எடுத்துப் புதிய வாழ்க்கையில் புதிய இன்பத்தில் காலந் தள்ளும் போது பழய குப்பையைக் கிளறவேண்டுமா! அதை அடியோடு மறந்துவிடுங்கள். நாம் பாதி ஹிந்திக்காரர்களாகிவிட்டோம். இன்னும் சில நாட்கள் சென்றால் முற்றிலும் இந்த தேசத்தவர்களாகவே ஆகிவிடுவோம். இந்த எளிய வாழ்க்கையும், இன்ப உணர்ச்சியும் என்றென்றும் நம்மைப் பிரியாதிருந்தால் போதும்" என்று சமாதானப்படுத்தினாள்.

சந்தோஷச் சந்திரன் உச்சத்தில்தான் இருந்தான். ஆனால் இடைவிடாது அவனைச் சுற்றியலையும் மேகக் கூட்டங்கள் அவனை அடிக்கடி மறைத்து உலகிற்கு இருளைக் கொடுப்பது இயற்கையே போல் இவர்கள் வாழ்க்கைச் சந்திர பிரகாசத்திலும் பழய எண்ணங்களாகிய மேகங்கள் கூடி வருத்தும்போது மனத்தில் அந்த

காரம் குடிகொள்ளும். உடனே சமாதானப்படுத்திக்கொள்ளும் போது இருள் நீங்கி ஞானதீபமாய் பிரகாசிக்கும்.

இத்தகைய நிலைமையான பாதையில் வாழ்க்கைச் சக்கரம் சுழற்றிக்கொண்டேபோயிற்று. காமு தன் பெயரை மாற்றி உஷா என்று வைத்துக்கொண்டாள்.

ஒரு தினம் காமு வேலைகளைச் செய்துவிட்டுத் தன் வீட்டிற்குத் திரும்பிவரும்போது வாசலில் இரண்டுமூன்று மனிதர்கள் தன் குழந்தைகளுடன் பேசிக்கொண்டிருப்பதைக்கண்டு 'யார் அவர்கள்?' என்று பிரமித்தாள். தமிழ்நாட்டு ஆசாமிகள்போலவும் தோன்றியது; அல்ல போலவும் தோன்றியது.

கவனமாகக் கூர்ந்து கவனித்துக்கொண்டு வரும்போது "உங்கப்பா அவர்தானே" என்றுகுழந்தைகளை தமிழில்கேட்ட சப்தத்தைக் கேட்டு இடியோசையைக் கேட்ட நாகம்போல் துள்ளினள். 'தமிழ் பேசுகிறவர்கள் இங்கு யாரிருக்கிறார்கள்? இது பக்கா இந்துஸ்தானி பேசும் ஊராயிற்றே!' என்று நடுங்கியவாறு அருகில் வந்தாள். அவளையறியாது ஏதோ சித்திரவதை செய்கிறது.

இவளைக் கண்டவுடன் அந்த மனிதன் "நமஸ்காரம்...காமாக்ஷியம்மாள் தாங்கள் தானே!" என்று இவள் திடுக்கிடும்படிக் கேட்டான். 'தும் கோன் பாயி....க்யா பூச் தேஹோ!' என்றாள். அங்கிருந்தவர்கள் கடகடவென்று சிரித்துவிட்டு 'அம்மணி! அடுத்த ஜென்மம் ஒருவேளை அசல் ஹிந்திக்காரர்களாகப் பிறப்பீர்களோ! என்னவோ! எங்களை ஏமாற்ற இனிமேல் முடியாது. ஆகையால் தயவுசெய்து தமிழிலேயே பேசுங்கள். ஹிந்தியில் பேசினல்கூட அதுவும் எங்களுக்குத் தெரியும். இருப்பினும் ஏன் அப்படி ஒளிக்கப் பார்க்க வேண்டும்? தங்களுடைய பர்த்தா ஸ்ரீமான் குட்டி அவர்களும் சீக்கிரம் வந்துவிடுவார்கள். அற்புத பவனத்தில் வேலை செய்வதாக உங்கள் குழந்தையே சொல்லியது. அங்கு ஒரு கூட்டத்தார் போயிருக்கிறார்கள்.

அதோ வந்துவிட்டார்களே! இவ்வூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மகா கெட்டிக்காரராயிற்றே! அவர் சாமர்த்தியத்தால்தான் நீங்கள் பிடிக்கப்பட்டீர்கள். நாங்கள் வெறும் விளையாட்டு மனிதரல்ல: போலீஸ்காரர்கள். ச்வாமியாரைக் கொன்றதற்காக உங்கள் பர்த்தாவைக் கைதுசெய்ய வந்திருக்கிறோம். நாட்கள் வேண்டுமாயின் மறைந்துவிடலாம். செய்த கொலை மறையாது. தெரியுமா...?

இந்த வார்த்தைகள் காமுவின் காதில் விழவிழ அவளுடைய சப்த நாடிகளும் தானக ஒடுங்கிக்கொண்டேவந்தன. "சாமியார் இறந்துவிட்டாரா!...கொலையா...கொலைபாதகமா...என்ன! அவரைக் கைதியாக்க வந்திருக்கிறீர்களா!"...என்று தன்னை மறந்து தாய்ப்பாஷையிலேயே ஆவேசத்துடன் கேட்டாள். அதே சமயம் அம்மன்கோயிலுக்குப் பலியிடுவதற்குக்கொண்டுபோகும் ஆட்டுக் கடாவைப்போல் குட்டியைப் பிடித்துக்கொண்டு வருவதைக்கண்ட

காமுவின் குடல் பற்றி எரிகிறது. சகிக்கமுடியாத வேதனை செய்து வாட்டுகிறது.

ஒரு விநாடி அப்படியே மூச்சு நின்றுவிட்டவள்போல் ஸ்மரணை யற்றாள். மறுவிநாடியே ஒருவிதமான தீவிர வைராக்கியமும் எண்ணமும் இதயத்தில் தோன்றியது. அதாவது அவரைக் கைதி யாக்கி அழைத்துச்சென்றுவிட்டால் குழந்தைகளுடன் இந்த அக்ரம உலகத்தின் ஆபத்தில் தன்னந்தனியே ஒரு விநாடிகூட வாழமுடி யாது. பலவிதமான பயங்கரங்களில் சிக்கி அல்லல்பட்டுச் சாவதை விட இந்த உபாயமே நல்லது. நாமும் ஒரே சங்கடத்துடன் முடி வடையலாம். குழந்தைகளை அவர் எப்படியாவது பார்த்துக்கொள் ளட்டும். மயங்காதே. பின்னடையாதே" என்று அவளுடைய மனமே அவளை ஊக்கியது.

ராஜபுத்திர வீரப் பெண்மணியின் திவ்ய தோற்றத்துடன் கண்களில் தீப்பொறியும் கோபஜ்வாலையும் வீச இவர்கள் எதிரில் வந்து, "ஐயா! நீங்கள் தும்பைவிட்டு வாலைப் பிடிப்பதில் மகா கை தேர்ந்தவர்கள் என்பதை பல பேர் மூலம் கேள்விப்பட்டதுண்டு. இன்று நேரில் பார்க்கிறேன். உங்கள் நியாயமும் உழைப்பும் இது தானு! கொலை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் நான் செய்ய வில்லை யெனினும் கல்லை வீசியது உண்மை. அவர் ஒரு பாபத் தையும் அறியமாட்டார். அவரை ஏன் கைது செய்யவேண்டும்? இதோ நான் குற்றவாளி தயாராயிருக்கிறேன். என்னைப் பிடித்துத் தூக்கிலிடுங்கள்" என்று வீர கர்ஜனை செய்தாள்.

அதே சமயம் குட்டி கதறியவாறு இங்குவந்தான். காமு கண் களாலேயே அவனுக்குத் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்து வாயைத் திறக்கக்கூடாதென்கிற தடை உத்தரவையும் போட்டாள். காமுவின் வார்த்தை போலீஸாருக்கு வியப்பும் திகைப்பும், ஏமாற்றலாயுங்கூடத் தோன்றியது.

"என்ன! நீங்கள் கொலை செய்தீர்களா! உங்கள் பேரில் சொல் லிக்கொண்டால் விட்டுவிடுவோம் என்ற மனப்பால் குடித்துப் பேசுகிறீர்களா!" என்றார்கள்.

காமு சற்றும் சளைக்கவோ சோர்வடையவோ இல்லை. 'திண்ணை யில் தேள் கொட்டியதாம்; தண்ணீர் முடாவுக்கு நெறி கட்டியதாம்' என்கிற கதையைப்போல் உங்கள் வார்த்தை இருக்கிறதே. நானே செய்தவள் என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டு எதிரில் தைரிய மாக நிற்பதைப் பார்த்தப்பிறகுமா கோழைபோல் பேசுகிறீர்கள்? சாமியாரைத் தாக்கவேண்டுமென்று நான் செய்ததற்குக் காரணங் கூட உங்களுக்குத் தெரியவில்லையா! அதையும் கூறவேண்டுமா! என் கணவன்தான் சாமியாருக்குச் சலாம் செய்யும் அடிமை போன்றவராயிற்றே! அவர் கொலை செய்தார் என்று சொல்வதற் காவது நியாயமிருக்கிறதா! கேட்பவர்கள்தான் நம்புவார்களா!

எத்தனையோ வருஷக்கணக்காக என் புருஷனையும் என்னையும் பிரித்து வாழவிடாமல் தடுத்து எங்கள் இன்ப வாழ்க்கைப் பாதையில் முள்வேலியை அடைத்துவந்த மகா பாதகன்மீது எனக்கு வெகு நாட்களாக க்ஷாத்திரம்உண்டு.என்பர்த்தாவைத் தன்கைப்பொம்மை யாக்கிய மனிதனை அடித்துத் துன்புறுத்தவேண்டும் என்கிற ஆவேசத்துடன்தான் செய்தேன். நான் செய்ததே என் புருஷனுக்குத் தெரியாது. பிறகுதான் தெரியும்.

சாமியார் செத்துப்போயிருப்பான் என்று நான் நினைக்கவில்லை. அவன் பழிவாங்கித் துன்புறுத்துவானே என்கிற பயத்தினால் ஓடி வந்தோம். அவன் இறந்திருப்பான் என்று தெரிந்தால் அப்போதே நான் அங்கு இதே பதிலைச் சொல்லியிருப்பேன். அக்னிசாக்ஷியாக மணந்த தம்பதிகளைச் சபதத்தின்மூலம் பிரித்து வைத்துவிட்டு இவன் வேசி லோலனாகத் திரிவதைக்கண்டு சகிக்காமல், நான் செய்தது உண்மை... அவரை விட்டுவிடுங்கள்'' என்று மூச்சுவிடாது கூறி கர்ஜனை செய்தாள்.

போலீஸ்காரர்கள் ஒருவர் முகத்தையொருவர் பார்த்தார்கள். குட்டியோ, காமு எத்தனை ஜாடைகள் செய்தும் "நான்தான் கொலை செய்தவன்; அவளில்லை. அவளை விட்டுவிடுங்கள்'' என்று கத்துகிறான். இன்ஸ்பெக்டர்இருவர்முகத்தையும்ஏறஇறங்கப்பார்த்தார்.

"சார்! இந்த விஷயத்தில் எனக்கு ஒரு பெரிய சந்தேகம் உண்டாகிறது. அச் சாமியாரிடம் இருவருமே வஞ்சம் வைத்துக் கொலை செய்திருப்பதாகத்தான் தோன்றுகிறது. தங்கம் எடுத்துத் தருவதாக ஏமாற்றி 5000 ரூபாயைக் கரைத்ததோடு பிரம்மச்சரிய விரதமனுஷ்டிக்கும்படி வாக்தானம் வாங்கியிருக்கிறாராம். அந்த வயிற்றெரிச்சல்களெல்லாம் சேர்ந்து இவன் க்ஷாத்திரப்பட நியாயமிருக்கிறது. தன் வாழ்க்கையில் மண்ணைப்போட்ட காரணத்தை இந்தம்மாளே ஒப்புக்கொள்வதால் இருவரும் சேர்ந்து செய்த சதிதான் இது என்பதில் சந்தேகமே இல்லை. நடவுங்கள்'' என்று அதிகார தோரணையில் கூறினர். ஒருவரையொருவர் தப்பவைப்பதற்காகச் சொல்லிய வார்த்தை இருவர் தலையிலும் விடிந்துவிட்டதை பெரிய அதிர்ச்சியாகக் காமு கருதவே இல்லை.

'நான்தான் கொலைக்கு முதல்காரணம். அந்த சாமியாரின் ஊழலை என் முதல்முதல் நான் காட்டவேண்டும். ஆகையால் உண்மையில் குற்றவாளிதான். எனக்கு எந்தவிதமான தண்டனையும்தகும்' என்று அவள் மனது நினைத்ததெனினும் குழந்தைகளின் அனாதைத் தன்மையின் பரிதாபத்தைமட்டும் தாயின் உள்ளம் சகிக்க முடியவில்லை.

அவைகளின் கதி எப்படியாகுமோ! மக்கள் மனிதர்கள் இருந்தும் இனிமேல் இந்தவிதமான கதி வந்தபிறகு அவர்கள் கண் முன்பு செல்வதைவிட அதன் விதிப்படி நடக்கட்டும் என்று மனத்தை வெகு பிரயாசைப்பட்டு முறியடித்துக்கொண்டாள்.

பெற்ற வயிறல்லவா! புத்திரவாத்ஸல்யத்தை மறைக்கவோ, மறக்கவோ, சிதைக்கவோ முடியுமா!

வயிற்றில் சங்கடம் அள்ளித்தின்கிறது. இந்த போலீஸ்காரர்களையும், ஏதோ பேசும் விவகாரத்தையும் கண்ட குழந்தை பயந்துபோய் அழுதபடியே தாயாரின் காலைக் கட்டிக்கொண்டது. காமு எத்தனை தைரியமாயும் ஞான வைராக்யமாயும் இருந்தும் அவள் இதயம் இடங்கொடுக்கவில்லை. குழந்தைகளை வாரியணைத்து முத்தமிட்டாள். கண்ணீரை ஆறாய் உதிர்த்தாள்.

கஷ்டப்பட்டு தைரியத்தை வருவித்துக்கொண்டு 'ஐயா! இந்தப் பச்சைக்குழந்தைகளை என்ன செய்யப்போகிறீர்கள்? அவர்களும் என்னோடுவரலாமா!' என்று சற்று இரக்கத்துடன்கேட்டாள்.

அதற்கு அதிகாரி "அதுசாத்யமற்றது.உங்கள்பந்துக்கள்யாரேனும் இருந்தால் விலாசத்தைக் கொடுங்கள். நாங்கள் ஜாக்ரதையாக அவர்களிடம் சேர்த்துவிடுகிறோம். அப்படியில்லையென்றால் அனாதை நிலயத்தில் சேர்த்துவிடுவோம்.இதைத் தவிர வேறுவழியில்லை" என்றார்.

காமுவின் இதயத்தில் பெரும் பாறைபோன்று வேதனை அழுத்தியபோதிலும் ஒரு சிறிது சாந்தி திடீரென்று உதயமாகியது. "ஐயா! எங்களுக்குப் பந்துக்கள் ஆண்டவனும் அகில ரக்ஷகியுந்தான். வேறு யாருமில்லை. இருப்பினும் அங்கு என் குழந்தைகளைவிட என்னிதயம் சம்மதிக்காது. ஆகையால் உங்கள் அனாதை நிலயத்திற்கொண்டு சேர்த்துவிடுங்கள். ஆயுள் இருந்தால் பிழைக்கட்டும் இல்லையேல் கொடும்பாவிகளின் வயிற்றில் பிறந்து அவதிப்படுகிறோமே என்று வருத்தப்படாமல் சாகட்டும்" என்று மனத்தை முறித்துக்கொண்டு கூறினாள்.

இரண்டு சேவகர்கள் இரு குழந்தைகளையும் தூக்கிக்கொண்டார்கள். வானத்தையளாவும்படி குழந்தைகள் கதறுகின்ற கோரத்தைக் கண்டு யாரால்தான் சகிக்கமுடியும்? குட்டியோ கல்லாய்ச் சமைந்த நிலையில் நடக்கிறான். காமுவும் ஒரு எந்திரம்போல் நடக்கிறாளேயன்றி 'அம்மா! அம்மா!' என்று அலறும் த்வனி அவள் காதையும் இதயத்தையும் துளைக்கிறது. சரீரம்மட்டும் அவர்கள் பின்னால் சென்றுகொண்டே இருக்கிறது. காலவிதி யாரை விட்டது?

26

சாரமற்ற வாழ்வு

உள்ளத்தில் அதீதமான உணர்ச்சி பொங்கி வரும்போது நிலைமை தடுமாறி எதற்கும் அஞ்சாது துணியும் தன்மையை உண்டாக்கிவிடுவது மனித சுபாவத்தின் முக்ய தத்துவமல்லவா! தன்னை மறந்து அயோமயமான நிலைமையில் மூழ்கிக்கிடக்கும் கமலாவுக்குத் தன் கணவன் மின்னல்போல் தோன்றி மறைந்த உடனே வண்டியிலிருந்து குதித்து விடலாமா! என்று கூடத்தோன்றியது.

சில விநாடிக்குள் தன் கணவன் தனக்கு விதித்துள்ள ஆணையின் நினைவு வந்ததும் சடக்கெனப் பின்வாங்கினாள். குழந்தைகளின் பரிதாபகரமான பிம்பம் அவள் இதயத்தைப் பின்னும் சிதறவடித்ததால் பேசாமல் கல்லுபோல் உட்கார்ந்துவிட்டாள். வண்டி போகும் வேகமோ, அசைவோ ஒன்றும் கமலாவுக்கு உறைக்கவேயில்லை. தன் எதிர்கால வாழ்க்கையின் பயங்கரம் தன்னை பிசாசுபோல் இழுத்துச் செல்கிறது என்று எண்ணினாள். அசையாப் பதுமைபோல் உட்கார்ந்த நிலையிலேயே எத்தனை நாழிகைக் கிடந்தாளோ! தெரியாது.

'கமலா என்னசெய்கிறாள். குழந்தைகளுக்கு என்னவேண்டும்?' என்று பார்க்கவந்த குருசாமி, கமலா புலம்பியபடியே உட்கார்ந்திருப்பதைக்கண்டு வருந்தியவாறு 'கமலா!'....என்று கூப்பிட்டான்.

சோமுவின் குரலும் இவன் குரலும் ஏறக்குறைய ஒரேமாதிரியாகவிருப்பதால் கமலாவைத் தூக்கிவாரிப்போட்டது. அலறியவாறு திரும்பிப் பார்த்து 'ஹா!...வந்தீர்களா?'...என்று குளறினாள். குருசாமிக்கு மனது குழம்பிப்போயிற்று...'நான்தான் கமலா!....உனக்கு என்னவேண்டும் என்று பார்க்கவந்தேன். குழந்தைகள் தூங்குகிறார்களா! இடம் சரியாயிருக்கிறதா! சோடா, கலர் ஏதாவது வேண்டுமா?' என்று கேட்டான்.

கமலா சற்று சமாளித்துக்கொண்டு 'எனக்கு ஒன்றும்வேண்டாம். எல்லாம் சௌக்கியமாயிருக்கிறது' என்று மரியாதையுடன் கூறினாள். அதோடு அவன் போய்விட்டான். அழுகையும் பெருமூச்சுமாக பிரயாணத்தை முடித்துக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தார்கள். துக்கம் விசாரிப்பதுபோல் பாலம் கமலாவைக் கண்டதும் பரிதாபத்தினால் புலம்பிவிட்டாள். "தங்கப் பதுமைபோன்ற உன்னைக்கூட விட்டுவிட்டு அந்த புத்திகெட்ட மனிதர் இப்படியுமா ஓடுவார்? என்ன அநியாயம்! உன்னை அடையாளமே தெரியவில்லையே கமலா!"...என்று விசனித்தாள்.

கமலாவுக்குத்தான் துக்கம் கூறவேவேண்டாம். பீறிக்கொண்டு வருகிறது. 'மன்னி! என்னுடைய பாவந்தான் இப்படி ஆட்டுகிறது. அவர்மீது குற்றமே இல்லை. என்னைக் காப்பாற்றுங்கள். கைவிடாதீர்கள். எனக்குத் தாய்தந்தை, உடன்பிறந்தார் எல்லாம் நீங்கள்தான். உங்களையன்றி எனக்கு வேறு கதி இல்லை. என்னைக் கடவுள் இம்மாதிரி சோதிப்பார் என்று நான் நினைக்கவே இல்லை. என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கல்லும் கரையும்படி கூறிப் புலம்பினாள்.

பாலம்பாளால் இந்த கோரமையைக்கண்டு சகிக்கவேமுடியாது உள்ளம் உருகியது. கமலாவைச் சேர்த்தணைத்துக்கொண்டு "அம்மா! அழாதே. புத்திகெட்ட எந்த மனிதரும் உருப்படமாட்டார்கள். சில காலம் அலைந்து திரிந்து நாய்போல் லோல்பட்டுவிட்டு மீண்டும் இங்கு சேர்வார். நீ விசனிக்காதே! என்னுயிர் உள்ள மட்டும் உன்னை நான் விடுவதில்லை. அழாதேம்மா! என் உடன் பிறந்த சகோதரி இறந்துவிட்டவள் எழுந்து வந்துவிட்டதாக நான்

எண்ணுகிறேன். வா குளித்துவிட்டுச் சாப்பிட வா....என்று தேறுதல் கூறினள்.

கமலாவை எத்தனை சமாதானம் செய்தும் அவள் உள்ளம் சாந்தியடையவே இல்லை. "மன்னி! உலகத்திற்கு என் காலக்கொடுமையின் மர்மம் என்ன தெரியும்? வாழாவெட்டி என்றுதானே என்னை நினைப்பார்கள், கூறுவார்கள், பரிகஸிப்பார்கள்! இவள் என்ன குற்றம் செய்தாளோ, அவன் ஓடிவிட்டான் என்று பழி கூறுவார்கள். எத்தனை இளைப்பத்திற்கு நான் ஆளாகிவிட்டேன் மன்னி! நான் எப்படி என் காலத்தைக் கழிப்பேன்? என்னுயுள் எப்போது முடியப்போகிறது. அவரை நான் நல்லபடி என்று கண்ணால் பார்ப்பேன்?" என்று கதறிவிட்டாள்.

பாலாம்பாள் வெகு பிரயாசைப்பட்டுச் சமாதானப்படுத்திப் பின்னர் அவளை குளிக்க அழைத்துச்சென்றாள். குழந்தைகளை வாரி அணைத்துக் கட்டி முத்தமிட்டு, உங்கள் துரதிருஷ்டந்தான் உங்கள் அப்பன் புத்தி இப்படி கெட்டுவிட்டது என்று விசனப்பட்டாள்.

இரவு ஸ்டேஷனில் சோமு கொடுத்த கடிதத்தை ரயிலில் படிக்கவே இல்லை. வென்னீர் உள்ளே குளிக்கச் சென்றபோது தான் அதைப் பிரித்துப் படிக்கவாரம்பித்தாள்.

"என் இன்பக்கண்மணி கமலா!

உன்னையும் குழந்தைகளையும் நீங்களறியாதவாறு நான் மறைந்து வந்து இராக்காலத்தில் கண்டு களித்துவந்தேன். நீ ஜாக்கிரதையாக ஊர்போய்ச் சேர்ந்தபிறகுதான் நான் ஊரை விட்டுப் போகவேண்டுமென்று இதுகாறும் இருந்தேன். நீ இன்று அண்ணாவுடன் போவதை அறிந்து பரம சந்தோஷப்படுகிறேன். அண்ணா சற்று முன்கோபக்காரன், அவன் ஏதாவது கோபித்துக்கொண்டாலும் நீ சாந்தத்தை இழக்காதே. அண்ணாவிடம் மதிப்பாயும் பயபக்தியாயும் இரு. மன்னியை உன் தாய் போல் எண்ணிக்கொள்ளு. அவள் மனங்கோணாது நடந்து அவளுடைய ஆதரவிலேயே இரு. காமுவைப்பற்றித்தான் ஒன்றுமே தகவல் தெரியவில்லை. எங்கேயோ ஓடிவிட்டதாகவும் ஒரு வதந்தி; ஏதோ பெரிய மோசத்தில் அகப்பட்டுக்கொண்டிருப்பதாயும் ஒரு புகார் கிளம்பியிருக்கிறது. ஆகையால் நீ எதைப்பற்றியும் கவலைப்படாதே.

கமலா! என்னைப்பற்றி கொஞ்சமும் விசனிக்காதே. நான் எங்கு போவேனோ, எங்கு இருப்பேனோ, என்ன செய்வேனோ! தெரியாது. ஒரு மகான், பரமஞானி, உத்தமர் என்றால் அவருக்கே தகும்; அத்தகையவர் வடக்கே எங்கேயோ இருக்கிறாராம். அவரிடம் மூலிகை ஔஷதங்கள் இருக்கிறதாம். நான் அவருடைய தரிசனத்திற்குப் போகப் போகிறேன். என் தலைவிதி சரியானதாகவிருந்தால் குணமாகி

வருகிறேன். இல்லையேல் விதி விட்டவழி ஆகட்டும். குழந்தைகள் ஜாக்கிரதை.

கமலா! உன்னுடைய மனோவலிமையை நான் அறிவேன். இருப்பினும் ராமசந்திரனுக்கு நீ செய்த தண்டனையும் அவன் புத்தி திருந்தியதையும் நான் அறிந்தபிறகு என் இதயம் ஆனந்த மயமாக மாறிப் பொங்கியது. ஏதோ எழுதவேண்டுமென்று ஆசை தூண்டுகிறது. ஆனல் என்ன எழுதுவதென்று தெரியவில்லை. ஏதோ பயித்தியம்போல் எழுதுகிறேன். நீ இதே கவலையுடன் இருந்து மெலிந்து வாடாதே. குழந்தைகளுக்கு நீதான் கதி. அதை மறக்காதே. என் அன்பையும் ஆசியையும் குழந்தைகளுக்குத் தெரிவி. குழந்தைகள் தாம் ஒரு வியாதிக்காரனின் குழந்தைகளா! என்று ஏங்கும் உணர்ச்சியைவிட எங்கப்பா ஓடிப்போய்விட்டாராம் என்கிற ஒரே உணர்ச்சியுடன் இருக்கட்டும், மேலே ஒன்றும் எழுதத் தெரியவில்லை. எப்போது பிராப்தமோ, அப்போது பார்க்கிறேன்.

இங்ஙனம்,
உன் அன்புக்குரிய
சோமு.''

கண்ணீர் வழிந்தபடியே இதைப் படித்துமுடித்தாள். துக்கம் தாங்காதுபொங்கிப் பொங்கிவருகிறது. என்ன செய்வாள் பாவம்! ''உலகத்தில் இம்மாதிரி கர்ம வியாதி எத்தனையோ பேர்களுக்கு வரவில்லையா? அவர்களெல்லாம் இப்படியா ஓடிவிடுகிறார்கள்? ஏதோ சரியா வைத்தியம் செய்தால் குணமாகவில்லையா! என் கர்மந்தான் அவரை விரட்டி அடித்ததோ!'' என்று ஏதேதோ எண்ணுவதற்குள் ''கமலா! இன்னும் ஸ்நானம் செய்தாகவில்லையா!'' என்று பாலம் இரண்டுதரம் குரல் கொடுத்துவிட்டாள்.

கடிதத்தை அப்படியே அடுப்பில் போட்டு எரித்துவிட்டு சடக்கென்று ஸ்நானத்தை முடித்துக்கொண்டுவந்தாள். சாமுவின் புதிய விஷயத்தைப் படித்தறிந்ததானது பின்னும் கொஞ்சம் கவலையாகவிருந்தது. ஏற்கெனவே இருக்கும் வேதனை போதும். இன்னும் புதிய வேதனை ஒன்று வராதிருக்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்தவாறு தன் வேலையைக் கவனிக்கச்சென்றாள்.

கமலா எப்போதுமே வேலை செய்வதற்குச் சளைக்கமாட்டாள். சுறுசுறுப்பாகச் செய்யும் சுபாவத்தையுடையவள். இப்போது கேட்கவேண்டாம் பாலம்மாளிடம் ஒரு வேலையும் காட்டாது,தானே சகலமான வேலைகளையும் செய்துவந்தாள். சுகமான சாப்பாடும், ஆதரவான மனிதர்களும் இருந்தும் கமலாவின் மனத்திற்கு தெம்போ, உத்ஸாகமோ இருக்குமா! சதா கவலை தோய்ந்த பார்வையும்,குழி விழுந்த கன்னங்களுமாக பரிதாபகரமான பிம்பம் போல் காணப்பட்டாள். அவளுடைய வாழ்க்கையில் சந்தோஷமென்பதே மறைந்தது.

27

தன்னிழல் தன்னை விடுமா !

எந்திரம்போல் சில மாதங்கள் ஓடிவிட்டன. கமலாவுக்கு இன்னும் பீதியையும், பயத்தையும் உண்டாக்குவதுபோல் எதிர் வீட்டில் ஒருவன் தற்கொலை புரிந்துகொண்டு தடபுடல் படுகின்றது. அந்த மனிதன், தனக்கு ஏதோ கொடிய வியாதி இருந்ததாயும், அது தன் மனைவிக்குப்பிடிக்காததால் தன்னோடு வாழமறுத்ததாயும், அவள் தற்கொலைபுரிந்துகொள்வதாக ஒரு சீட்டு எழுதி வைத்திருந்ததாம்.

இதைக்கேட்ட கமலாவுக்கு தூக்கிவாரிப்போட்டது. தன் கணவன் மனதும் இப்படித்தானே தவித்திருக்கும், அவன் தனது நல்லகாலத்திற்குத்தான் தற்கொலை செய்துகொள்ளாது இம்மட்டோடு ளுவது இருக்கிறான்'' என்று சற்று சமாதானமடைந்தாள்.

பாலாம்பாள் குழந்தைகளைத் தன் குழந்தைகளோடு வெகு அன்பாக வளர்த்து ஆசையுடன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி படிக்கவைத்தாள். கமலா, என்று தன் கணவன் விலகினனோ, அன்றே தலை பின்னுவதைவிட்டாள். அதிகப்படியான நகைகள் எதுவும் போடாது சாதாரணமான சில ஆபரணங்களே அணிந்து கொண்டு மிச்சத்தை பாலாம்பாள்கையிலேயே கொடுத்துவிட்டாள்.

சொந்தக்காரர்களின் வீட்டுக் கல்யாணத்திற்குக்கூட கமலா போவது கிடையாது. ஞான வைராக்கிய சிகாமணி என்றால் அவளுக்கே தகும் என்று பார்ப்பவர்கள் பிரமிக்கும்படி ஆகிவிட்டாள். குருசாமியும் குழந்தைகளிடம் வெகு அன்பாயும் வித்யாசமே இல்லாத மனப்பான்மையுடனும் பழகிவந்தான். அதிக செலவாவதைக்கூட அவன் பொருட்படுத்தவே இல்லை. அத்தனை பெருமையுடனிருப்பதைக்கண்டு பாலம்மாள் உள்ளம் பூரித்தாள்.

சில மாதங்கள்வரையில் கமலா தன் மனத்திற்குள் எத்தகைய சித்திரவதை செய்தபோதிலும் வேறுவிதமான கவலையற்று ஒரு வாறு இருந்தாள். குருசாமி குடியிருக்கும் இடம் ஒரு ரமணீயமான கிராமம்போன்றதாகும். வீட்டுக்கருகிலேயே வெகு அழகான ஆறும் அதைச்சுற்றித் தோப்புகளும் பசுமை நிறைந்த நிலங்களும், இயற்கைத்தேவியின் சிங்காரத் தோற்றம் மக்களின் மனத்தைப் பரவச மூட்டுவதாயிருந்தது.

குருசாமி தினம் 9 மணிக்கே சாப்பிட்டுவிட்டு பஸ்ஸில் ஆபீஸுக்குப் போய்விடுவான். மாலை ஆறு அல்லது ஏழு மணிக்குத் தான் வருவான். கமலா வீட்டு வேலைகளைச் செய்துவிட்டுத் தண்ணீர்மொண்டு வருவதற்கு ஆற்றங்கரைக்குச்சென்று பாத்திரங்களைத் தேய்த்து ஜலத்தை ரொப்பி வைத்துவிட்டு அவ்வாற்றங் கரையிலுள்ள கோயிலுக்குச்சென்று மனமுருகத் தோத்திரம் செய்து பிரதக்ஷண நமஸ்காரத்தை முடித்துக்கொண்டு கோயில் படிமீதே சற்று உட்கார்ந்திருப்பாள்.

தன் கணவன் எப்படியிருக்கிருனே, என்னவோ! என்று நினைத்துப் புலம்பிப்புலம்பி நேரம் போவதே தெரியாது உட்கார்ந்திருந்து பின் எழுந்து வருவாள். அம்மாதிரி ஒரு தினம் கோயிலில் நமஸ்காரம் செய்து வேண்டிக்கொள்ளும்போது, 'கமலா!' என்ற அமிருதம்போன்ற குரல் கேட்டு பகவானே தன்னை ஆசீர்வதிக்கும் பொருட்டுக் கூப்பிட்டதாகக்கூட ஒரு புத்துணர்ச்சி தோன்ற ஆனந்தத்துடன் நாலாபக்கமும் பார்த்தாள்.

இருட்டும் சமயமாகிவிட்டது. "கமலா!...யாருமில்லை பயப்படாதே. நான்தான் துரதிருஷ்டப் பிண்டம். உங்களைப் பார்க்காமல் என்னால் இருக்கவேமுடியவில்லை. கால் நடையாகப் பசித்தும் பட்டினி இருந்தும் வந்தேன். என் கண்மணிகளை தூரவிருந்து இரண்டுநாட்களாகப் பார்த்து உள்ளம் பூரிக்கின்றேன். உன்னையும் தூரவிருந்து பார்த்தும் திருப்தியடையவில்லை. நேரில் பார்க்க இந்த சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். பார்த்தாயிற்று. நான் போகிறேன்...கமலா!...இப்படிப் புலம்பினால் இருக்கிற சில விநாடியும் பேசமுடியாதுபோகிறதே"...என்று சோமு கண்ணீர்வழியக் கூறினன். ஆனல் அவன் கமலாவை நெருங்கிக்கூட வரவில்லை. அவனுடைய மிகவும் கோரமான பரிதாபத்தைக் கண்டு கமலாவால் சகிக்கமுடியவில்லை. அவள் இதயம் வெடித்துவிடும்போலிருக்கும் வேதனையில், சோமுவின் கால்களை அப்படியே கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு கோவெனப் புலம்பியவாறு, "இனி உங்களை விடவேமாட்டேன். என்னால் இந்த வேதனையைச் சகிக்கமுடியவில்லை. உலகத்தில் எத்தனையோ பேர்களுக்கு வியாதி வரவில்லையா! அவர்களெல்லாம் இப்படியா போகிருர்கள்? வைத்தியம் செய்தால் போகிறது. வேண்டாம்; வேண்டாம். இனி என்னைச் சோதனை செய்யவேண்டாம்...என்னால் பொறுக்கவே முடியவில்லை" என்று கண்ணீர் உதிர்த்தாள்.

தன்னைத் தொடுவதானது கொடிய பாம்பைத் தொடுவது போன்ற வேதனையும் சங்கடமும் சோமுவுக்கு உண்டாகி வதைக்கிறது. "நான் இம்மாதிரி முட்டாள்தனமாக இனி நேரில் வரவே கூடாது. வந்தால் அன்பே அமளியாகிவிடும். நம் தனி வாழ்க்கையின் லக்ஷ்யம் சிதறிவிடும். என் மௌனவிருதம் குலைந்துவிடும். மகாபாவி என்னைத் தீண்டுவதால் என் கர்மம் அவளையும் பிடிக்கும். ஆதலால் இனிமேல்வராதிருப்பதுதான் உசிதம்" என்றுதோன்றியது.

கமலாவைத்தான் தீண்டி அவளை விலக்க மனம் ஒப்பாது துடித்தவாறு "கமலா!....விலகி நில்லு. இந்தச் சண்டாளனைத் தொடாதே. இப்பாவியால் நீ அடைந்த பலன்போதும். இன்னும் வியாதியால் பீடித்துச் சாகவேண்டாம். நான் வருவதே பயித்தியக்காரத்தனமென்று எண்ணுகிறேன். நீ எனது உண்மையான நிழல் போன்றவளாயிருந்தால் என்னைக்காட்டிக்கொடுத்து என் மானத்தை வாங்காதே. நான் அவமானத்தினலேயே குன்றிப்போகின்றேன்.

உன்னைப் பார்க்காத விநாடிகளில் என்னுயிர் பறக்கிறது. சகிக்கவே முடியாது துடிக்கின்றேன். அதனால் வந்தேன். நீயும் குழந்தைகளும் சுகமாயிருந்தால் அதுவேபோதும் நான்வருகிறேன்...காலைவிடு ...விடு...என்றான்.

கமலா காலைவிட மறுத்து அவனைப் பின்னும் கெட்டியாகக் கட்டிக்கொண்டு போகக் கூடாதென்று கதறினாள். அதே சமயம் 'சித்தீ! சித்தீ!... அம்மாஉன்னைத் தேடுகிறாள்'' என்றுபாலாம்பாளின் மகன் தேடிக்கொண்டு வந்ததையறிந்த சோமு நடுநடுங்கிப்போய் கமலாவைத் தீண்டக் கூடாதென்கிற ப்ரதிக்ஞைகூட மாறிப்போய் அவளைத் தூக்கி நிறுத்தி முகத்தோடு முகம் சேர்த்து அணைத்துக் கொண்டு "கமலா! நான் வருகிறேன்...நீயும் குழந்தைகளும் ஜாக்ரதையாயிருங்கள். நான் வருகிறேன்'' என்று கூறியவாறு ஓடி ஒரே நொடியில் தோப்புக்குள் மறைந்துவிட்டான்.

கமலாவுக்கு எத்தனையோ ப்ரியமான பையனே இப்போது விஷம்போல் அவளுக்குத் தோன்றியது. "இந்த பையன் இப்போது ஏன் வரவேண்டும்? பூஜை வேளையில் கரடி புகுந்ததுபோலாகி விட்டதே. அவரை இனி எப்போது பார்ப்பது?" என்று தவித்தாள்.

கமலா, ஸ்வாமிதரிசனம் செய்யும் பாவனையில் ஸன்னிதிக்கு முன்பு கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக்கண்டு, வந்த பையன் சிரித்துக்கொண்டே நின்றான். கமலா சில விநாடிகள் கண்ணைத்திறக்கவேயில்லை. கண்ணில் கண்ணீர்வழிகிறதுமட்டும் நிற்கவேயில்லை. பின்னாலேயே பாலாம்பாளும் தேடிக்கொண்டுவந்தாள்.

கமலாவின் சமாதி நிலைமையைக் கண்டு மனது உருகியது. அவளது இதயத்தின் தத்தளிப்பை அறிந்து வருந்தி, "கமலா! இதென்ன தபஸ்?...எழுந்து வாம்மா! மணிபோவதே தெரியாமல் தன்னந்தனியே உட்கார்ந்திருப்பதைக் கண்டு சகிக்கமுடியவில்லை. வாம்மா! எழுந்திரு'' என்று கையைப் பிடித்துத் தூக்கினாள்.

கமலாவின் சரீரம் வெயர்த்து சில்லிட்டிருந்தது. படபடவென்று இதயம் அடித்துக்கொள்ளும் வேகத்தில் பேசக்கூடத் தெரியவில்லை. 'என் பிரார்த்தனைக்கு இறங்கி கடவுள் அவருடைய தரிசனத்தையாவது திடீரென்றுகொடுத்து எனக்குச் சந்தோஷத்தை உண்டாக்கினாரே! அதுவே நான் செய்த பாக்யந்தான்' என்று மனத்திற்குள் எண்ணி பதுமைபோலக் கிளம்பினாள்.

தோப்புக்குள் மறைந்த சோமு உடனே அவ்விடத்தைவிட்டுப் போயிருக்கமாட்டான் என்று கமலாவின் மனத்தில் ஏதோ ஒன்று சொல்கிறது. தோப்பின் பக்கமே கமலாவின் கண்கள் வட்டமிடுகின்றன. பாலாம்பாளோ கமலாவிடம் அனுதாபத்துடன் அவளை அன்பாகத் தடவியவாறு "உம், என்ன செய்வது? ஒவ்வொரு குடும்பத்திற்கு ஒவ்வொருவிதமானபீடைபீடிக்கிறது. ஸ்ரீமகாலக்ஷ்மியைப் போன்றுள்ள உன்னை விட்டுவிட்டுப் போகவேண்டுமென்றுகூட அப் பாவி மனுஷனுக்குத் தோன்றியதே! நான் சோமுவை

மகா புத்திசாலி. ரஸிகன், ஏக பத்தினிவிருதன், யோக்யன் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டினேன். அவரைப்போன்ற சோதா உலகத்திலேயே இல்லை என்று காட்டிவிட்டார்'' என்று ஆவேசத்துடன் கூறிய வார்த்தைகள் கமலத்தின் இதயத்தில் பாணம்போல் பொத்தித் துளைக்கின்றன.

தோப்பில் இருள் சூழ்ந்திருப்பதால் அதில் ஒண்டிக்கொண்டுள்ள சோமுவின் காதில் இந்த வார்த்தைகள் விழுந்ததும் அவன் சரீரமே கிடுகிடென்று நடுங்கியது. "ஆம்! மன்னி சொல்வது வாஸ்தவம். நான் மகா அயோக்யன்; கிராதகன். என் கண்மணிகளை விட்டுப் பிரிந்தும் உயிர் வாழுகிறேனே! எனக்கு இந்த வார்த்தைகளும் போதாது. இன்னும் சொன்னாலும்போதாது. ஏதோ என் கமலா சந்தோஷமாய் சரியான ஆதரவிலிருந்தால்போதும்'' என்று தனக்குள் எண்ணினான்.

கமலாவுக்கோ, தோப்புக்குள் மறைந்த சோமுவை மறுபடியும் பார்த்து அவனுக்கு ஆகாரமாவது கொடுத்து கையில் பணமிருக்கிறதா என்று விசாரிக்கவேண்டுமென்று அடித்துக்கொள்கிறது. என்ன செய்வாள் பாவம்! "பாலாம்பாள் கூப்பிடும்போது போகாவிட்டால் அவள் என்ன நினைப்பாளோ'' என்று பயமுண்டாகியது.

சில விநாடிகள் அப்படியே குழம்பினாள். பிறகு தைரியமாகப் பேசத்தொடங்கி, "மன்னீ! தயவுசெய்து நீங்கள் வீட்டிற்குப் போங்கள். நான் இன்னும் சற்று நேரம் இங்கு நிம்மதியாக உட்கார்ந்து பின் வருகிறேன். எனக்கு ஏதோ மனது தாங்கமுடியாது சங்கடம் செய்கிறது. இந்த ஸ்வாமி சன்னிதியில் உட்கார்ந்திருந்தால் சிறிது ஆறுதலாகவிருக்கும். தயவுசெய்து என்னைவிட்டுப் போங்கள். இந்த பகவான் சன்னிதியில் எனக்குப் பயமில்லை. என் ஆண்டவன் இங்கிருக்கிறான்'' என்று சிலேடையாகக் கூறினாள்.

பாலம் விட்டுப்போகும் வழியேயில்லை. "உனக்குத் துணையாக நானும் உட்கார்ந்திருக்கிறேன். உன்னிஷ்டம்போல் இருந்துவிட்டு வா!'' என்று கூறியவாறு அவள் ஒரு கல்லாசனத்தின்மீது உட்கார்ந்தாள். அதற்குமேல் கமலா என்ன செய்யமுடியும்? சற்று நேரம் தயங்கிப் பார்த்தாள். விதி செய்யும் விளையாட்டில் இதுவும் ஒன்று என்று மனத்தைத் தேற்றிக்கொண்டு, "ஆண்டவனே! ஷண்முகா! நாளைக்கும் எனக்கு இதே இடத்தில் காக்ஷி கொடுத்தால்தான் என் உயிர் தரிக்கும்; இல்லையேல் ஊசலாடி ஒழிந்தாலும் ஒழியும்'' என்று வாய்விட்டு உரக்க சிலேடையாகக் கூறினாள்.

பாலாம்பாளுக்கு வியப்பாகவிருந்தது. 'என்ன கமலா! சதா கோயிலில்வீற்றிருக்கும் ஸ்வாமியைசேவை கொடுக்கவேண்டுமென கேட்கிறாயே! என்ன விஷயம்?' என்று ஆச்சரியத்துடன்கேட்டாள்.

கமலாவுக்குச் சிறிது குழப்பமாகிவிட்டது. என்ன பதில் சொல்வதென்று யோசித்தாள். பிறகு "மன்னீ! ஏதோ பயித்தியம் போல் உளறுகிறேன். பயித்தியத்தின் வார்த்தைக்கு நீதியோ,

நிர்ணயமோ சொல்லமுடியுமா! கடவுள் என்னிடம் நேரில் பேச வேண்டுமென்று எனக்கு ஆசை துடிக்கிறது. நேரில் பேசி என் கையால் ஒருபிடி அன்னம் வாங்கி உண்டு 'நீ பயப்படாதே' என்று என்னைத் தடவிகொடுத்தால் என் உள்ளம் குளிர்ந்துவிடும். அவர் பட்டினி கிடப்பதாகவும் நாம் புசித்துக் கொழுப்பதாகவும் எனக்கொரு தோற்றம் உண்டாகிறது. அதனல் அப்படிச் சொன்னேன்' என்று தன் கருத்தை, ஒருவேளை சோமு அங்கிருந்தால் தெரிந்து கொள்ளட்டும்'' என்றுதான் கூறினள்.

பாலாம்பாளுக்குப் பரிதாபமாயிருந்தது. 'உம். பயித்தியக்காரப் பெண்ணே! உன் பரிசுத்தமான மனத்திற்கு பகவான் உன்னை எப்படித்தான் சோதிக்கிருர்? பகவானு பட்டினி கிடக்கிருர்? இல்லே. இல்லே. அவர் கண்டவிடமெல்லாம் உண்டு உப்புகிருர். நீ அவருக்காக ஏன் வருந்துகிருய்? வாம்மா!'....என்று கமலாவைக் கைவிடாது அழைத்துக்கொண்டு போய்விட்டாள்.

கமலாவின் மனது பகீர் என்கிறது. எல்லாம் பராதீனமாயிருக்கிறதே. அவரைப் பார்த்தும் பார்க்காதவள்போலவே என் கதி ஆகிவிட்டதே. இனி எப்போது காண்பேன்?'' என்று ஏங்கியவாறு வீட்டிற்குவந்தாள். ஒரு வேலையிலும் மனது ஓடவே இல்லே. அப்படியே பிரமைபிடித்தவள்போல் நின்றுவிட்டாள். எண்ணற்ற யோசனையில் மனது குழம்பித் தவிக்கின்றது.

எந்த இடத்தில் பார்த்தாலும் தன் கணவன் நிற்பதுபோன்ற ஒரு தோற்றம் உண்டாவதில் 'திடும்திடும்' என்று நடுங்கச் செய்கிறது. "அவர் சாப்பிட்டு எத்தனை நாளாயிற்ருே!'' என்று நினைக்கும் போது அவளால் தாங்கமுடியாத துக்கம் பொங்கி வந்துவிட்டது.

28

பரிதாபம்! பரிதாபம்!! பார்க்கொணு பரிதாபம்!

தாடியும் மீசையுமாகக் காட்டுமிராண்டியைப்போல் பார்ப்பதற்குப் பயங்கரமாயிருக்கும் சோமுவை திடீரென்று கமலா பார்த்தால் கூட அடையாளமே தெரியாது ஏமாந்தே போய்விடுவாள். அவனுகக் கமலா என்று கூப்பிட்டதனுல்தான் அவள் சந்தேகமறத் தெரிந்துகொண்டாள். தோப்புக்குள் நின்ற சோமுவுக்கு கமலாவின் வார்த்தைகளின் ச்லேடை நன்கு புரிந்தது. எனினும் எப்படி அவள் கையால் சாப்பிட முடியும் என்று துக்கித்தான்.

அந்த தோப்புக்குள் இரவை வேண்டுமானுல் கழிக்கலாம். பகல் பொழுதை எவ்வாறு கழிக்கமுடியும்? இரவோடிரவாக எங்கேனும் ஓடிவிடுவதுதான் உசிதம் என்று சோமு முடிவு கட்டிக்கொண்டு கமலா சென்ற திக்கையே பார்த்துக்கொண்டு நின்ருன்.

ஏக்கமும் பெருமூச்சும் தவிர வேறு என்ன லாபம்! தான் இப்படி சாகாப்பிணமாகவிருப்பதைவிட செத்துவிடுவதே மேலென்றுகூட தோன்றியது.

உண்மையில் அவன் சாப்பிட்டு எத்தனையோ நாளாகியது. பசி வயிற்றில் அள்ளிப்பிடுங்குகிறது. என்ன செய்வதென்று தோன்றாமல் சற்றுநேரம் திகைத்தான். ஆற்றில் இரண்டு கைகள் தண்ணீரைக் குடித்துவிட்டு அந்த கோயிலிலேயே அப்படியும் இப்படியும் உலாவினான். மனது மிகவும் தத்தளித்ததால் மெல்ல தைரியமாக தன் வீட்டுப் புறக்கடைப் பக்கம் போனான்.

கமலா கிணற்றில் தண்ணீர் தூக்குவதற்குப் பின்புறம்வந்தாள். இருட்டோடு இருட்டாய் மரத்தின் மறைவில் நின்ற சோமு கமலாவைப் பார்த்ததும் பேசமுடியாதபடிக்குத் தவித்தான். பாலம்மாள் கூட தணைக்கு விளக்குடன் நின்றிருப்பதால் பேசாமலிருந்தான். கமலா கதவையும் போட்டுக்கொண்டு போய்விட்டாள்.

பகல் வேளையில் வயல் காடுகளில் சுற்றுவது. இரவு தூரவிருந்து குழந்தைகளையும் கமலாவையும் பார்த்து உள்ளுக்குள் ஆனந்திப்பது. இம்மாதிரி சில தினங்கள் போக மனமின்றி அங்கேயே சுற்றி வந்தான். ஒருநாள்கமலா ஆற்றங்கரைக்குவரும்போது கூடவே வந்த குழந்தையை அவள் கவனிக்கவே இல்லை. ஏதோ மனக்குழப்பத்தில் கோயிலுக்குப் போய்விட்டுத் தண்ணீர் குடத்துடன் வீட்டிற்குப் போய்விட்டாள்.

இரவு சாப்பாட்டு நேரத்தின்போதுதான் கமலாவின் குழந்தையைக் காணவில்லை என்று வீடெல்லாம் தேடவாரம்பித்தார்கள். கமலாவுக்கு ஏற்கெனவே உள்ள மனோவேதனையில் குழந்தையையும் காணவில்லை என்றதும் அவள் உயிரேபோய்விடும் போலாகிவிட்டது. "ஆற்றில் விழுந்திருக்குமோ! கிணற்றில் விழுந்திருக்குமோ! எப்படி போயிருக்குமோ! திருடர்கள் தூக்கிச் சென்றுவிட்டார்களோ!" என்றெல்லாம் மூலைக்கு மூலை அலைகிறார்கள்.

கமலா ஒரே கல்லாகச் சமைந்தவள்போலாகிவிட்டாள். அச்சமயம் பக்கத்து வீட்டுப் பையன் ஓட்டமாக ஓடிவந்து "மாமீ! குழந்தை அகப்பட்டுவிட்டது. நல்ல வேளை பிழைத்திருக்கிறது. யாரோ ஒரு பெரியவ்யாதிப்பிடித்த பிச்சைக்காரன் ஒருத்தன் குழந்தையை வயலில் பார்த்து எடுத்து வருவதாயும் குழந்தையுடன் கொஞ்சிக் குலாவிக்கொண்டும் இருப்புதை எங்கப்பா பார்த்து அந்த திருடனை நன்றாக அடித்து விரட்டிவிட்டுக் குழந்தையை எடுத்துவருகிறார்கள் என்று சந்தோஷத்துடன் சொன்னான்.

இதைக்கேட்ட கமலத்தின் உயிர் துடிக்கின்றது. 'என்ன! வ்யாதிக்காரப் பிச்சைக்காரனா! எங்கே என் குழந்தை?' என்று கூறியவாறு அந்த பையனுடன் ஓடினாள். ஆற்றங்கரைக்குப் பக்கத்திலேயே சிலர் கும்பல் கூடி தபால் திபால் என்று அடிப்பதைக் கண்டுச் சகியாமல் கூட்டத்தைக் கலைத்துக்கொண்டு பார்த்தாள்,

என்னே பரிபவம்! கமலா நினைத்தபடியே தன் கணவனையே எல்லோரும் சேர்ந்து நொக்குநொக்கென்று அடிப்பதையும் "ஐயா! நான் காப்பு திருடவில்லை. சாமீ! குழந்தை வயல் காட்டில் வழி தவறி வந்ததை நான் பரிதாபத்துடன் எடுத்து வந்தேனேயன்றி எனக்கு ஒன்றுமே தெரியாது சாமீ!...ஆண்டவனே!...ஆண்டவனே!..."என்று அடியின் பாதை தாங்காது யானைபோல் வீறிடுவது கண்டு கமலாவுக்கு மூர்ச்சையே போட்டுவிடும்போலாகிவிட்டது.

குழந்தையை வாரி எடுத்துக்கொள்ளவும் அவள் மனது விரும்பவில்லை. குழந்தையின் காப்பு களவு போய்விட்டதை அறிந்த கமலா அதற்காகத்தான் தன் கணவனை இம்சிக்கிருர்கள் என்பதை உணர்ந்தும் அவள் நிலைமை எப்படித்தானிருக்கும்? தன் குழந்தையைத் தான் காப்பாற்றியதற்கு இத்தனை தண்டனையா! ஐயோ! அவருடைய குழந்தைதான் இது என்று சொல்லிவிடட்டுமா!என்று கூட நினைத்தாள். சோமுவின் ப்ரமாணம் நினைவிற்கு வந்து அவள் ஆவலைத்தடுத்தது.உடனே ஆவேசம் கொண்டவளைப்போல்"அவரை அடிக்காதீர்கள். அடிக்காதீர்கள். நான் காப்பைக் கழட்டி வைத்திருக்கிறேன். அவர் திருடவில்லை. அவரை அடித்துக்கொல்லாதீர்கள்...ஐயா! என் குழந்தையைக் காப்பாற்றியதற்காக மிக்க வந்தனம்" என்று கூறி சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்தாள்.

கமலாவின் அந்தராத்மாவின் தவிப்பிற்கு இந்த வந்தனம் ஒரு கடுகத்தனை சாந்தியுண்டாக்கியது. அருகிலிருப்பவர்களுக்கு இச்செய்கை பெருத்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. சோமுவின் உடம்பையும் அடித்த அடியில் ஒழுகும் ரத்தக் கசிவையும் கண்டு அவளால் சகிக்கவே முடியவில்லை. கமலாவின் தவிப்பின் உச்சத்தை சோமு நொடியிலறிந்துகொண்டான். அவள் எங்கே தன்னைக் காட்டிவிடுவாளோ! என்கிற பயத்தினுல் கும்பலிலிருந்து மெல்ல நழுவிவிட்டான். கமலாவுக்குக் கூறத்திறமற்ற வேதனைசெய்கிறது.

ஆனல் அங்கு கூடியிருப்பவர்களோ, "திருட்டுப் பயல். மூஞ்சியே பாரு. ஜெயிலிலிருந்து வெளியில்வந்த கேடியைப்போல் விழிக்கிருன். இன்னும் நன்ருக நொறுக்கி இருப்பேன் சார்! வ்யாதி பிடித்த சனியனுகவிருப்பதால் சற்று அஞ்சினேன். காப்பை அவன்தான் கழட்டியிருப்பானென்றே தீர்மானித்தேன். அது இல்லை என்று தெரிந்ததால் சும்மா விட்டேன்...

காலம் வரவர கெட்டுவிட்டது. அக்ரமத்தின் விளைவால் பஞ்சம் அதிகமாகிறது. சாப்பாட்டுக்கு தரித்திரம் பிடுங்கித்திங்கறது.எந்தப் பயல்களையும் இப்போது நம்பவே கூடாது. எல்லாம் திருட்டு ராஸ்கல்கள்...என்று தம்தம் மனம் போனவாறு திட்டுவதைக் கேட்கக் கேட்க கமலா நினைவு தடுமாறிவிழுந்துவிடுபவள்போலானதால் குழந்தையைக்கூடஎடுத்துச்செல்லமறந்து அப்படியேவீட்டிற்குவந்தாள்.

குருசாமி ஆபீஸிலிருந்து அப்பதான் வந்து இந்த தடபுடலை யறிந்து அவனும் ஓடிவந்தான். அதற்குள் அங்கு கூட்டங் கலைந்துவிட்டதால் குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தான். கமலாவின் உள் அந்தரங்கம் யாருக்குத்தெரியும்? மனவேதனையைப் பொறுக்க முடியாமல் படுத்துவிட்டாள்.

"என் கண்முன்பாகவே என் கணவருக்கு இத்தகைய விபத்தும் வரவேண்டுமா! ஐயோ! ஏற்கெனவே உடம்பிலிருக்கும் பாதையின் உபத்திரம் போதாமல் அடித்துக்கொன்றுவிட்டார்களே! அவருடைய ஆத்மா என்ன துடிக்கின்றதோ! அவர் எந்த கதியிலிருக்கிறாரோ! நான் மகா பாவத்தைச் செய்திருப்பதனால்தான் என் கண்முன்பு அவர் அடிபடவும் என் காது கேட்க வ்யாதிக்காரன், பிச்சைக்காரன், திருடன் என்றெல்லாம் சொல்லக் கேட்கவும் விதியமைந்தது. இத்தனைக்கும் காரணம் நான் அந்த வ்யாதிக்காரியை இகழ்ந்து மனது வெடிக்கும்படி பேசியதுதான் வேறு ஒன்றுமில்லை என்று குமுறுகிறாள்; புலம்பித் துடிக்கிறாள். எது செய்து என்ன பலன்? வெளியில் சொல்லிக்கொள்ளமுடியுமா! அச்சம்பவத்தை எண்ணிப் பாகாயுருகினாள். இதுகாறும் இருந்ததைவிட இந்த பரிதாபகரமான சம்பவத்திற்குப் பிறகு அவளுடைய நிலைமையே மாறியது. ஒருவேளைதான் சாப்பிடுவது என்ற வ்ருதம் எடுத்துக்கொண்டாள். யார் என்ன சொல்லியும் கமலா தினம் ஒருவேளை சாப்பாட்டுக்கு மேல்சாப்பிடுவதில்லைஎன்று பிடிவாதம்செய்துவிட்டாள். "தன்வந்திரியை வைத்துப் பூஜை செய்து அந்த வ்ருதம் முடியும்வரையில் ஒரு பொழுது உண்பதாக சங்கல்பம் செய்திருக்கிறேன். என்னைநிர்ப்பந்தம் செய்யக்கூடாது" என்று கடவுள்மீதும் வ்ருதத்தின்மீதும் பாரத்தைப்போட்டுவிட்டதால் ஒருவரும் ஒருவிதமானதடங்கலும்சொல்ல முடியாது போயிற்று. கமலாவின் மனோரதமும் நிறைவேறியது.

29

விலக்க முடியாத விதிப் பழம்

உலகம் எப்படி நிலையில் நிற்காமல் சுற்றுகின்றதோ, அதேபோல் உலகத்திலுள்ள மக்களின் மனமும் எங்கோ ஒரு சிலரைத் தவிர மற்ற பேருக்கு அவர்களே யறியாதவாறு விசித்திரமாக மாறுவதும் அதற்குத் தக்க நன்மையும் தீமையுமான பலன்கள் உண்டாவதும் சகஜமாகிவிட்டது.

இதுவரையில் மகா யோக்யனையும் உத்தமனையுமிருக்கும் மனிதன் அவனையறியாது சீட்டாட்டத்தில் பணத்தை வைத்துஆடவும், குதிரைப்பந்தயத்தில் ஆடவும் ஆசை உண்டாகிறது. அனைப் பசங்

களைக்காப்பாற்றும் பொறுப்பு ஒருவனுக்குண்டானால் அவர்களின் போஷணைக்கு வைத்துள்ள பணத்தைச்சாப்பிடவும் மனது துணி கிறது. சிலருக்கு என்றுமில்லாது திடீரென்று பிறருக்குத் தீமை செய்யவும், திருடவும்கூட துணிபு வந்துவிடுகிறது. அதேபோல் குருசாமி எத்தனையோ உத்தமன். எவ்வளவோ நல்ல குணங்கள் உடையவன். தயாளமும் பச்சாத்தாபமும் கொண்டொழுகுபவன் எல்லாமிருந்தும் யாருடைய துரதிருஷ்டத்தின் சாயலோ அவன் மனத்தில் ஒரு சிறிய களங்கம் உண்டாகிவிட்டது.

கமலாவை அவன் முதலில் வெகு பிரீதியாயும் சாதாரண மனோ பாவத்துடனும் நோக்கினான். நாளடைவில் கமலாவின் அழகும், பொறுமையும், உத்தமகுணமும் ஒன்றுகூடி அவனை மேலான கண்ணிய வழியில் செல்லவிடாது கேவலமான மனோபாவத்தை உண் டாக்கி அதுவே ஒரு நோய்போல் உள்ளுக்குள் வளர்ந்துவரத் தொடங்கியது. இந்த ரகஸியம் அவனையன்றி வேறு யாரறியமுடியும்.

கமலாவை ஓயாமல் பார்ப்பதிலும், அவள் பேச்சுக் கேட்ப திலும், அவள் கையால் அன்னம் புசிப்பதிலும் பரமப்பிரீதிகொண்டு அதிலேயே ஆனந்தப்பட்டு வந்தான். இந்த மனமாற்றத்தின் வேகத்தை எத்தனையோ பிரயாசைப்பட்டு மறக்க முயன்றும் அவ னால் முடியாதுபோயிற்று. தான் செய்வது குற்றம். மகா பாதகம் என்று அவன் மனதில்படாமலில்லை. இருந்தும் அவ்வெண்ணம் தான் மேல்நோக்கி ஓங்கி வளர்ந்ததேயன்றி குறையவில்லை.நாளுக்கு நாள் அதிகரித்த மனோவிகாரம் உண்டாகியதன் பலனால் வெறி பிடித்தவன்போல் மாறுதலுடன் காணப்பட்டான். கமலாவோ, குருசாமியைத் தன் தகப்பனென்றே எண்ணி இருக்கிறாளேயன்றி மைத்துனன் என்றுகூட நினைக்கவில்லை. மரியாதையுடன் அவன் கேட்டதற்குப் பதில் சொல்லிவந்தாள்.

பாலாம்பாளுக்கும் தன் கணவனின் விஷமத்தனம் தெரியவே தெரியாது. கமலாவிடம் களங்கமற்ற அன்புடனிருப்பதாகவே எண்ணியிருப்பதால் அவள் அடிக்கடி தன் தாயார் வீட்டிற்கும் மற்ற இதர உறவினர்களின் கல்யாணங்களுக்கும், கமலாவையும் தன் பெரிய பசங்களையும் விட்டுவிட்டுப் போய்வருவாள்.

இன்று பாலாம்பாளின் சகோதரி தவறிவிட்டாள் என்ற தந்தி வந்ததும் உடன்பிறந்த வாஞ்சையால் புலம்பிக்கொண்டே ஊருக்குக் கிளம்பிப்போனாள்; கூட குருசாமியும் போனான்.

ஆனால் அவன், மரணச்சடங்கு முடிந்தவுடனே வந்துவிட்டான். பாலாம்மாள் மட்டும் மற்ற க்ரியைகள் ஆகும் வரையில் இருந்து வருவதாகக் கூறினாள். எவ்விதமான கலக்கமும் இல்லாத கமலா வுக்கு தன் மைத்துனர் வந்தது பெரிய துணை வந்ததாக் தைரியமும் தெம்பும் உண்டாயிற்று.

18366.

எப்போதும் சிறிய பசங்களுக்கு முதலிலும், பிறகு பெரிய பசங்களுக்கும் பெரியவர்களுக்கும் ஒன்ருகவும் சாப்பாடுபோடுகிற வழக்கம். அன்றும் கமலா அப்படியே இலை போட்டாள். குருசாமி 'நான் சற்று கழித்து வருகிறேன்; குழந்தைகளுக்கு முதலில்போட்டு விடு' என்ருன். கபடமறியாத காரிகை அப்படியே செய்தாள். கடைசியில் குருசாமிவந்தான். கமலா பரிமாறிவிட்டு சமையல் உள்ளேயே மறைவாய் வழக்கப்படி நின்ருள். சாப்பாட்டை ஒப்புக்குக் கலந்து கிளறிக்கொண்டே உட்கார்ந்திருக்கும் குருசாமி 'கமலா!'... என்று அவனை யறியாமல் கூப்பிட்டான்.

தலை குனிந்தபடியே உள்ளே நிற்கும் கமலா 'ஏன் ?' என்ருள். மேலே என்ன பேசுவதென்று தெரியாது திகைத்தான். பிறகு சற்று சமாளித்துக்கொண்டு, "ஒன்றுமில்லை. நீ இம்மாதிரி ராப்பட்டினி கிடப்பதுதான் எனக்கு மிக்க விசனமாக இருக்கிறது. நீ பட்டினி கிடந்து உடம்பைக் கெடுத்துக்கொண்டால் உன் குழந்தைகளுக்கு திக்குவேண்டாமா ?"...என்ருன்.

இதுகாறும் இப்படித் தனித்துப் பேசியறியாத மனிதன் கேட்டதால் அன்பு மிகுதியால் கேட்பதாக எண்ணி, "உம்...நான் என்ன அவர்களுக்குச் சதமா ! என்னைக் கண்டுதானு அவர்கள் வாழ்நாள் நடக்கப்போகிறது ? அப்பேர்பட்ட தகப்பனுரே விலகியிருக்கும் போது நான் எம்மட்டும்? படைத்த பகவானிருக்கிருன். மரம்வைத்த வள்ளல் தண்ணீர் வார்க்கக் கடமைபட்டிருக்கிருன். நீங்களெல்லாந் தானிருக்கிறீர்கள், அவர்களுக்கென்ன குறைவு ? எனக்கும் அம்மாதிரி ஒரு நல்லகாலம் பிறக்குமா என்றுதான் எதிர்பார்க்கிறேன்" என்று கூறும்போது கமலாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு வார்த்தை தடைபட்டுவிட்டது.

குருசாமிக்கும் மனது குழம்பிப்போய் திண்டாட்டமாகியது. "கமலா ! இம்மாதிரி சொல்லாதே. என் மனது கொதிக்கிறது. அந்த மடையன் என் கண்முன்பு அகப்பட்டால் அவனை நான் அடித்தே போடுவேன். கிடைத்தற்கரிய மாணிக்கம்போன்ற உன்னைவிட்டுப் பிரிய அந்த அல்பனின் மனது துணிந்ததே. அவனைச் செருப்பாலடிக்கவேண்டும்" என்று கூறியதைக் கேட்க கமலாவின் மனது துடிக்கின்றது. அவள் ஆவி அப்போதே போய்விடுமோ என்றுகூட ஆகிவிட்டது. "இனி என் காது கேட்க அவரை யாரும் திட்டவேண்டாம். என்னுடைய கர்மாதான் அவரை அம்மாதிரிச் செய்துவிட்டது. அதற்கு அவர் என்ன செய்வார்" என்ருள்.

குரு:—உம்...உன்னுடைய பொறுமையையும், ஆழமான அன்பையுங் காணக்காண என் உள்ளம் உருகுகிறது. கமலா!...நேற்று நான் ரயிலில் வரும்போது தாடியும் மீசையும் அழுக்கு உடையுமாக பயங்கரத் தோற்றத்துடன் ஒரு குஷ்டரோகி பிச்சை எடுத்துக்

கொண்டே "அருமருந்து" என்ற பாட்டைப் பாடினன். சோமு சிறிய வயது முதல் அதை பாடுவான்; நீயும் கேட்டிருக்கலாம். அதையே அவன் பாடியபோது எனக்குத் தூக்கிவாரிபோட்டது. சோமுவின் குரல்போலவே இருந்தது...உம். அதே பாட்டை மறுபடியும் அவன் பாடக் கேட்கப்போகிறேனு என்றிருக்கிறது'என்று குருசாமி கூறும்போது கமலாவுக்கு இன்னதென்று விவரிக்கமுடியாத வேதனை செய்கிறது.

'என்ன! பிச்சை எடுக்கிறுரா! ரயிலில் பாட்டுப்பாடி பிச்சை எடுக்கிறுரா! ஐயோ! காலக்கொடுமையே!...விதியே...உன் ஆக்ஷியின் பயங்கரத்தில் நீ செய்யாத சித்திரவதை, நீ ஆட்டிவைக்காத ஆட்டம் இல்லையா!'என்று கண்ணீர்வடித்துப் புழுவாய்த்துடித்தாள்.

வீட்டு வேலைகள் முடிந்ததும் பசங்களுக்குப் படுக்கையைப் போட்டுப் படுக்கச்செய்து பின் தானும் தன்னறையில் தன் பசங்களுடன் படுத்தாள். வெகு நேரம்வரையில் கமலாவுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அழுது அழுது கண்களும் வீங்கிவிட்டன. எழுந்து உட்காருவது, நிற்பது, உலாவுவது, படுப்பதுமாகத் திண்டாடிய பிறகு தன்னை மறந்து கண்ணயர்ந்தாள்.

ஜெயா வெளியில் குழாயருகில் போய்விட்டு வந்து மறதியால் கதவைத் தாளிடாமல் தூங்கிவிட்டதை, கமலா தூங்குவதால் அறியவில்லை. குருசாமியோ, அவன் விடுதியில் தத்தளிக்கின்றுன்; தவிக்கின்றுன். தன் மனைவி வருவதற்குள் கமலாவைத்தான் சரிப்படுத்தித் தன் மனோவேதனையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்கிற தடுக்கமுடியாத வெறி பிடித்துவிட்டதால் துடித்துக்கொண்டிருந்தான். கமலாவின் விடுதி ஜன்னலால் எட்டிப்பார்த்தான். கமலா தூங்காமல் புலம்புவதைக்கண்டு தானே நேரில் சென்று தேறுதல் கூறலாமா என்றும் எண்ணினன். ஆனல் மனது துணியவில்லை. ஏதோ பயம் வேறு நடுங்குகிறது.

மீண்டும் ஜன்னலால் எட்டிப் பார்த்தபோது கமலா அயர்ந்து தூங்குவதைக் கண்டதும் அவன் மனத்துடிப்பு அதிகரித்துவிட்டது. எப்படியாவது கமலாவை ஒரு...மாவது இட்டுவந்தால்தான் தன் உயிர் தரிக்கும்போல் தோன்றியதால் ஆத்திரத்தின் தைரியத்தால் மெல்லக்கதவை ஓசைசெய்யாமல் திறந்துகொண்டு உள்ளேவந்தான்.

மனச்சாட்சி ஒருபுறம் மிரட்டுகிறது. 'உத்தமியின் உள்ளமறிந்து நாம் இப்படிச் செய்வதா!' என்கிற நினைப்பும் தோன்றுமலில்லை. என்னை நம்பியவளை நான் படுகுழியில் தள்ளுவதா! என்றும் தோன்றுகிறது. எது தோன்றி என்ன பயன்?

பாம்பின் விஷம் ஏறுவதுபோல் இவன் துர்ப்புத்தியின் விஷம் ஏறி வதைத்ததால் திருடனைப்போல் அப்படியும் இப்படியும் பார்த்துக்கொண்டு அடிமேலடி வைத்துவந்தான். சாக்ஷாத் மகாலக்ஷ்மி

யைப்போல் தூங்கும் கமலாவின் தேஜஸ் இந்தமூர்க்கனின் ஆசைத் தீயைக் கிளறிவிடும் கோலாகவிருந்ததால் அப்படி இப்படி எட்டிப் பார்த்தபடியே அவள் முகத்திற்கு நேரே மகாபாவி கவிழ்ந்தான்.



அவன் இதயம் ஆயிரம் மைல் வேகத்தில் அடித்துக்கொள்கிறது. இந்த அக்ரமத்தை மனிதர்கள் வேண்டுமானல் பார்க்கவில்லை. கடவுள் கூடவா பார்க்காது தூங்குவார்? காலக்கொடுமையின் சோதனையில் அவருந்தான் தூங்குகிருரோ என்னவோ! யார் கண்டது?

சந்தோஷம்சொல்லமுடியாது.நான்பார்த்த வழக்குகள்போல் பல உங்கள் புத்தகங்களிலிருப்பது கண்டு ஆச்சரியப்படுகிறேன்.உங்கள் மோகினியும், நீங்களும் பல்லாண்டு வாழ்க. (27-1-42)

* * * * *

"உங்கள் மோகினி எங்கள் வீட்டில் சண்டையை உண்டாக்கிவிட்டது. மோகினி வந்தவுடன் கஸ்தூரிபாவைக் கண்டு உண்மையிலேயே பார்ப்பதாக எண்ணி வணங்கினேன். என் மனைவி வந்து லபக்கென்று பிடுங்கிக் கொண்டாள். அவள்மீது எனக்கு அசாத்ய கோபம் வந்தது. அவளிடமிருந்து என் தாயார் சடக்கென்று பிடுங்கிக்கொண்டாள். இப்படியாக சண்டையில் எங்கே கஸ்தூரிபா போட்டோ கிழிந்துவிடுகிறதோ என்று பயந்தேன். மோகினியின் உதயம் எங்கள் உள்ளத்தில் சந்தோஷ உதயத்தைச் செய்கிறது. அவள் பல்லாண்டு வாழ பரமனை வேண்டுகிறேன். எங்கள் வீட்டில் சண்டையை உண்டாக்கியதற்காக அபராதம் என் நண்பரின் சந்தாவை அனுப்பி இருக்கிறேன்" (9-1-42) ஸ்ரீ. வி. ர. ஸாரநாதன்.

* * * * *

"கலாநிலயத்தைப் படிக்கும்போது என் மனத்தில் கொந்தளித்து அலைமோதிய இன்ப உணர்ச்சிகளை அப்படியே உங்களுக்கு எழுதிவிட எண்ணினேன். எழுத உட்கார்ந்தால் ஒன்றுமே தெரியவில்லை. கலாநிலயத்தின்மூலம் நீங்கள் போதித்திருக்கும் நீதியும், அனுபவமும் தத்ரூபமாய் இருக்கிறது. கோயிலில் நான் புஷ்பம் கொடுத்த சம்பவத்தை நீங்கள் எங்கேனும் பார்த்திருப்பீர்களா என்றுகூட சந்தேகம் உண்டாகியது...குறை சொல்வதாகக் கோபிக்காதீர்கள். நெடு நாட்கள் கழித்துச் சந்திக்கும் நாயுடு நொடியில் மறைந்துவிடுகிறாரே! அவருக்கு ஆரம்பம் முதலே வேலை கொடுக்கக்கூடாதா? கொஞ்சம் வேலை இருப்பினும் சிரித்து வயிறு உப்பியது...உங்களுக்கு வாழ்த்துக் கூறுவதா! உங்கள் பேனாவுக்குக் கூறுவதா! சர்வமங்களமும் உண்டாவதாக. (23-1-42) ஸ்ரீ. ஆ. நி. சம்பத் குமார்.

* * * * *

"உங்கள் கலாநிலயத்தைப் படித்து நான் அடைந்த ஆனந்தம் கூற முடியாது. எனக்கு ஒரு மந்திர சக்தி தெரிந்திருந்தால் அந்த அபாக்ய வானுகிய தினகரனை ஒரே நொடியில் உயிர் போகச் செய்திருப்பேன்... குலசேகரனை குல நாசம் செய்திருப்பேன்...கலாநிலயத்தின் வசம் நான் கட்டுப்பட்ட நிலையில் பேசவே தெரியவில்லை. என் சிநேகிதர்களுக்காக 2 காப்பிகள் அனுப்பவும். (3-2-42) ஸ்ரீ. ஜே. ஸாமுவேல்.

* * * * *

"உண்மையைச் சொல்வதில் நான் தயங்குபவனல்ல. 'கலாநிலயம்' என்கிற விளம்பரத்தைக் கண்டதும் அந்த பெயரால் ஒரு ஸ்கூல் நடக்கும். அதிலுள்ள மாணவனே, மாணவியோ காதல் புரிவார்கள். பிறகு ஏதேதோ வரும். கல்யாணமாகும். இதுதான் கதை இருக்கும்;" என்று நான் எண்ணியதை என் பக்கத்துவீட்டுக்காரரிடம் தெரிவித்துப் பேசினேன். 14-ந் தேதியன்று அவர் வலுவில் என் வீட்டிற்கு வந்து, "ஓய். உம்முடைய யோசனை முற்றும் வீணாயிற்று. நீர் கட்டாயம் ஏமாந்துவிட்டதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். இதோ நான் படித்தாயிற்று. நீர் படியும்" என்றார். நான் முதலில் சற்று முடுக்காகத்தானிருந்தேன். பிறகு படித்துப் பார்த்து நான் ஏமாந்ததை அந்த நண்பரிடம் மட்டுமில்லை; உங்களிடங்கூட ஒப்புக்கொள்ளுகிறேன். கலாநிலயம், என் மனத்தில் ஆனந்த நிலயமாகத் தவழ்கிறது.சந்தா அனுப்பியிருக்கிறேன்." (20-1-42) ஜனுப் ஏ. மகமத்கனி.

* * * * *

சில சகோதரிகள் பிரத்யேகமாக தமது வந்தனத்தையும் பாராட்டுதலையும், நமது மோகினியின் எழுத்தாளர்களுக்குத் தெரிவிக்கும்படிக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதை நான் அவர்களிடமும் தெரிவித்துக் கொண்டு பகிரங்கமாகவும் தெரிவிக்கின்றேன். வை. மு. கோ.

14-11-96

Regd. No. M. 2210.

கருணாலயம்

"ஹா! இதென்ன பரிதாபக் காக்ஷி! எல்லோரும் குருடர்களா? ஆம்! அந்தகம்! அந்தகம்! எங்கும் அந்தகம். பிறந்த உலகத்தையும் தன்னைப் பெற்ற தாயையும் கண்டு களிக்கப் பாக்யம் செய்யாத அந்தகர்கள். இவர்கள் எங்கே செல்கிறார்கள்?... அழைத்துச் செல்வது யார்? இம்மாதிரி 10 அழகிய படங்கள் பல வர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன. கருணாலயத்தில் படித்து இன்புறுங்கள். விலை ரூ. 1.

ரூ. 1/12 அனுப்பினால் கருணாலயம், கலா நிலயம் (ரூ. 1/4) இரண்டும் தபால் செலவு இனாம்.

PRINTED & PUBLISHED BY V M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.